


புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 மே 08 - 14 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 05





## அகற்ற வேண்டிய அரசு

திருவாளர் நரேந்திரமோடியின் தலைமையிலான அரசு யாருடைய நலன் கருதி செயல்படுகின்றது என்ற வினாவிற்கு விடை தேடுவது கடினமான ஒன்றல்ல! பெரும் >>>



ப 02

## உலகாயதம்


ஒருவன் திதி கொடுப்பதற்காக சோற்று உருண்டையுடன் வெளியே வந்தான். அதனை கூரை மீது எறிந்தான். அதனைக் காகங்கள் உண்ணத் தொடங்கின. அந்தப் பக்கமாக ஒரு உலகாயதவாதி வந்தான். >>>



ப 05

## உயர்ப்புடன் வைத்திருக்கும்

மே தினம் உலகம் முழுவதுமுள்ள தொழிலாளர்கள் செய்த மாபெரும் தியாகங்களின் சகாப்தத்தை நினைவுபடுத்துகிறது; வரையறுக்கப்பட்ட நிச்சய ஊதியமின்றி, பணியிடத்துப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு என எதுவுமின்றி அவர்களை >>>



ப 03

## பெண்கள் மீதான சாதிவெறி, மதவெறி, உழைப்பு சுரண்டல் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு எதிராக திருச்சியில்




# இளம் பெண்கள்

# மாநில மாநாடு



ஜி.சங்கீதா



ஆ.கௌரி



கலை.அஸ்வினி



யோ.கற்பகம்



ஆர்.பவி தாரணி

**அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் இளம் பெண்கள் மாநில மாநாடு ஏப்.30-ல் திருச்சியில் எழுச்சியோடு நடைபெற்றது.**

மாநாட்டிற்கு தேசியக்குழுஉறுப்பினர்கள் கலை. அஸ்வினி, ஆர்.பவிதாரணி, மாநிலக்குழு உறுப்பினர் ஆ.கௌரி ஆகியோர் தலைமைக்குழுவாக செயல்பட்டனர்.

திருச்சி மாநகர் மாவட்ட செயலாளர் எம்.செல்வக் குமார் வரவேற்புரையாற்றினார்...

மாநிலக்குழு உறுப்பினர் ர.ராஜேஸ்வரி அஞ் சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். முன்னதாக திருச்சி மத்திய பேருந்து நிலையத்தில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மாநாட்டு நுழைவாயில் நடைபெற்ற பேரணியில் 500க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் கலந்து கொண்ட பேரணி துவங்கியது. பாலின சமத்துவம் நிலை நாட்டுவோம் என்ற முழக்கத்தை வலியுறுத்தி கோரிக்கை பதாகைகளுடன் விண்ணை முட்டும் அளவிற்கு முழக்கங்கள் எழுப்பினர். தஞ்சை தமிழ்பல்கலை கழகத்தை சேர்ந்த வெய்யில் பறை இசைக்குழுவின் பறைநடன முழக்கத்துடன் மாநாட்டுக்கொடியினை கேரள மாநிலம் இடுக்கி மாவட்ட ஊராட்சிக்குழு தலைவரும், அனைத் திந்திய இளைஞர் பெருமன்ற கேரள மாநிலக்குழு உறுப்பினருமான பவ்யா கண்ணன் ஏற்றிவைத்து துவக்கவுரையாற்றினார்.

திருச்சி மாநகர துணைமேயர் ஜி.திவ்யா அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாநிலப் பொதுச் செயலாளர் ஜி.மஞ்சுளா "சோசலிச பெண்ணியம்" என்ற தலைப்பிலும், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநில மகளிர் குழு ஒருங் கிணைப்பாளரும், எழுத்தாளருமான முனைவர். அகிலா கிருஷ்ணமூர்த்தி "நுகர்வு கலாச் சாரமும் விளிம்பு நிலைப்பெண்களின் கள எதார்த் தமும்" என்ற தலைப்பில் கருத்துரை வழங்கினர்.

மாநாட்டு கோரிக்கைகளை விளக்கி மன் னார்குடி ஒன்றிய துணைப் பெருந்தலைவர் வனிதா அருள்ராஜன், திருச்சி கிருஷ்ணசமுத்திரம் ஊராட்சிமன்ற தலைவர் எஸ்.ரம்யா, தேன் கனிக்கோட்டை ஆசிரியர், ட.சூர்யா கூத்தைப்பார், பேரூராட்சி கவுன்சிலர் தோழர்.வை.சூர்யா, திருவாரூர் பூசலாங்குடி ஊராட்சிமன்ற தலைவர் ஆர்.சுபிதா ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர்.

கூத்தாநல்லூர் நகர்மன்ற கவுன்சிலர் தனலட்சுமி சிவதாஸ், ஏத்தங்குடி ஊராட்சிமன்ற தலைவர் ராஜேஸ்வரி பன்னீர் செல்வம், கோவை ஆனந்தி, சேலம் கோ.செங்கொடி, ஆர்.சுகந்தி திருச்சி மாநகர், அனுசியா செல்வக்குமார், நாமக்கல் டி.சம் பூர்ணம், நாகை பி.அக்சயா, மதுரை மாநகர் க.ஈஸ் வரி, காஞ்சிபுரம் எம்.வான்மதி, கடலூர் ராஜ குமாரி, திருவாரூர் பா.சங்கவி, கே.கண்மணி, புதுக் கோட்டை ஆர்.நித்தியாதேவி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்....

மாநாட்டில் 30பேர் கொண்ட ஒருங் கிணைப் புக்குழு தேர்வு செய்யப்பட்டது.

**இளம்பெண்கள் மாநில ஒருங்கிணைப் பாளராக கலை. அஸ்வினி, இணை ஒருங்கிணைப் பாளர்களாக ஜி.சங்கீதா, ஆ.கௌரி, யோ.கற்பகம், ஆர்.பவி தாரணி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.**

திருச்சி புறநகர் மாவட்டதுணைச்செயலாளர் எஸ்.ராஜ்குமார் நன்றியுறையாற்றினார்.

மாநாட்டுக்கான ஏற்பாடுகள் திருச்சி மாநகர் மற்றும் புறநகர் மாவட்டக்குழுக்கள் சிறப்பான முறையில் செய்திருந்தனர்.

இளம் பெண்கள் மாநில மாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### பாலியல் வழக்குகள்:

பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான லட்சக் கணக்கான பாலியல் வன்முறை வழக்குகள் விசாரணை முடியாமல் நீதிமன்றங்களில் தேங்கி உள்ளன. ஊடகங்களின் கவனத்தை பெருகின்ற வழக்குகளில் கூட, ஒரு சில வழக்குகள் மட்டுமே விரைந்து முடிக்கப்படும் நிலை உள்ளது. பாலியல் வழக்குகளில் காவல்துறை கட்டாயமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்ணை 24மணி நேரத்திற்குள் தேர்ந்த அரசு மருத்துவரிடம் பரிசோதனை செய்ய வேண்டும். 2 மாதத்துக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்ற வழிகாட்டு நெறிமுறைகள் இருப்பினும் இவை எவையும் முறையாக பின்பற்றப்பட வேண்டும்.

தமிழகத்தில் குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை 2019ம் ஆண்டை விட 2020 ல் 28.8சதம் உயர்ந்திருக்கிறது. ஆனால் பொதுவாகவே பாலியல் வழக்குகளில் 30சதத்திற்கும் குறைவானவர்களே தண்டனை பெறுகிறார்கள். இது குற்றவாளிகளுக்கு மீண்டும் குற்றமிழைப்பதற்கான தைரியத்தை தருகிறது. பாலியல் வழக்குளில் விரைந்து விசாரணை முடித்து குற்றவாளிகள் அனைவருக்கும் தண்டனை கிடைத்திட வேண்டும்.

பணியிடங்கள் மற்றும் பள்ளி, கல்லூரிகளில் பெண் கள் மீது பாலியல் வன்முறை மற்றும் பாலியல் சீண்டல்கள் ஏற்படுவதை தடுப்பதற் காக பணியிடத்தில் பாலியல் வன்முறை (தடுப்பு, பாதுகாப்பு,குறைதீர்ப்பு) 2013 சட்டம் நிறைவேற் றப்பட்டு 9வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் அச்சட்டம் முறையாக அமல்படுத்தப்படவில்லை. இச்சட்டத்தின் படி அனைத்து பணிடங்களிலும் பாலியல் புகார் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு நிறுவனமும் தாங்கள் அமைத்துள்ள பாலியல் புகார் குழுக்கள் மற்றும் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் ஆகியவற்றை பற்றிய விவரங்களை தொழிலாளர்கள் அறியும் வகையில் காட்சிபடுத்த வேண்டும்.

### அறிவியல் ரீதியான பாலியல் கல்வி:

ஆண் குழந்தைகள் ஒருவிதமாகவும் பெண் குழந்தைகள் வேறு விதமாகவும் சமுகம் மற்றும் குடும்பத்தால் வளர்த்தெடுக்கப்பட்டு உருவாக் கப்படுகிறார்கள். ஆண், பெண் குழந்தைகள் நட்பாக பழகுவது ஒரு குறிப்பிட்ட வயதிற்கு மேல் நம் சமுகத்தில் தடுக்கப்படுகிறது. அதே சமயத்தில் பாலியல் குறித்து பல தவறான தகவல்களை இணையதளங்களில் இருந்து இத்தலைமுறை குழந்தைகள் பெறுகிறார்கள். வளர்ப்புமுறை, குழந்தைகள் ஒருவரை ஒருவர் புரிந்துக் கொள்ளும் வாய்ப்புகள் தடுக்கப்படுதல், பாலியல் குறித்த தவறான தகவல்கள், பெண்களை பண்டமாக சித்தரிக்கும் சினிமா, வியாபார நோக்கிலான விளம்பரங்கள் என அனைத்துமே பெண்களை ஆண்களின் பாலியல் பண்டமாக்கும் கருத்தியலையே முன்நிறுத்துகின்றன.

இச்சூழலில் பெண்களின் உடல் மற்றும் உணர்வு சார்ந்தவற்றை அறிவியல்பூர்வமாக விளக்கும் பாலியல் கல்வியை இளம் தலைமுறைக்கு அளிப்பது அவசியம்.

### ஆணவப் படுகொலைக்கு தனிச்சட்டம்

2003 ஆம் ஆண்டு கண்ணகி முருகேசன் தொடங்கி இளவரசன், கோகுல்ராஜ், சங்கர் என இன்று வரை சாதி ஆணவ படுகொலைகள் தமிழகத்தில் தொடர்ச்சியாக நடந்தேறி வருகின்றன. தாழ்த்தப்பட்ட சமூகத்தை சார்ந்ந இளைஞரும் உயர்சாதியை சார்ந்த பெண்ணும் செய்யும் காதலை சமூகமும் குடும்பமும் ஏற்க மறுக்கிறது. பிரிக்க நினைக்கிறது. குடும்பத்தை மீறி அக்காதலர்கள் திருமணம் செய்ய முயலும் போதோ அல்லது திருமணம் முடிந்தநிலையிலும் கூட அத்திருமணம்

தொடர்ச்சி 5ம் பக்கம் >>

## எதிரும் புதிரும்






# அகற்றப்பட வேண்டிய அரசு



**பேரன்புமிக்க தோழர்களே!**

**திருவாளர் நரேந்திரமோடியின் தலைமையிலான அரசு யாருடைய நலன் கருதி செயல்படுகின்றது என்ற வினாவிற்கு விடை தேடுவது கடினமான ஒன்றல்ல !**

பெரும் நிதி பலத்தோடும், தங்களின் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஊடக பலத்தோடும் தங்களை இரண்டாம் முறையாக அரியணையில் ஏற்றி வைத்து அழகு பார்க்கும் பகாசுர கம்பெனிகளின் மனம் கோணாது, கோடிகோடியாய் பல்லாயிரக் கோடிக்கணக்கான ரூபாய் இலாபம் ஈட்ட அல்லது மக்களின் செல்வத்தை கொள்ளை கொள்ள சட்டபூர்வமாக அனைத்துவித உதவிகளையும் இணக்கமான முறையில் வழிவகை செய்து வருவதுதான் மோடியின் அரசு.

நாட்டில் வாழும் பெரும்பகுதி மக்களான தொழிலாளர்கள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்கள், அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, பட்டியலின மக்கள் என எவர் குறித்தும் கவலை கொள்ளாதது மட்டுமல்ல, அவர்கள் சுமக்க முடியாத அளவிற்கு சுமைகளை மேலும் மேலும் சுமத்தி, அதன் விளைவாக அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை கண்டு மனம் மகிழும் நபரான மோடிதான் நாட்டின் பிரதமர்.

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மருந்து மாத்திரைகள், சாலை கட்டணம் என உயர்த்தினார்கள்.

இவற்றின் கட்டணங்கள் அதிகரிப்பின் காரணமாக அத்தியாவசியப் பண்டங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலைகளும் விண்ணைத் தொட்டு நிற்கின்றன.

ஒவ்வொருவரின் அன்றாட வருமானம், அல்லது மாத வருமானம் உயர வழியில்லை. அது இருந்த நிலையில் இருக்கின்றது.

ஆனால் வருமானத்தைவிட செலவுகள் ஒவ்வொரு நாளும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது.

வருமானம் உயர வழியில்லை. செலவுகள் அதிகரிக்கின்றது. எப்படி வாழ்வது? எவ்வாறு வாழ்வது? ஒவ்வொருவரின் வாழ்வாதாரம் நிலைகுலைந்து நிற்கின்றது.

கடன் சுமை அதிகரிக்கின்றது. மீளமுடியாத நிலையில், வறுமையின் காரணமாக, வேலையின்மை காரணமாக மக்கள் தற்கொலைக்கு தள்ளப்படுகிறார்கள் !

நாட்டை ஆள்பவர் ஒவ்வொரு குடிமகனின் வாழ்க்கைக்கும், உயர்வுக்கும், உயிருக்கும் பாதுகாப்பு அரணாக விளங்கிட வேண்டிய அரசு, மக்களை தற்கொலை பாதைக்கு தள்ளுவதை என்னவென்று கூற !

மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் விளையாடும் அரசாக மோடி அரசு உள்ளது.

வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தும் எரிவாயு உருளையை ரூ.50 உயர்த்தி தாய்மார்களின் கண்ணீரை பெருக்கெடுத்து ஓடச் செய்த ஒன்றிய அரசு.

**வர்த்தக ரீதியாக வினியோகம் செய்யும் எரிவாயு விலையை கடந்த ஏப்ரல் மாதத்தில் ரூ.268.50 என ஒரே மூச்சில் விலையை உயர்த்திய ஒன்றிய அரசு, அது போதாது என்று, மே தின பரிசாக மேலும் ரூ.102.50 என விலையை உயர்த்தி உள்ளது.**

**வர்த்தகரீதியாக வினியோகம் செய்யும் சிலிண்டர்களை நம்பித்தான் ஹோட்டல்கள், சிரிய ஹோட்டல்கள், டீக்க டைகள் நம்பியுள்ளன. ஏப்ரல், மே இரு மாதங்களில் மட்டும் ரூ.371.00 விலை உயர்த்தப்பட்டுள்ளது.**

**இதன் காரணமாக இட்லி, தோசை, பூரி, பொங்கல், உப்புமா, சாப்பாடு, காபி, டீ என அனைத்தின் விலைகளும் உயர்கின்றன.**

இதன் காரணமாக பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப் படுகின்றனர். பொதுமக்கள் பாதிப்பு குறித்து கிஞ்சித்தும் கவலை கொள்ளாத அரசை என்ன அரசு என்று கூறுவது?

மேலும் அப்பளம் உள்ளிட்ட 143 பொருட்களுக்கு ஜிஎஸ்டி வரி 18%லிருந்து 28% மாக உயர்த்தப்பட உள்ளதாக அபாய அறிவிப்பு வந்துள்ளது/

இவ்வாறாக சாமானிய மக்களின் வாழ்க்கையை நாசமாக்கும் ஓர் அரசை ஏன் அனுமதிக்க வேண்டும்?

அரசு என்பது மக்களுக்கா? அல்லது விரல் விட்டு எண்ணக்கூடிய சில கார்ப்பரேட் நபர்களுக்கா? என்ற வினாவிற்கு பதில் தேவை !

இனியும் மோடியின் தலைமையிலான வகுப்புவாதவெறி பிடித்த பாஜக அரசை நாம் அனுமதிக்க முடியாது; அனுமதிக்கக் கூடாது !

“சர்வாதிகார, பாசிசத் தன்மை கொண்ட மோடி அரசே வெளியேறு” என முழங்க இனியும் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

அரசியல் ரீதியாக மோடியின் அரசை வெளியேற்ற ஆயத்தமாக வேண்டும் !

காலதாமதம் கூடாது. இன்றே, இப்போதே களம் காண நாம் ஆயத்தமாக வேண்டும்.

குறிப்பாக நடைபெறவுள்ள இடைநிலை, மாவட்ட மாநாடுகளில் நாம் திட்டமிட வேண்டும்.

ஆகஸ்ட் திங்கள் 6, 7, 8 மற்றும் 9ஆம் தேதிகளில் திருப்பூர் மாநகரில் நடைபெற உள்ள மாநில 25 வது மாநாடு வெற்றிகரமாக நடைபெற்று, நிறைவு நாளான ஆகஸ்ட் 9ஆம் நாள் நாம் நடத்தவுள்ள மாபெரும் பேரணி தமிழகத்தை திரும்பிப் பார்க்கக் கூடிய பேரணியாக அமைந்திடல் வேண்டும். சீருடை அணிந்த, பயிற்சி பெற்ற தொண்டர்கள் பல்லாயிரம் பேர் பங்கேற்க வைக்க திட்டமிட வேண்டும்.

பல்வேறு மாவட்டங்களில் தொண்டர்களுக்கான பயிற்சி முகாம்கள் நடந்து வருகின்றன. அனைத்து மாவட்டங்களும் இம்முயற்சியில் ஈடுபட வேண்டும்.

ஆகஸ்டு 9 ஆம் நாள் விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிகுந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நாள் என்பதனை நாம் நன்கறிவோம்.

ஆம் அன்றைய நாளில்தான் வெள்ளையனே வெளியேறு என்று முழக்கமிட்ட நாளாகும்.

ஆம் – நாம் ஆகஸ்ட் 9–ல் மக்கள் விரோத மோடி அரசே வெளியேறு என்ற முழக்கத்தை முன் வைப்போம்.

விண்ணதிர எழுப்பப்படும் முழக்கம் நாடு முழுவதும் ஒலிக்கட்டும் !

அணிதிரள ஆயதமாவீர். அடுத்த வாரம் சந்திப்போம். வணக்கம்.

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**














- பேரா.கதிரவன்

# தேசிய கல்விக் கொள்கையும் - தமிழக அரசும்




**தமிழ்நாட்டிற்கு என புதிய கல்விக் கொள்கை வகுக்க கல்வியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உள்ளடக்கிய குழுவை தமிழக அரசு தற்போது அறிவித்துள்ளது. இக்குழுவின் நோக்கம் தமிழ்நாட்டின் வரலாற்றை வருகின்ற காலத்திற்கு ஏற்ப மாநிலத்திற்கு என்று தனித்துவமான கல்விக் கொள்கையை உருவாக்குவதாகும். இதன்படி அனைத்து மாணவர்களும் தொடக்கக் கல்வியிலிருந்து உயர் கல்வி வரை செல்வதை உறுதிப்படுத்துவதற்கான கொள்கையினை உருவாக்குவதற்காக அமைக்கப்பட்டதாகும்.**

இதன்மூலம் தமிழக புவியியல் அமைப்பு, தட்பவெப்பநிலை, வரலாறு போன்றவற்றை கணக்கில் கொண்டு புதிய கல்வித் திட்டங்களை உருவாக்க முடியும். பள்ளிக்கல்வி மற்றும் உயர் கல்வியைப் பொருத்தவரை மாநில அரசு அனைத்து மாவட்டங்களிலும் அரசு பள்ளிகளை நடத்தி வருகிறது. ஒன்றிய அரசு பள்ளிக் கல்வியில் பெரிதாக எந்தவித பங்கெடுப்பும் செய்வதில்லை. குறிப்பாக சில சிறப்பு பள்ளிகளை இயக்குவதைத் தவிர. ஆனால், ஒன்றிய அரசு கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களை முழுவதுமாக தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. குறிப்பாக பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் ஆசிரியர்களுக்கான தகுதி நிர்ணயம் செய்வது மற்றும் ஆசிரியரல்லாத ஊழியர்களுக்கான தகுதிகளை நிர்ணயம் செய்வது, ஆசிரியர்களின் ஊதியத்தை நிர்ணயம் செய்வது மற்றும் பாடத்திட்டங்களை வகுப்பது போன்றவை பல்கலைக்கழக மானியக் குழுவின் கட்டுப்பாட்டில் வருகின்றது.

மாநில அரசு பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் ஊதியத்தை வழங்குவது மற்றும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத ஊழியர்களின் நடத்தை விதிகளை மாநில அரசு தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. அதிலும் குறிப்பாக கல்லூரி ஆசிரியர்கள் மாநில அரசின் அரசு ஊழியர்களாகவும் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மாநில அரசின் கட்டுப்பாட்டில் வராமல் பல்கலைக்கழகத்தின் ஊழியர்களாகவும் இருந்து வருகின்றனர். தற்போது தமிழக அரசு அறிவித்துள்ள இந்த கல்வி கொள்கைக்கான குழு எந்தவிதமான திட்டங்களை உருவாக்க போகின்றது என்பதைப்பற்றிய ஒரு தெளிவான பார்வை நம்மிடம் இல்லை. ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பல்கலைக்கழக மானியக் குழுவின் பொறுப்புகளை மாநில அரசு எடுத்துக் கொள்ளப் போகிறதா என்று தெரியவில்லை.

தமிழகத்திற்கு என்று தனியான கல்வியை உருவாக்க முடியுமா என்பது கேள்விக்குறியான ஒன்று, ஏனென்றால் இன்று வரை கல்வி மாநில பட்டியலில் இல்லை. அது முழுவதுமாக ஒன்றிய அரசின் ஒத்திசைவுப் பட்டியலில் உள்ளது. ஆக நாம் எந்தவிதமான மாற்றங்களை கொண்டு வந்தாலும் பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒப்புதல் இல்லாமல் உயர்கல்வியில் கடுகளவு மாற்றத்தை கூட நம்மால் கொண்டு வர முடியாது.

கடந்த மாதம் பல்கலைக்கழக மானியக் குழுவினால் 2015க்கு பிறகு அண்ணாமலை பல்கலைக்கழகத்தின் மூலமாக வழங்கப்பட்ட தொலைதூர கல்வி மூலம் பல்கலைக்கழக மானியக் குழுவிடம் அனுமதி பெறாமல் வழங்கிய பட்டப்படிப்புகள் செல்லாது என்று அறிவித்துள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை தமிழக அரசு மாநில பல்கலைக்கழகமாக அறிவித்த பிறகு, தமிழக அரசால் வழங்கப்பட்ட பட்டப்படிப்புகள் செல்லாது என்று பல்கலைக்கழக மானியக்குழு அறிவித்துள்ளது விந்தையிலும் விந்தையாகும். உயர் நீதிமன்றத்திற்கோ அல்லது உச்ச நீதிமன்றத்திற்கோ சென்றாலும் இதற்கு தீர்வு என்பது கிடையாது. பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிவிப்பே இறுதி செய்யப்படும் என்பதே உண்மையாகும், ஆகையால் நாளை நாம் எந்த வித மாற்றங்களை அறிவித்தாலும் அந்த மாற்றங்கள் பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒப்புதல் பெற்ற பிறகே நம்மால் செயல்படுத்த முடியும் என்ற நிலையில் நாம் எடுக்கின்ற முயற்சிகள் வீணாகிவிடும்.

கடந்த மாதம் தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில், பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிவுறுத்தலின்படி, வரப்போகின்ற கல்வியாண்டில் இளங்கலை பட்டப்படிப்பில் எப்பொழுது வேண்டுமானாலும் கல்லூரியில் சேரலாம் அல்லது கல்லூரியை விட்டு வெளியேறலாம்.

**இளங்கலை வகுப்பு மூன்று வருட பட்டபடிப்பு அல்லது நான்கு வருட ஹானர்ஸ் படிப்பும் வழங்கப்படும் என்பதும், எம் பில் பட்டப்படிப்பு நிரந்தரமாக கைவிடப்படும் என்பதும், முனைவர் பட்டப் படிப்பிற்கு முதுநிலை பட்டப்படிப்பு தேவையில்லை என்பதையும் அறிவித்துள்ளது. இப்பொழுது அறிவிக்கப்பட்ட தமிழக கல்விக்குழு இத்திட்டங்களை உள்வாங்கிக்கொண்டு இதை அமல்படுத்த போகின்றதா? நடைமுறைப்படுத்த போகின்றதா? அல்லது இதற்கு மாற்றாக வேறு திட்டங்களை வகுக்க போகின்றதா? அல்லது இதை முழுவதுமாக எதிர்க்க போகின்றதா? என்பது கல்வியாளர்களுக்கே வெளிச்சம்.**

தமிழகத்திற்கு என்று தனியான உயர்கல்வி மானிய குழுவை உருவாக்கி, பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒப்புதல் தேவையில்லை என்ற நிலையை உருவாக்கினால், இக்குழுவை உருவாக்கியதன் பயன் மாணவர்களுக்கு சென்றடையும்.

அரசியலமைப்பு சட்டத்தில் அட்டவணை 7ல் மத்திய பட்டியல், மாநிலப் பட்டியல் மற்றும் பொது பட்டியல் ஆக 3 பட்டியல்கள் இடம்பெற்றுள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 7ன் கீழ் மத்திய அரசு, மாநில அரசின் அதிகார எல்லைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரிவின் படி, ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அரசுத்துறைகளின் அதிகார முடிவுகளை மாநில அரசோ அல்லது மாநில அரசின் கீழ் இருக்கும் துறைகளின் அதிகார முடிவுகளை ஒன்றிய அரசோ மாற்றவோ, திருத்தவோ அல்லது நீக்கவோ அதிகாரம் அளிக்கப்படவில்லை.

இந்த பட்டியலில் ஏதேனும் திருத்தமோ அல்லது நீக்கமோ கொண்டு வருவதாக இருந்தால் (சரத்து 368ன் படி) அது முதல் படியாக நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வரவேண்டும். அந்த சட்டம் நாடாளுமன்றத்தில் இரு அவைகளில் உள்ள மொத்த உறுப்பினர்களில் 50 சதவிகிதத்திற்கு மேல் ஆதரவு பெறவேண்டும் மற்றும் அவையில் கலந்துகொண்ட உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதி என ஆதரவு பெறவேண்டும். இதோடு மட்டுமன்றி, நாடாளுமன்றம் சட்டம் ஏற்புடையதாகும் வகையில் இந்தியாவில் உள்ள ஒட்டு மொத்த மாநிலங்களின் 50 சதவிகித மாநிலங்களில் அச்சட்டம் அந்த மாநிலங்களின் சட்டமன்றத்தில் ஆதரவை பெற்று நிறைவேற்றி இருக்க வேண்டும். இதன்படி நாடாளுமன்றத்திலும் மற்றும் மாநில சட்ட மன்றங்களிலும் ஆதரவைப் பெற்றிருந்தால் மட்டுமே இச்சட்டம் அதாவது மத்திய பட்டியல் மாநில பட்டியல் மற்றும் பொது பட்டியல் ஆகியவை அட்டவணை 7 ல் திருத்தம் மேற்கொள்ள முடியும். இதன்படி சட்டம் இயற்றாமல், அட்டவணை7ல் எந்த மாற்றத்தையும் கொண்டு வர இயலாது. கல்வியை பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டுமென்றால் ஒன்றிய அரசும், மாநில அரசுகளும் ஒருமித்த கருத்தில் கொண்டு சட்டத்திற்கு ஆதரவு பெற்றால் மட்டுமே அட்டவணை 7 ல் உள்ள கல்வியை நாம் மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வர இயலும். கல்வியை மாநிலப் பட்டியலுக்கு அல்லது ஒன்றிய பட்டியலில் மாற்றம் செய்வதால் மாநிலத்தின் இறையாண்மையில் ஒன்றிய அரசோ அல்லது ஒன்றிய அரசின் இறையாண்மையின் மாநில அரசோ தலையிடுகிறது என்று நாம் கருதும் இதில் எந்தவித உண்மையும் இல்லை.

1950 ல் கல்வி என்பதானது மாநிலப் பட்டியலில் இருந்தது. 1976இல் அரசியல் சட்டம் 42 ஆவது திருத்தத்தின் மூலம் மாநிலப் பட்டியலில் இருந்த கல்வி பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. அன்று முதல் இன்றுவரை பொது பட்டியலில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் 1975 முதல் 1977 வரையிலான எமர்ஜென்சி காலத்தில் இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது, கல்வி, விளையாட்டு, வனம் மற்றும் வன விலங்குகள், பறவைகள் பாதுகாப்பும் பொதுப் பட்டியலுக்கு மாறி பல்வேறு சட்டங்கள் நெருக்கடி நிலைக் காலத்தில் கொண்டு வரப்பட்டு, மாநில அரசுகளின் அதிகாரம் மத்திய அரசின் பொது பட்டியலுக்கு மாற்றப்பட்டது.

1976க்கு முன்பு கல்வி மீதான அனைத்து முடிவுகளும் எடுக்க ஒவ்வொரு மாநிலத்திற்கும் உரிமை இருந்தது, உதாரணமாக, பாடத் திட்டம் வகுப்பது, பாடத் தொகுப்பு வகுப்பது மற்றும் மாணவர் சேர்க்கை பற்றி முடிவெடுக்க மாநிலங்களுக்கு உரிமை இருந்தது. மேலும் உயர்கல்வியை ஒருங்கிணைப்பது மற்றும் உயர் கல்வியில் தரத்தை பராமரிப்பது மட்டுமே ஒன்றிய அரசிடம் இருந்தது. பொதுப்பட்டியலில் இருக்கும் துறைகளின் முடிவுகளை மாநில அரசும் ஒன்றிய அரசும் சேர்ந்து கலந்து ஆலோசித்து முடிவு எடுப்பதற்கான சாத்தியகூறுகள் இருந்தது. ஆயினும் மாநில அரசோ அல்லது ஒன்றிய அரசின் முடிவுகளில் ஏதாவது வேறுபாடு இருந்தால் ஒன்றிய அரசின் முடிவே இறுதியானது என்பதற்கான கூடுதல் அதிகாரம் அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப்பட்டியலில் ஒன்றிய அரசும், மாநில அரசும் சட்டமியற்றும் அதிகாரம் உள்ளது. ஆனால், மாநில அரசு இயற்றும் சட்டத்திற்கு முரணாக மைய அரசின் சட்டம் முரணாக அல்லது வேறுபட்டதாக இருக்குமேயானால் அல்லது மைய அரசு மாநில அரசால் இயற்றப்படும் சட்டத்திற்கு அங்கீகாரம் கொடுக்கவில்லையென்றால் மைய அரசால் இயற்றப்பட்ட சட்டமே அமல்படுத்தப்படும். ஆக அதிகார மாற்றத்திற்கு இரு அரசுகளுமே பொறுப்பு என்பதே அரசியல் சாசனம். மாநில அரசின் அதிகார பறிப்பிற்கு மாநில அரசுகளும் பொறுப்பு என்பதை கவனிக்க வேண்டும். நிலைமை இவ்வாறு இருக்க, 1976ல் மாநில பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வி என்ற பொருளானது இன்றுவரை மாநில அரசுகள் தமிழ்நாடு உட்பட, கண்டுகொள்ளாமல் இருக்கின்றன.

அரசியல் சட்டப்படி திருத்தம் மேற்கொள்ளாமல் கல்வி சம்பந்த உரிமையில் ஒன்றிய அரசு மாநில அரசின் இறையாண்மையில் தலையிடுகிறது என்பது அரசியல் சாசன முரணாகும். சட்டம் என்பது சட்டமே.

பொதுப்பட்டியில் உள்ள கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மீண்டும் கொண்டுவர சட்டத்திருத்தம் கொண்டு வருவதைத் தவிர வேறு வழியில்லை.

உரிய சட்ட திருத்தம் கொண்டு வந்து கலாச்சார மாண்பை காக்கும் மாநில உரிமைகளை மீட்டெடுப்போம்.

தொடர்புக்கு: **8667338638**

---

### நுகர்பொருள் சேமிப்பு நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு

# ஒப்பந்தப்புள்ளி கோரும் முடிவை கைவிடுக

## ஏஐடியூசி கோரிக்கை

ஏஐடியூசி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக தொழிலாளர் சங்க மாநில பொதுச்செயலாளர் சி.சந்திரகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கி வருகின்ற திருவாரூர் மாவட்டம் குடவாசல் மற்றும் கோவிலூர் கிடங்குகள், திறந்தவெளி சேமிப்பு நிலையங்களுக்கு சுமை தூக்குவோருக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி திருவாரூர் மண்டல மேலாளரால் நாளிதழில் அறிவிப்புகள் வந்திருக்கின்றன.

22.4.22 அன்று இறுதிபடுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு தலையிட்டு உடனடியாக இதனை தடுத்து நிறுத்த வேண்டும் என ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

சுமை தூக்கும் தொழிலாளர்கள் பணிக்கு ஒப்பந்த முறை அமல்படுத்துவது, தற்போது வேலையில் உள்ள நூற்றுக்கணக்கான சுமை தூக்கும் தொழிலாளர்களின் வேலையைப் பறித்து, வாழ்வாதாரத்தை கேள்விக்குறியாக்கும் செயலாகும்.

மிகப் பொறுப்பான மக்கள் பணியை செய்து வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தை சீரழிக்கும் நடவடிக்கையாக இது அமைந்துவிடும்.

குறிப்பாக சுமை தூக்கும் தொழிலாளர்கள் குறைந்த கூலி, காலதாமதமாக வழங்கப்படுகின்ற நிலையிலும் தங்களது கடமைகளை சிறப்பாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்தக்காரர்களிடத்தில் இதனை கொடுத்தால் இந்த பணிகளில் பொறுப்பின்மை இருக்குமே தவிர தொழிலாளர்களுக்கோ நிறுவனத்திற்கோ பயனளிக்காது.

எனவே தொழிலாளர்களுக்கு எதிரான பொதுத்துறையை சீரழிக்கின்ற சுமை தூக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரும் முடிவை உடனடியாக நுகர் பொருள் வாணிபகழக நிர்வாகம் கைவிடச்செய்ய வேண்டும் என தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 05

## மருத்துவ அறிவியலில் கலக்கப்படும் சனாதன மூடத்தனம்

எல்லாவற்றிலும் இந்துத்துவக் கருத்தியலை நுழைக்கும் அரசியலில் அடுத்த நகர்வை ஆர்எஸ்எஸ் ஆரம்பித்துள்ளது. நவீனமருத்துவம்அறிவியலின் துணையோடு எண்ணிப் பார்க்கவே இயலாத வளர்ச்சியை அடைந்து வருகிறது. அதன் மாணவர்கள் உறுதி மொழியில், மூடத்தனங்களை விதைத்து வளர்க்கும் சனாதனத்தை ஊற்றிக் கலக்குகிறது ஆர்எஸ்எஸ்.

முதல்முறையாக மருத்துவருக்கான வெள்ளை கோட்டு அணியும் விழாவில், பாரம்பரியமான உறுதிமொழியை மாணவர்கள் ஏற்பார்கள். மருத்துவத்தின் தந்தை என்று கருதப்படும் கிரேக்கரான ஹிப்போகிரேட்டஸ் காலத்து உறுதிமொழி அது.

'நமது முன்னோர்களால் உருவாக்கப்பட்ட ஆயுர்வேதத்தின் முன்னோடியான சரக மகரிஷி சபதத்தை உறுதிமொழியாக எடுக்க வேண்டும் என்று ஆர்எஸ்எஸ் மருத்துவப் பிரிவு பொதுச் செயலாளர் டாக்டர் பிரஷாந்த் சவுதாரி என்பவர் பேசினார்.

தேசிய மருத்துவ ஆணையம் பிப்ரவரி 7ஆம் தேதி அன்று நடத்திய கூட்டத்தில், இனி ஹிப்போகிரேட்டஸ் உறுதிமொழியை அல்ல, சரக மகரிஷி சபதத்தை தான் இனி வாசிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இதனை அறிந்த தமிழ்நாடு மாநில சுகாதாரத் துறைச் செயலாளர் பிப்ரவரி 10ஆம் தேதியன்று அனைத்து மருத்துவக் கல்லூரி முதல்வர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். தேசிய மருத்துவ ஆணையத்தின் ஆணைகள் என்ற பெயரில் ஏதேனும் வருமாயின், துறையிடம் கேட்டுத் தெளிவு பெறவேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இந்திய நாடாளுமன்றத்தில் மார்ச் 25ஆம் தேதி கேள்வி எழுப்பியபோது, பழைய உறுதி மொழியை மாற்றும் எண்ணம் எதுவும் இல்லை என்று ஒன்றிய மருத்துவ சுகாதார துணை அமைச்சர் டாக்டர் பாரதி பிரவீண் பவார் பதில் அளித்தார். ஆனாலும் மார்ச் 31 ஆம் தேதி தேசிய மருத்துவ ஆணையம் "மகரிஷி சரக் சபத்"தை வெளியிட்டுள்ளது.

சரக மகரிஷி சபதம் என்பது என்ன? "மருத்துவப் பணியில் ஈடுபடும் நான் முடி வெட்ட மாட்டேன், தாடி வளர்ப்பேன், புலால் உண்ண மாட்டேன், பிராமணர்கள் மற்றும் பசுக்களை வாழ்த்தி வணங்குவேன். மன்னரால் வெறுக்கப்படுவாருக்கோ அல்லது மன்னரை வெறுப்பவர்களுக்கோ எந்த சிகிச்சையும் தரமாட்டேன். கீழ்நிலையில் உள்ளவர்கள், இறக்கும் தருவாயில் இருப்பவர்கள், கணவர் அல்லது பாதுகாவலர் இல்லாத பெண்கள் ஆகியோருக்கு சிகிச்சை அளிக்க மாட்டேன். வைத்தியர் சொல்லித்தரும் குருவின் மகன் போலவும், அடிமையாகவும் இருப்பேன்" என்று உறுதி மொழியில் கூறப்படுகிறது.

"பெண் மருத்துவம் கற்க கூடாது; ஆண் துணை இல்லாத பெண் சிகிச்சை இல்லாமல் சாக வேண்டும்; 'கீழ்நிலைப் பிறப்பு' என்று சொல்லப்படுவோருக்கு மருத்துவ சிகிச்சை பெறும் உரிமையே கிடையாது" என அப்பட்டமாக வர்ணாசிரமத்தை தூக்கிப் பிடிக்கிறது.

ஆனால் அப்படியே வெளியிட்டால் எதிர்ப்பு வரும் என்பதறிந்து, கருத்தை மாற்றாமல் வேறு சொற்களில் இந்த உறுதிமொழி எழுதப்பட்டுள்ளது. "என்னுடைய குரு வகுத்து தரும் கோட்பாட்டின்வழி நிற்பேன்; எனது பாலை (ஆண் அல்லது பெண்) சாராதவர் நோயாளியாக வந்தால், அவர்களது உறவினர்கள் முன்னிலையில்தான் வைத்தியம் செய்வேன்" ஆகியவை எடுத்துக்காட்டுகள்.

மதுரை மருத்துவக் கல்லூரியில் பயிற்சி துவங்கும் விழாவில் நிதித்துறை அமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் கலந்து கொண்டிருக்கிறார். அங்கு படித்த சபதம் மேற்சொன்ன இரண்டுக்கும் நடுவில் உள்ள இன்னொன்று. பிடிஆர் பொதுவெளிக்கு கொண்டு வந்தபோது அப்படியெல்லாம் இல்லை என்று சங்கிகள் சத்தமிட்டனர். அங்கு படிக்கப்பட்ட உறுதிமொழியின் அசல் அச்சு வடிவத்தை பிடிஆர் அப்படியே ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டு, அவர்கள் பேசுவது பொய் என நிரூபித்தார்.

தமக்கு இது பற்றி எதுவும் தெரியாது என்றும், தேசிய மருத்துவ ஆணையம் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கி அதை அப்படியே வாசித்ததாகவும், மருத்துவக் கல்லூரி முதல்வருக்கு இது தெரியாது என்றும் மூன்று மாணவர்கள் பேட்டியளித்திருக்கிறார்கள்.

துறை அதிகாரிகளுக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்கும் தெரியாமல் இதை உள்நுழைப்பதன் பின்னே பெரிய சதித் திட்டம் இருக்கிறது. இதன் மீது விசாரணை நடத்த தமிழ்நாடு அரசு ஒரு குழு அமைத்து அதுவும் காலதாமதமின்றி ஒரு அறிக்கையை அரசுக்கு தந்திருக்கிறது.

மதுரை மருத்துவக் கல்லூரி முதல்வர் கட்டாய காத்திருப்பில் வைக் கப்பட்டுள்ளார். அவருக்கே தெரியாமல் இது நடந்திருந்தால் அந்த தண்டனையை அரசு ரத்து செய்ய வேண்டும். எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் இதே உறுதிமொழி எடுக்கப்பட்டிருப்பதால் குற்றமிழைத்தவர்களைத் துல்லியமாகக் கண்டுபிடித்து கடும் தண்டனை வழங்க வேண்டும்.




## எல்.ஐ.சி பங்கு விற்பனை: ஒரு பிற்போக்கான நடவடிக்கை!

### டி.ராஜா கடும் கண்டனம்

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்கும் முனைப்பை மோடி அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார்மயமாக்குவது மற்றும் நிதி மயமாக்கல் ஆகிய கொள்கைகள் மூலமாக தேசிய சொத்துக்கள் அனைத்தையும் விற்பனை செய்வதில் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசாங்கம் தீவிர முனைப்புடன் இருப்பது மிகவும் வருத்தம் அளிக்கக்கூடிய விஷயம் ஆகும்.

வலதுசாரி, அமெரிக்க மாதிரி பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்ட மிகப்பெரும் நஷ்டங்களை ஈடுகட்டவும், கார்ப்பரேட்டுகளுக்கான வரியை மேலும் உயர்த்தி போதுமான நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் அரசாங்கம் அடைந்த தோல்வியை மூடி மறைக்கவும், நடப்பு செலவினங்களைச் சமாளித்திட வருவாய்க்கான ஆதாரங்களைத் திரட்டவும், தேசத்தின் நீண்டகால சொத்துக்களை விற்பனை செய்வது வேதனைக்கு உரியதாகும்.

இது போன்ற விற்பனை நடவடிக்கைகள் நமது இறையாண்மைமிக்க தேசத்தின் பொருளாதாரச் சுதந்திரம் மற்றும் இறையாண்மையைப் பாதிக்கக்கூடியதாகும். அது மட்டுமின்றி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு பயனளிக்கக்கூடிய நடவடிக்கைகள் ஆகும். பிற்போக்கான இது போன்ற வலதுசாரி நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வரும் மோடி அரசாங்கம், தேசத்தின் முன்னணி காப்பீட்டு நிறுவனமான எல்ஐசியில் உள்ள இந்திய அரசாங்கத்தின் பங்கு மூலதனத்தை விற்பனைக்கு அறிவித்துள்ளது.

எல்ஐசி நிறுவனத்தின் 22 கோடி பங்குகளைத் தனியாருக்கு விற்பதன் மூலம் மத்திய அரசாங்கத்திற்கு ரூ 20000 கோடி அளவிற்கு வருவாய் கிடைக்கும் என்று கூறப்படுகிறது. தேச நலனுக்கும், எல்ஐசி பாலிசிதாரர் நலன்களுக்கும் எதிரான இந்த நடவடிக்கை முற்றிலும் பிற்போக்கான நடவடிக்கை ஆகும்.

எனவே, தனியார்மய முனைப்பு மற்றும் தேசிய சொத்துக்கள் விற்பனை நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக நிறுத்திட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

## தொழிலாளர் மானியக் கோரிக்கை மீதான அறிவிப்புகள் ஏமாற்றம் அளிக்கிறது

### தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் அறிக்கை

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் கே.இரவி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாடு தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சரின் தொழிலாளர் மானியக்கோரிக்கை மீதான (26:04:2022) அறிவிப்புகள் ஏமாற்றம் அளிப்பதாகவுள்ளது.

தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி வெற்றி பெற்று திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான ஆட்சி மாற்றம் ஏற்பட்டதில் மிகுந்த மகிழ்ச்சியடைந்த லட்சக்கணக்கான தமிழக கட்டட, கட்டுமான தொழிலாளர்கள் தங்களது சட்டபூர்வ கோரிக்கைகள் சட்டமன்றத்தில் தொழிலாளர் மானிய கோரிக்கையில் ஏற்று அறிவிக்கப்படாததால் பெரும் ஏமாற்றத்திற்கு உள்ளாகி விட்டனர் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

விபத்துமரண குடும்ப உதவி நிதி ரூபாய் 1 லட்சத்திலிருந்து, 2 லட்சமாக உயர்த்தியதற்கும், பேறுகால உதவி நிதியை ரூ.6000 லிருந்து ரூ.18000 ஆயிரமாகவும், திருமணத்திற்கு பெண்களுக்கு ரூ.5000/, ஆண்களுக்கு ரூ. 3000/என்பதை ஒரே சீராக ரூபாய் 20000/என உயர்த்தியதற்கும், தொழிற்கல்வி பயில வழங்கப்பட்டு வரும் கல்வி உதவி நிதியை ஆண்டுக்கு ரூ.1200 லிருந்து ரூ.3000 ஆக அறிவித்தமைக்கும், தமிழ்நாடு ஏ ஐ டி யூ சி கட்டடத் தொழிலாளர் சங்கம் தனது நன்றியினை தெரிவித்துக்கொள்ளும், அதே வேளையில் சட்டவிரோதமாக கடந்த ஆட்சியில் பதிவு ரத்துச் செய்யப்பட்ட 20 லட்சம் தொழிலாளர்களின் நலவாரியப் பதிவை முன்தேதியிட்டு உயிர்ப்பித்தல், திமுக வின் முந்தைய ஆட்சியில் 2011 பிப்ரவரி 28ஆம் தேதி வெளியிட்ட அரசாணை எண் 36 ன் படி, 60 வயது நிறைவடைந்த பதிவு பெற்ற அனைத்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கும் நிபந்தனையின்றி ஓய்வூதியம் வழங்குதல், பெண் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பேறுகாலப் பயன்கள் சட்டப்படி ஆறுமாதம் சம்பளத்துடன் விடுப்பு வழங்குதல், பெண் தொழிலாளர்கள் ஓய்வு பெறும் வயதை 50 ஆக குறைத்து நிர்ணயித்தல், தொழிலாளர் மாநில காப்பீட்டு திட்டம் (ESI) மற்றும் சேமநல நிதி திட்டம்(பிநி) வேலையில்லா காலத்திற்கு நிவாரணம் வழங்குதல் குறித்து அரசு அறிவிக்காதது பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது. 2021ல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டும் கட்டுமானத் தொழிலாளர்களின் சட்டபூர்வ கோரிக்கைகள் நடைமுறைக்கு கொண்டு வரப்படவில்லை.

எல்லாவற்றுக்கு மேலாக நலவாரியத்தில் ரூ.5000 கோடி நலநிதி இருப்பு இருந்து வருகிறது என்பதோடு, ஆண்டுதோறும் 500 கோடிக்கு மேல் வருவாய் உத்தரவாதம் இருந்தும் நடைமுறையில் உள்ள மாதம் ரூ. 1000 ஓய்வூதியத்தை உயர்த்தி அறிவிக்காதது மிகப்பெரிய ஏமாற்றத்தை அளித்துள்ளது.தலைவர் பொன் குமார் தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியம் தனது 14.12.2021 அன்று நடைபெற்ற வாரிய கூட்டத்தில் ஓய்வூதியத்தை ரூ.3000 ஆக உயர்த்தி வழங்கிட பரிந்துரை செய்து முடிவு எடுத்தது. இதனை ஏனோ தமிழ்நாடு அரசு ஏற்க மறுத்து வருகிறது.

டெல்லி மாநில அரசு குறைந்தபட்ச ஓய்வூதியமாக மாதம் ரூ.3000 ஆயிரமும், ஆண்டுதோறும் ரூ.300 உயர்வும் அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. கட்டுமான தொழிலாளர்களின் நலனுக்காக வேலை அளிப்பவர்களிடமிருந்து வசூலித்த நிதியை பயன்படுத்தி அவர்களை பாதுகாக்காமல் தமிழக அரசு காலம் கடத்தி வருவதால் லட்சக்கணக்கான கட்டுமான தொழிலாளர்கள் அரசின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை இழக்க நேரிடும் நிலை உருவாகிவிட்டது.


அவர்களின் முதுமைக்கால வாழ்க்கை கேள்விக்குறியாக தொடர்கிறது. நலநிதியை உயர்த்தி வசூலிக்கவும், இருப்பில் உள்ள ரூ.5000 கோடி நல நிதியை தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்புக்கு பயன்படுத்தவும் வேண்டும். தமிழ்நாடு அரசு தனது நிதிவருவாயிலிருந்து கட்டுமான தொழிலாளர்கள் நலத்திட்டங்களுக்கு பணம் எதுவும் செலவழிக்க வேண்டியதில்லை என்பதால் கட்டுமானத் தொழிலாளர்களின் நலன் காக்க தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு க ஸ்டாலின் அவர்கள் முன்வரவேண்டும் மாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.



எஸ். தோதாத்ரி

தத்துவார்த்தம் 27



# உலகாயதம்

**ஒருவன் திதி கொடுப்பதற்காக சோற்று உருண்டையுடன் வெளியே வந்தான். அதனை கூரை மீது எறிந்தான். அதனைக் காகங்கள் உண்ணத் தொடங்கின. அந்தப் பக்கமாக ஒரு உலகாயதவாதி வந்தான். அவன் கேட்டான், "ஐயா! எதற்காக காகங்களுக்கு கொடுக்கிறீர்கள்?" அதற்கு அவன் கூறினான், இந்தக் காகங்கள் மூலமாக இறந்துபோன என்னுடைய மூதாதையர்களுக்கு உணவு கிடைக்கும். உலகாயதம் உடனே கேட்டான், இந்த காகங்கள் மூலமாக உணவு செல்வதை நான் பார்க்கலாமா?" அவனும் பாருங்கள் என்றான்.**

உலகாயதம் மேலே ஏறிப் பார்க்கையில் உணவு சிதறிக்கிடந்தது. காகங்கள் பறந்து விட்டன. உலகாயதன் கேட்டான், உணவு ஒன்றும் போகவில்லை, காகங்களும் ஓடிவிட்டன. உங்கள் முன்னோர்களுக்கு உணவு எவ்வாறு செல்லும்? அதற்கு அவன் கூறினான் "உங்களுக்குத் தெரியாது நமது கண்களுக்குத் தெரியாமலேயே உணவு நமது மூதாதையர்களுக்கு சென்றுவிடும். உலகாயதன் உடனே சிரித்து விட்டான். உங்கள் கண்களுக்குத் தெரியாமலேயே அது செல்லுமென்றால் அதை எவ்வாறு நம்புவது? கண்களுக்கு நேரே தெரிந்தால்தான் அதை நாம் நம்ப முடியும்? இதுதான் உலகாயதம் பற்றிய ஒரு கதை. இது உலகாயதத்தின் சாராம்சமாக உள்ளது.

உலகாயதம் என்பது இந்தியாவில் மிகப் பழமையான தத்துவம். அதுதான் முதல் தத்துவம் என்று கூட அழைக்கப்படுகிறது. இது பூதவாதம், சாருவாகம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. மேலைநாட்டார் கூறும் பொருள்முதல்வாதம் என்பதும் இதுதான். இது பற்றிய நூல்கள் அந்தக் காலத்தில் இருந்தன. அவை ஆன்மீகவாதிகளால் முற்றிலும் அழிக்கப்பட்டு விட்டன.

ஆனால், அறிஞர்களது முயற்சியால் உலகாயதம் பற்றிய விவரங்கள் வெளிவந்தன. ஹிரியண்ணா, சக்கரவர்த்தி நயினார், தாஸ்குப்தா போன்ற கருத்து முதல்வாதிகளும், தேவி பிரசாத் சட்டோபாத்தியாயா, பி.ஆர். தாமோதரன் போன்ற பொருள் முதல்வாதிகளும் இது பற்றிய பல விவரங்களை வெளிக்கொண்டு வந்துள்ளனர். இவர்களுக்கு சார்வாகம் என்ற நூல் தவிர வேறு எந்த நூல்களும் கிடைக்கவில்லை. ஆனால் உலகாயதத்தை எதிர்க்க பௌத்தர்கள், சமணர்கள், சைவர்கள் ஆகியோர் அதன் அடிப்படைகளைக் கூறி அதனை மறுத்துள்ளனர். இதற்கு பரபக்கம் என்று பெயர். எதிரிகளின் கூற்றை மறுத்தல் என்பது இதன் பொருள். இதிலிருந்து கிடைக்கும் உலகாயதத்திற்கு பரபக்க உலகாயதம் என்று பெயர்.

வடநாட்டிற்கு சட்டோபாத்யாயா அவர்கள் செய்தது போல, தமிழ் நாட்டிலும் உலகாயதக் கருத்துக்கள் இருந்தன என்பதை எடுத்துக் காட்டியவர் பேரா. நா.வானமாமலை. சங்க இலக்கியங்கள், மணி மேகலை, குண்டலகேசி, நீலகேசி ஆகியவற்றிலிருந்து அவர் பல சான்றுகளை தந்துள்ளார். அவரது கருத்துப்படி பூதவாதம் என்பது தென்னாட்டில் இருந்தது என்றும், அதனை அறிந்து கொள்ள பலர் இங்கு வந்தனர் என்றும் தெரியவருகிறது. அவர் ஏராளமான உதாரணங்களைத் தருகிறார்.

சங்க இலக்கியங்களில் அக வாழ்க்கை, புற வாழ்க்கை ஆகியன பற்றியே அதிகம் பேசக் கூடியன. இந்த உலக வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவை பற்றி பேசப்படவில்லை. இது இந்த உலகம் மட்டும்தான் உறுதியானது என்பதைக் காட்டுகிறது. பிசிராந்தையார் என்ற புலவர் தனக்கு தலை ஏன் நரைக்கவில்லை என்பதற்கு காரணங்கள் கூறுகிறார். அவர் மனம் கோணாத மனைவி, அவர் சொல்லை மீறாத குழந்தைகள், ஒருவருக்கொருவர் நேசமாக வாழும் அவருடைய சமுதாய மக்கள், மக்களின் நலம் பேணும் அரசன் ஆகியவற்றின் காரணமாக அவருக்கு மூப்பு இல்லை. இது அவரது வாதம். பூர்வீகமாக மக்களது உலக கண்ணோட்டமும் கூட இதில் பொருள் முதல்வாதக் கூறுகள் உள்ளன என்று அவர் எடுத்துக் காட்டினார். இந்த பொருள் முதல்வாதத்திற்கு சுபாவ வாதம் என்ற பெயரும் உண்டு. இது ஆரம்ப கட்ட பொருள் முதல்வாதம். சங்க காலத்தில் இது தர்க்க ரீதியாக தத்துவமாக வளரக் கூடிய சூழ்நிலை இல்லை. ஏனென்றால் ஆரம்ப கால சங்ககாலம் இனக்குழு மக்கள் காலமாக இருந்தது. பின்னர் அது சிதையத் தொடங்கியது. இந்த சிதைவு கொண்டிருக்கும் காலத்தைத்தான் சங்க நூல்கள் காட்டுகின்றன. மணிமேகலை போன்ற நூல்கள் இது தத்துவமாக வாழ்வதைக் காட்டுகின்றன.

இவற்றிலிருந்து பொருள்முதல்வாதிகள் என்ன கூறினார்கள் என்பதை தெரிந்து கொள்ளலாம்.

திருவள்ளுவர், பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று கூறும் பொழுது அதில் பொருள்முதல்வாதத் தன்மை இருப் பதைக் காணமுடிகிறது. பொருள்முதல் வாதத்தில் பொருள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இந்த பொருள் நமது கண்களுக்கு புலனாகும் நமது காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகியவற்றால் உணரக்கூடிய பொருள். இதற்கு அப்பாற்பட்டு எதுவும் இல்லை. சொர்க்கம், நரகம் ஆகிய எல்லாம் வெறும் கற்பனை. இதைத்தான் பாரதி,

"செத்தபிறகு சிவலோகம், வைகுண்டம் சேர்வோம் என்ற பித்த மனிதர் சாத்திரங்கள் பொய்" என்று கூறுகிறார். உலகாயதத்தில் பொருள் மட்டும் தான் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அதற்கு அப்பாற்பட்ட எதையும் உலகாயதவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

தத்துவஞானிகள் இந்த உலகத்தை புரிந்து கொள்ள முயற் சிக்கிறார்கள். இதற்கு அறிவுத் தோற்றவியல் என்று பெயர். உலகத்தைப் புரிந்து கொள்வதற்கு ஆதாரங்கள் வேண்டும். இந்திய தத்துவ முறையில் இதற்கு அளவை என்ற பெயர். இந்தியத் தத்துவ வாதிகள் ஒரு அளவை, இரண்டு அளவை, மூன்று அளவை என்று பல அளவுகளை முன்வைக்கின்றனர். மூன்று வகையான அளவைகள் பொதுவாக உள்ளன. ஒன்று நேர்க்காட்சி அல்லது பிரத்யச்சம், இரண்டு அனுமானம், மூன்று ஆப்த வாக்கியம் ஆகியன அவை. உலகாயதர்கள் நேர்க்காட்சியை மட்டும் தான் ஏற்றுக் கொள்வார்கள், மற்றவற்றை ஒதுக்கி விடுவார்கள். அனுமானத்தை ஒரு எல்லைக்குள் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அது நேர் காட்சியோடு பொருந்தாவிட்டால் அதனை விலக்கி விடுவார்கள். ஆப்த வாக்கியம் என்பது முன்னோர்கள் கூற்று. இதை உலகா யதர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இந்த கூற்றில் வேதங்கள் அனைத்தும் அடங்கும். உலகாயத வாதிகள் பொருளை மட்டும் ஏற்றுக் கொண்டாலும் அதில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றி பேசவில்லை. அந்த அளவிற்குத்தான் அந்தக் கால உலகாயதம் இருந்தது.

இந்தியாவில் தோன்றிய உலகாயதம் என்பதை எல்லா தத்துவவாதிகளும் எதிர்ப்பதில் தீவிரமாக இருந்தனர். ஆனால் அவ்வாறு எதிர்க்கும் போது அதன் பல கூறுகளை உள்வாங்கிக் கொண்டனர். உதாரணமாக உலகாயதத்தை தீவிரமாக எதிர்த்த சைவசித்தாந்தம் பாசம் என்பது பற்றி பேசுகிறது. இது பொருள் முதல்வாதத் தன்மை உள்ளது. இவ்வாறு எதிர்ப்பவர்கள் உலகாயதவாதிகளில் பிசாசுகளாகவும், சிற்றின்ப நாட்டம் கொண்டவர்களாகவும் சித்தரிக்கலாம். இந்தியத் தத்துவ வரலாறு முழுவதும் உலகதயதத்திற்கும் – கருத்துமுதல்வாதத்துக்கமான போராட்டமாகவே இருந்து வந்துள்ளது.

தொடர்புக்கு: **98947 83657**

1ம் பக்கத் தொடர்ச்சி >>

ஏற்கப்படுவதில்லை. திருமணம் செய்தவர்களை பிரிக்க குடும்பத்தினர் முயலுகின்றனர். பிரிக்க முடியாதபட்சத்தில் பாசத்தை மீறி கொலை செய்துவிடுகின்றனர்.

இதில் ஒருசில படுகொலைகள் மட்டுமே வெளி உலகிற்கு தெரிய வருகிறது. குடும்பத்தினரே கொலையாளிகளாகவும், கூலியாட்கள் வைத்து கொலை செய்வதாலும் கொலைக்கான ஆதாரம் அழிக்கப்படுவது மற்றும் சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாறுவது எளிதில் நடந்தேறுகிறது. இந்நிலையில் சாதிய அரசியலின் தலையீடும் பல வழக்குளில் நடந்தேறுகிறது. எனவே இவ்வழக்குகளில் நீதி பெறுவது மிகப்பெரிய சாவலாக உள்ள நிலையில் இதற்கான தனிச்சட்டம் உடனடியாக தேவை.

**பெண்கள் மீதான உழைப்புச் சுரண்டல்**

60 சதவீதத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இன்று அமைப்புசாரா தொழில்களில் பணிபுரிந்து வருகின்றனர். இத்தொழில்களில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் 30சதவிகித அளவிற்கு ஊதிய விகித வேறுபாடு உள்ளது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களும் ஆணுக்கு இணையான கூலி பெறுவதில்லை. உழைப்பு சந்தையில் மலிவான கூலிக்காகவே பெண்கள் பெருமளவிற்கு பணிக்கு அமர்த்தப்படுகின்றனர்.

அரசுபணிகளில் கூட ஒப்பந்த பணியாளர்களாக அமர்த்தப்படும் பெண்களுக்கு அவர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியமோ உரிமையோ வழங்கப்படுவதில்லை. பெண்கள் மீது உழைப்புச் சுரண்டல் கடுமையாகிறது. எனவே, இது சம்பந்தமாக முறையான ஆய்வொன்றை தமிழக அரசு நடத்திட வேண்டும் என்றும், கூலி விகிதத்தில் நிலவும் பாகுபாட்டை நீக்கி பெண்களுக்கு உழைப்புக்கேற்ற சமகூலி கிடைத்திட அரசு ஆவண செய்ய வேண்டும்.

**மனுதர்மத்தை தடை செய்ய வேண்டும்**

இராண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டதாக கூறப்படும் மனுதர்மத்தில் பெண்களை இழிவுபடுத்தியும், உழைக்கும் மக்களை இழிவுபடுத்தியும் கருத்துகள் உள்ளன. அதோடு அவர்கள் மீது வன்முறை செலுத்தப்படுவதையும் அவர்களை கொலை செய்வதை நியாயபடுத்தும் விதமான கருத்துக்களே அதில் நிறைந்துள்ளன. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அரசியல் சாசன உரிமைகள் பெற்றுள்ள இன்றைய சூழலிலும் மனுதர்மத்தையே இன்றளவிலும் சட்ட புத்தமாக பாஜக கருதுகிறது.

அதோடு அதன் ஒவ்வொரு செயல்பாட்டிலும் மனுதர்ம கொள்கைகளையே அமல்படுத்தி வருகிறது. நீட், தேசியக் கல்வி கொள்கை, மாட்டுக்கறி உண்ண தடை, பெண்களுக்கான 33சதவீத இடஒதுக்கீடு சட்டமாக்கபடாதது என அதன் ஒவ்வொரு செயல்பாட்டிலும் மனுதர்ம கருத்துகளை நடைமுறைபடுத்தி வருகிறது. பெண்களை, உழைக்கும் மக்களை இழிவுபடுத்தும் அவர்களின் உரிமைகளை பறிக்கும் மனுதர்மத்தை தடைசெய்ய வேண்டும்.

**காலி பணியிடங்களை நிரப்பிடுக**

தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் 35 லட்சத்திற்கும் அதிகமான பெண்கள் உள்பட சுமார் 80லட்சம் பேர் வேலைக்காக பதிவுசெய்து காத்திருக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசு உடனடியாக இதில் கூடுதல் கவனம் செலுத்தி காலிப்பணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும்.

**உழைக்கும் பெண்களுக்கு கட்டணமில்லா விடுதி**

வேலையில்லாதிண்டாட்டம் பன்மடங்கு அதிகரித்து வரும் இந்த சூழலில் பெண்கள் குறிப்பாக இளம்பெண்கள் தங்கள் மாவட்டத் திலிருந்து மற்ற மாவட்டங்களுக்கு வேலை தேடி செல்ல வேண்டிய நிலை உள்ளது.

ஆகவே அவர்களின் பாதுகாப்பு நலன் கருதி அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியும் வெளி மாவட்ட பெண்களுக்காக கட்டணமில்லா தங்கும் விடுதிகளை அரசு ஏற்படுத்தி தரவேண்டும்.

**நீட் தேர்விலிருந்து விலக்கு**

மருத்துவப்படிப்பு நுழைவு தேர்வான நீட்தேர்வு காரணமாக ஏழை எளிய குடும்பத்தை சேர்ந்த மாணவர்கள் மருத்துவம் படிக்க முடியாத சூழல் உருவாகியுள்ளது.

அதனால், தங்கள் கனவு சிதைக்கப்பட்டதாக கருதி தமிழ்நாட்டை சேர்ந்த 25க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்துள்ளனர்.

இதன் பின்னர் நீட்தேர்விலிருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு அளிக்கவேண்டும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மசோதாவை அவர் திருப்பி அனுப்பியதை வன்மையாக கண்டிப்பதோடு மீண்டும் சட்டமன்றத்தில் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டு திரும்பவும் ஆளுநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மசோதாவை தமிழ்நாடு ஆளுநர் உடனடியாக குடியரசு தலைவருக்கு அனுப்பி மசோதாவுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

**பெட்ரோல், டீசல், எரிவாயு விலையை குறைத்திடுக**

பெட்ரோல் டீசல் மற்றும் சமையல் எரிவாயுவின் விலை நாள்தோறும் உயர்ந்து வருவதால் பொதுமக்கள் மிகவும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். மேலும் இதனால் விலைவாசி உயர்வு அதிகரித்து வருகிறது.

ஒன்றிய மற்றும் தமிழ்நாடு அரசுகள் பெட்ரோல் டீசல் சமையல் எரிவாயு மீதான வரிகளை வெகுவாக குறைப்பதோடு மேலும் பெட்ரோல் டீசல் விலைநிர்ணயம் செய்யும் உரிமையை தனியாருக்கு வழங்கப்பட்டதை திரும்பபெற வேண்டும்.

**பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிக்கு தண்டனை!**

பொள்ளாச்சி பாலியல் கொடூர சம்பவ வழக்கில் குற்றவாளிகள் யாரென தெரிந்த நிலையிலும் தண்டனை வழங்காமல் தாமதப்படுத்தும் நீதித்துறையை வன்மையாக கண்டிப்பதோடு,சிறப்பு நீதிமன்றம் அமைத்து விரைவாக விசாரித்து, குற்றவாளிகள் மீது கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.பாதிக்கப்பட்ட பெண்களின் விவரங்கள் வெளி வராதவாறு சமூகபாதுகாப்பினை உறுதி செய்வதோடு,வாழ்வாதாரத்தை உறுதி செய்யும் நிவாரண தொகையை வழங்கிட வேண்டும்.

**மாணவிகளை கழிவறை சுத்தம் செய்ய பயன்படுத்தாதே!**

இப்போது பல பள்ளிகளில் மாணவிகளையே கழிவறைகளை சுத்தம் செய்ய விதிக்கப்படுகிறார்கள். இதில் சாதிய ரீதியான தாக்குதல்களிலும் பள்ளி நிர்வாகம் ஈடுபடுகிறது. இதைத் தடுக்கும் விதமாக அனைத்து பள்ளி கல்லூரிகளிலும் "அரசின் தூய்மைப் பணியாளர்"களை வேலைக்கு அமர்த்தப்பட வேண்டும்.

**ஆய்வுத் துறையில் பாலியல் துன்புறுத்தல்!**

ஆய்வுப் படிப்புகள் மேற்கொள்ளும் மாணவிகளுக்கு அதிகளவில் மறைமுகமாக பாலியல் துன்புறுத்தல்கள் நடைபெற்று வருகிறது. தங்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்களைப் பற்றி வெளியே கூறினால், முனைவர் பட்டம் பெற முடியாத சூழல் ஏற்படுவதால், வெளியுலகத்திற்கு தெரியாமல் போய்விடுகிறது. எனவே, முனைவர் பட்ட மாணவிகளுக்கென தனிக்குழுக்கள் அமைத்து, இதுபோன்ற பிரச்சினைகளைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**தன்னம்பிக்கை விழிப்புணர்வு!**

சமீப காலமாக மதிப்பெண் குறைபாடு சாதி ரீதியான ஒதுக்கல் பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட காரணங்களால் உளவியல் ரீதியாக பாதிப்படைந்து மாணவர்கள் தற்கொலை செய்து கொள்வது அதிகரித்து வருகிறது...

ஆகவே அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் உளவியல் ஆலோசர்களை தமிழ்நாடு அரசு நியமனம் செய்வதோடு தன்னம்பிக்கை விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**மதரீதியில் பெண்கள் மீது தாக்குதல்**

கடந்த 8 ஆண்டுகால பி.ஜே.பி ஆட்சியில் பெண்கள் மீதான தாக்குதல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. ஹிஜாப் அணியக்கூடாது என்று சிறுபான்மை பெண்கள் தாக்கப்படுகிறார்கள்...

என்ன உடை உடுத்த வேண்டும் என்பது பெண்களின் உரிமை பெண்களின் அந்த உரிமையை பறிக்கும் விதமாக பெண்கள் மீது தாக்குதல் நடத்தப்படுகின்றன. இதற்கு பிண்ணனியில் ஆட்சியில் உள்ளவர்களே இருப்பவர்களே அதிர்ச்சியளிக்க கூடியதாக உள்ளது.

கருத்துரிமை பேச்சுரிமை உணவு உரிமை வாழ்வுரிமை இவையனைத்தும் பெண்களுக்கும் உள்ள சட்ட உரிமையாகும். ஆனால் பெண்கள் மீது இவை எல்லாவற்றிலும் தாக்குதல் தொடுக்கப்படுகிறது.

சமீப காலமாக மதரீதியான சாதிரீதியான தாக்குதல் குறிப்பாக பெண்களின் மீது நடத்தப்படுவது திட்டமிட்டு சமூகத்தை பதட்டத்தோடு வைத்துக்கொள்வதற்கான முன்னேற்பாடாகும் ....

ஆகவே ஆணுக்கு உள்ள உரிமையும் சமூக பொறுப்புணர்வும் பெண்ணுக்கும் உள்ளது என்பதை கருத்தில் கொண்டு பாலின சமுத்துவசிந்தனைகளை உருவாக்கவும் ஆண்களுக்கு புரிதலை உருவாக்கவும் வேண்டும் அதற்காக அனைத்து கல்விநிலையங்கள் அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு துறை அலுவலகங்களிலும் பாலின சமத்துவ விழிப்புணர்வு கருத்துக்களை கொண்டுசெல்ல சரியான திட்டமிடல்களை உருவாக்கவேண்டும் எனவும்

பாஜக அரசு கொண்டு வந்த தேசிய கல்விக் கொள்கை 2020, இந்தியாவின் கல்வித் துறையை உலக முதலாளிகள் கபளிகரம் செய்யவும், நவீன குலக் கல்வி முறையை அமல்படுத்துவதாகவும் உள்ளது. இக்கல்விக் கொள்கையை ஆளுநர், அரசு அதிகாரிகள் மூலமாக தமிழ்நாட்டில் ஒன்றிய பாஜக அரசு வேகமாக அமல்படுத்தி வருகிறது. எனவே, தேசிய கல்விக் கொள்கையை தமிழ்நாடு அரசு உறுதியாக எதிர்க்க வேண்டும்.

மாநாட்டின் சிறப்பம்சமாக இளைஞர் பெருமன்றத்தை சேர்ந்த ஆண் தோழர்கள் சமையல் செய்து இளம் பெண்களுக்கு உணவு பரிமாறியது முக்கியமான பேசு பொருளாக மாறியது.

இளம் பெண்களின் மாநாடு மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது. மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு மிகுந்த உற்சாகத்தை கொடுத்து அடுத்து இளைஞர் பெருமன்றம் தமிழ்நாடு மாநிலக்குழு மாவட்டந்தோறும் இளம் பெண்கள் மாவட்ட மாநாட்டை நடத்த திட்டமிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்கின்ற

# 4 சட்ட தொகுப்புகளை நடைமுறைப்படுத்தக் கூடாது

## சட்டசபையில் டி.ராமச்சந்திரன் பேச்சு

**எரிசக்தி துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை மானிய கோரிக்கையில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் பேசியதாவது:**

தளி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும் என்று இந்த அவையில் நான் தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில், தளி சட்டமன்ற தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

150 ஆண்டு காலமாக தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற தொழிலாளர் உரிமைகளை பறிக்கும் வகையில் 44 தொழிலாளர் சட்டங்களை 4 சட்ட தொகுப்புகளாக ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ளது.

கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு 36 நல வாரியங்கள் அமைக்கப்பட்டது. இந்த நல வாரியங்களை பறிக்கும் வகையில் ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள சட்ட தொகுப்புகள் உள்ளது. கொள்கை ரீதியாக ஒன்றிய அரசின் சட்ட தொகுப்புகளை எதிர்க்கின்ற இந்த அரசு, அதேவேளையில் மாணவர்களுடைய கல்வி உரிமையை பறிக்கின்ற நீட் தேர்விற்கு எதிராகவும், விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கின்ற 3 வேளாண் சட்டங்களை தமிழ்நாட்டில் நடைமுறைபடுத்த மாட்டோம் என்று சட்டமன்றத்தில் தீர்மானத்தை கொண்டு வந்ததைப் போல, ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்கின்ற 4 சட்ட தொகுப்புகள் தமிழ்நாட்டில் நடைமுறைபடுத்த மாட்டோம் என சட்டமன்ற தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று தொழிலாளி வர்க்கத்தின் சார்பாக இந்த அரசை நான் வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதல் முதலாக சிந்தனை சிற்பி சிங்காரவேலர் நமது தமிழ்நாட்டில் இதே சென்னையில், 1923ஆம் ஆண்டு மே தினத்தை கொண்டாடினார். அந்த மே தின நினைவாக கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் மே தின பூங்காவும், மே தின நினைவுச் சின்னம் அமைத்து தந்தார். தமிழ்நாட்டில் மே தினம் கொண்டாட வேண்டிய நூற்றாண்டு இது. அதன் நினைவாக இந்த ஆண்டு முழுமையிலும் தொழிலாளர்கள் நலன்களுக்காக தனித்த திட்டங்களை தமிழ்நாடு அரசு கொண்டு வர வேண்டும்.

அதேபோல 10 ஆண்டுகளாக கவனிக்கப்படாமல் இருந்த தொழிலாளர் நலனை இந்த அரசு மீட்டெடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய உற்பத்தி மாநிலம் நமது தமிழ்நாடு. ஏராளமான தொழிலாளர் பிரச்சினைகள் இங்கு நிலவுகின்றன. போதிய அக்கறையோடு இந்த பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. நமது மானியக் கோரிக்கையில் கொள்கை குறிப்புகள் அனைத்திலும் வாரியங்கள் மட்டுமே வந்து போகின்றன. வேறு செயல்பாடுகளைப் பற்றிய விவரங்கள் பெரிய அளவில் இல்லை என்பதையும் அவையின் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகிறேன்.

பணிக்கொடை, தொழிலாளர் இழப்பீடு, குறைந்தபட்ச ஊதியம் உள்ளிட்ட பல வழக்குகளில் தொழிலாளர் துறை தீர்ப்பு தரும் அதிகாரம் பெற்றிருக்கிறது. ஆனால் இந்தத் தீர்ப்புகளை வழங்குவதற்கான, தொழிலாளர் இணை ஆணையர், தொழிலாளர் கூடுதல் ஆணையர் போன்ற பணியிடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. ஒரு அதிகாரி வெவ்வேறு ஊர்களில் வெவ்வேறு பணியிடங்களில் பொறுப்பு அதிகாரியாக பணிபுரிகிறார். எந்த வழக்கையும் நடத்தாமல் வாய்தா போடும் நிலைதான் உள்ளது.

வயது முதிர்ந்த தொழிலாளர்கள் பல ஆண்டுகளாக தொழிலாளர் துறை அலுவலகங்களுக்கு அலைந்து கொண்டிருக்கிறார்கள். காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் என்ற பாவேந்தர் பாரதிதாசனின் கவிதையை நினைவு கூர்கிறேன். தமிழ்நாட்டின் செல்வங்களை உருவாக்கித் தந்த தொழிலாளி வாழ்நாள் முழுமையும் வேலை பார்த்த பின்பு தனது சட்டபூர்வமான ஓய்வுக்கால பலன்களை பெறுவதற்காக பல ஆண்டுகள் அலைய வைப்பது எவ்விதத்திலும் நியாயமில்லை உடனடியாக காலதாமதமின்றி தொழிலாளர் துறையில் காலியாக உள்ள பணியிடங்கள் அனைத்தையும் நிரப்ப வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

குறைந்தபட்ச ஊதியத்தை அரசு நிர்ணயிக்கிறது. இதை வழங்காதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வசூலிக்கும் அதிகாரம் தொழிலாளர் துறைக்கு இருக்கிறது. ஆனால் அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தை விட குறைவான தொகையை மாவட்ட ஆட்சியர்களே அந்தந்த மாவட்டத்திற்கு குறைந்தபட்ச ஊதியம் என்று அறிவிக்கிறார்கள். உள்ளாட்சி போன்ற அரசு சார்ந்த துறைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு சமவேலைக்கு சம சம்பளம் இல்லை, அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியம் கூட கிடைப்பதில்லை என்ற அவலநிலை நிலவுகிறது. அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஊதியத்தை விட குறைவான தொகையை வழங்க ஆணை வெளியிட கூடாது என்று மாவட்ட ஆட்சியர்களுக்கு இந்த அரசு வலியுறுத்த வேண்டும்.

மிக பெரும்பாலும் ஒடுக்கப்பட்ட சமூகத்தை சார்ந்த மக்கள்தான் துப்புரவு பணியில் இருக்கிறார்கள் அவர்களை தலைதூக்க விடாமல் மிகக்கடுமையான சுரண்டல் நடக்கிறது. ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே ஊதியமாக பெறமுடிகிறது. மிகுந்த கவலையோடு இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். இந்த சமூக அநீதிக்கு, சமூகநீதி ஆட்சியிலே ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். மாதம் ஒன்றுக்கு 18000 ரூபாய்க்கும் குறையாத குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயித்து செயலாக்குவதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தொழிலாளர் துறையில் பல முத்தரப்பு குழுக்கள் கூட்ட படாமலேயே ஓராண்டு கழிந்துவிட்டது. கலைஞர் ஆட்சி காலத்தில் இருந்ததைப் போல அந்தந்த மாவட்டங்களில் குறிப்பிடப்பட்ட கால இடைவெளிகளில் அந்தக் கூட்டங்கள் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தொழிலாளர்களுக்கான சட்ட தொகுப்புகளுக்கான விதிகளை கடந்த 13ஆம் தேதி மாநில அரசால் பொதுவெளியில் வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கனவே தொழிற்சங்கங்கள் இந்தச் சட்டங்களை ஏற்கக்கூடாது. தொழிற்சங்கங்களுக்கு வரைவு விதிகளை அனுப்பிவைத்து இறுதி படுத்தாமல் பொதுவெளியில் வெளியிடக்கூடாது என்று ஆட்சேபனை தெரிவித்து உள்ள நிலையில் விதிகள் பொதுவெளியில் வெளியிட்டிருப்பதை தொழிலாளர் துறை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இஷரம் திட்டத்தினை பற்றி இங்கே பேசினார்கள். தமிழ்நாடு அரசு தொழிலாளர் நல வாரியத்திற்கு போட்டியாக ஒன்றிய அரசு இஷரம் என்ற திட்டத்தை கொண்டு வந்தது. அதனை தொழிலாளர் நலத்துறை மூலமாக ஒன்றிய அரசே அமுலாக்க தொடங்கியது. இதற்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் எதிர்ப்பு தெரிவித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் முறையிட்டனர். இஷரம் குறித்து ஒரு குழு அமைப்பதாகவும் அதில் கருத்து சொல்லுமாறும் கூறி 14 தொழிற்சங்க பிரதிநிதிகளை நியமித்தனர்.

பல மாதங்களாகியும் அந்தக் கூட்டத்தை நடத்தவில்லை ஆனால் மிக விரைவாக இஷரம் திட்டத்தை நம்முடைய அதிகாரிகள் கீழே கொண்டு செல்கின்றனர். ஆகவே ஒன்றிய அரசு மாநில தொழிலாளர் நலவாரியங்களுக்கு எதிராக கொண்டுவந்துள்ள இஷரம் திட்டத்தை தமிழக அரசு ஏற்க போகிறதா அல்லது எதிர்க்கிறதா என்பதை மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.



அதேபோல் ஒன்றிய அரசு முன்வைத்துள்ள குறித்த கால வேலை நியமனத்தை அது எப்படியென்றால், திருமண தேதிக்கு முன்பே **Divorce** தேதியை வழங்குவது போல தான் இந்த **Fixed Term Employment** என்பது இருக்கின்றது. இதுவரை தமிழ்நாடு அரசு ஏற்கவில்லை ஆகவே இதை தமிழக அரசு ஏற்க போகிறதா? என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

தமிழகத்தில் குடிப்பழக்கம் வெகுவாக அதிகரித்து குடி நோயாக மாறிக்கொண்டிருக்கிறது. இதனால் நாற்பது வயதுக்குள்ளாகவே உடல் திறனை இழந்து நடைப்பிணங்களாக கணிசமான சதவீத தமிழ் மக்கள் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் நமது சமூகம் ஏராளமான இழப்புகளை சந்திக்கிறது எதிர்காலத்தில் இது இன்னும் அதிகமாகும்.

மாநில அரசின் நிதி வருவாய் அனைத்தையும் ஒன்றிய அரசு பறித்துக் கொண்ட பிறகு வருவாய்க்கான வழியாக மது விற்பனை இருப்பதை மறுப்பதற்கில்லை.

அதேவேளையில் நாளைய தமிழகத்தை மனதில் கொண்டு மது விற்பனையை கொஞ்சம் கொஞ்சமாக குறைப்பதற்கான பணிகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

### தளியிலிருந்து ஓசூர் செல்லும் சாலையை நான்கு வழி சாலையாக மாற்றி தர கோரியபோது...

தளி தொகுதியில் தளியிலிருந்து ஓசூர் செல்லும் சாலை **ODR** சாலை 25 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. ஓசூர் தளிக்கு இடையே **TVS, MINDA, TAAL**, ஏத்தர் போன்ற பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதேபோல 5 க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. காலை மாலை நேரங்களில் மாணவர்களும் தொழிலாளர்களும் வேலைக்கு செல்வதால் அடிக்கடி போக்குவரத்து நெரிசலும் விபத்துக்களும் ஏற்படுகின்றன. ஆகவே அந்த சாலையை நான்கு வழிச்சாலையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றித் தருவாரா என தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் கேள்வி எழுப்பினார்.

இதற்காக மதுக்கடைகளின் விற்பனை நேரத்தை குறைக்க வேண்டும். மதுக்கடை இல்லாத நாட்கள் எண்ணிக்கை சிறிது சிறிதாக அதிகரிக்கப்பட வேண்டும்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இருக்கும் மதுக்கடைகளை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்ய வேண்டும்.

டாஸ்மார்க் நிர்வாக செயல்முறைகளை முறைப்படுத்தி சீரமைக்க வேண்டும். மதுக்கடைகளை முற்றிலும் கணினி மயமாக்கி கேரளா மாநிலத்தை போல் ஒவ்வொரு மது பாட்டிலுக்கும் ரசீது வழங்கும் நடைமுறையை கொண்டு வர வேண்டும்.

ஊழலற்ற நேர்மையான நிர்வாகத்தின் மூலம் தற்போதுள்ள வருவாயை இரட்டிப்பாக மாற்ற முடியும். ஊழல் இல்லாத இயக்கத்தை மேலிருந்து துவங்கி அடிமட்டம் வரை கொண்டு செல்ல வேண்டும். மறு சீரமைப்பு என்பது வருவாயை பெருக்கும் நோக்கத்தில் மட்டுமில்லாமல் நிர்வாக நலன், பணியாளர் நலன், மக்கள் நலன், இளைஞர் நலன் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

டாஸ்மாக் ஊழியர்கள் கடந்த 19 ஆண்டு காலமாக தொகுப்பூதியத்தில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை நிரந்தர படுத்தி காலமுறை ஊதியம் வழங்க வேண்டும். படிப்படியாக மதுக்கடைகளின் எண்ணிக்கையை குறைத்து மூடிய கடைகளின் பணியாளர்களை தகுதிக்கு ஏற்ப அரசின் பிற துறைகளில் மாற்றுப் பணி வழங்க வேண்டும்.

டாஸ்மாக் பணியாளர்களிடையே இறப்பு விகிதம் மிக அதிகமாக உள்ளது. ஆகவே இ.எஸ்.ஐ. திட்டத்தில் இவர்களை சேர்க்க வேண்டும். அதேபோல் பணியில் இருக்கும் போது உயிரிழக்கும் டாஸ்மாக் பணியாளர் குடும்பத்தினருக்கு குடும்ப நிதியாக 5 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும்.

தமிழ்நாட்டில் மின்சார தேவை 14000 மெகாவாட்டுக்கும் அதிகம். கோடைகாலங்களில் 17000 மெகாவாட்டையும் தாண்டி தேவை ஏற்படுகிறது. ஆனால் நாம் சொந்தமாக உற்பத்தி செய்வது 5 ஆயிரம் மெகாவாட்டுக்கு குறைவாகவே இருக்கிறது.

உடனடியாக கவனம் செலுத்தி அரசு சொந்த மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும். நமது தமிழ்நாட்டிலேயே உலக தரமிக்க பொதுத்துறை நிறுவனமான பி.எச்.இ.எல். இருக்கிறது. அங்கிருந்து நாம் பாய்லர்களை வாங்கினால் நமது மின்வாரியத்துக்கு மிக தரமான பாய்லர்கள் கிடைப்பதோடு, நம் தமிழ் நாட்டிலேயே இருக்கும் பொதுத்துறை நிறுவனம் வளரும் வாய்ப்பு ஏற்படும். வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு பி.ஜி. ஆர். என்ற தனியார் நிறுவனத்திடம் ஆர்டர் தரப்பட்டுள்ளது அந்த நிறுவனம் காலதாமதம் செய்து வருகிறது. எனவே அந்த உடன்பாட்டை ரத்து செய்து பி ஹெச் இ எல் மூலம் பாய்லர் வாங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது வாரியம் சொந்தமாக மின்சார உற்பத்தி செய்யும்போது ஒரு யூனிட்டுக்கு 20 பைசாவிலிருந்து அதிகபட்சம் ஐந்து ரூபாய் வரை உற்பத்தி செலவு ஏற்படுகிறது. ஆனால் தற்போது தனியாரிடமிருந்து 10,000 மெகாவாட் மின்சாரம் வாங்குகிறோம். வாங்கும் விலை யூனிட்டுக்கு ஏழு ரூபாயிலிருந்து ஒன்பது ரூபாய் வரை இருப்பதாக அறிகிறோம் எனவே சொந்த மின் உற்பத்தியை வேகமாக அதிகரிக்க திட்டமிட்டு உடனடியாக செயல்படுத்த வேண்டும்.

மின்சார தொழிலாளர்களுக்கு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை சம்பள மறு நிர்ணயம் செய்யப்பட்டு வந்தது. சென்ற 1.12.2019 தேதியுடன் பழைய ஒப்பந்தம் முடிந்துவிட்டது மூன்று ஆண்டுகள் தாண்டியும் கூட புதிய பேச்சுவார்த்தை துவக்கப்படவில்லை.

**விரைந்து துவங்க வேண்டும்:** என்னுடைய தளி தொகுதியில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை மற்றும் தேன்கனிக்கோட்டையில் ஐ.டி.ஐ. அரசு தொழிற்பயிற்ச்சி நிலையம் அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் .

**யானைகள், வன விலங்குகளால் ஏற்படும் உயிர் சேதம், பயிர் சேதத்திற்கு உரிய நிவாரணம் வழங்கிடுக**

என்னுடைய தளி தொகுதியில் ஓசூர் வனக் கோட்டத்தில் இராயக்கோட்டை, தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, உரிகம், ஜவளகிரி வனச்சரகங்களில் வனவிலங்குகள் மற்றும் காட்டுயானைகள் மற்றும் சிறுத்தைகள் கூட்டம் கூட்டமாக ஊருக்குள் புகுந்து விவசாயிகளுடைய நெல், வாழை, கரும்பு, தக்காளி, ராகி, சோளம் போன்ற பயிர்களை சேதப்படுத்துகின்றன. இதற்கு இதுவரை கடந்த 03.11.2021 வரை இழப்பீட்டு தொகை என்பது வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல 22.04.22 வரை ஒன்பது மனித உயிரிழப்புகளுக்கும் அதேபோல 8 மனித உடல் காயங்களுக்கும், 281 விவசாயிகளுடைய பயிர் சேதங்களுக்கும் ஆக மொத்தம் 301 பேருக்கு 70 லட்சம் ரூபாய் இன்றைக்கு இழப்பீட்டுத் தொகை வழங்காமல் இருக்கிறது. அந்த இழப்பிட்டு தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

**மாண்புமிகு வனத்துறை அமைச்சர் பதில்:** ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை ஓசூர் வன கோட்டத்திற்குட்பட்ட தளி, ஜவளகிரி காப்புக் காடுகளில் நுழைந்து தேன்கனிக்கோட்டை, நொகனூர், ஊடேதுர்கம் மற்றும் ஓசூர் வனசரகத்திற்கு உட்பட்ட சானமாவு, செட்டிப்பள்ளி, கரியானபள்ளி, கும்பளம் போன்ற காப்புக் காடுகளில் சுமார் 150 முதல் 175 யானைகள் முகாமிட்டு ஏப்ரல் மாதம் கர்நாடகா மாநிலத்திற்கு உட்பட்ட கோலார் வனப்பகுதி கோட்டத்திற்கு உட்பட்ட வனப் பகுதிக்குச் சென்று இந்த மே மாதத்தில் திரும்பி பென்னர்கட்டா தேசிய பூங்காவிற்கு காவேரி வன உயிரின சரணாலயத்திற்கும் செல்வது வழக்கமாக உள்ளது.

இவ்வாறு வரும் யானைகளானது காப்பு காடுகளை விட்டு வெளியேறி விவசாய விளை நிலங்களிலும் மற்றும் குடியிருப்பு பகுதிகளிலும் நுழைந்து அங்குள்ள ராகி, கம்பு, சோளம், கொள்ளு, கரும்பு, மா, தென்னை, வாழை போன்ற பயிர்களை உண்டு சேதப்படுத்தியும் வருகின்றன. இரவு நேரங்களில் காப்பு காட்டினை விட்டு வெளியே வரும் யானை கூட்டங்களை வனப் பணியாளர்கள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் கொண்டு பட்டாசுகள், தாரை தப்பட்டைகள், ஒளிமிகு விளக்குகளை கொண்டு மீண்டும் யானைகளை காப்புக்காட்டிற்கு திருப்பும் பணியினை காலை வரை மேற்கொள்கின்றனர்.

யானைகள் நடமாட்டம் குறித்து பொதுமக்களும் விவசாயிகளும் எச்சரிக்கையாக இருக்க வனப் பணியாளர்களால் தொடர்ந்து எச்சரிக்கை விடப்பட்டு வருகிறது. இந்நிலையில் யானைகளானது காப்பு காடுகளை விட்டு வெளியேறி விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் நுழைந்து சேதங்கள் ஏற்படுத்துவதை மனிதர்கள் மற்றும் யானைகள் உயிரிழப்பை தவிர்க்கவும் தளி தொகுதியில் யானை புகா வேலிகளை 288.48 கிலோமீட்டர், கிரானைட் தடுப்பு சுவர்கள் 2 கிலோமீட்டர், இரும்பு வட கம்பி வேலிகள் 12.1 கிலோமீட்டர், சூரிய சக்தியில் இயங்கும் இரும்பு வட கம்பி வேலிகள் 16.95 கிலோமீட்டர், சூரிய மின்வேலி 100.84 கிலோமீட்டர், தொங்கும் வகையிலான சூரிய பின்லேடனின் 9.50 கிலோமீட்டர் போன்ற தடுப்பு பணிகளுக்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனால் மனித வன விலங்குகள் மோதல்கள் பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த 10 ஆண்டுகளில் ஐம்பது மனித உயிரிழப்புகள் நிகழ்வுகளுக்கு ரூ.165 லட்சமும், 36 மனித காய நிகழ்வுகளுக்கு லட்சமும், 6417 பயிர் சேதத்திற்கு ரூ.359.137 லட்சமும், 5 கால்நடை உயிரிழப்புகளுக்கு ரூ.0.88 லட்சமும், 29 உடமைகள் சேத நிகழ்வுகளுக்கு ரூ. 0.97 லட்சமும் ஆக மொத்தம் ரூ.563.85 இழப்பிட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

மனித உயிரிழப்பு மற்றும் நிரந்தர ஊனத்திற்கு வழங்கப்பட்ட வந்த இழப்பீட்டு தொகையானது ரூ.4 லட்சத்தில் இருந்து 03.11.21 முதல் ரூ.5 லட்சமாக அதிகரித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வன பாதுகாப்பினை மிகவும் பலப்படுத்துதல் மற்றும் மனித வனவிலங்கு முரண்பாடு தீர்வு காண்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரையின்படி நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்திட உயிர் அடுக்கு படை, தடுப்பு படை அமைத்தல் தமிழ்நாடு வன படைக்கு நவீன ரக துப்பாக்கிகள், நவீன ரக தொலைநோக்கிகள், அதிநவீன உலோக கண்டுபிடிப்பு கருவிகள், டிஜிட்டல் கேமரா ஆகிய அதிநவீன ஆயுதங்கள்

>> தொடர்ச்சி 07ம் பக்கம்

# சங்கே முழங்கு!



## எங்கே கடந்து சென்றாலும் சாதி குறுக்கே வருகிறது

டி.ராஜா பேச்சு



சென்னை வியாசர்பாடி முல்லைநகரில் தலித் உரிமைகள் இயக்கம் சார்பில், தலித் உரிமைகளும் சவால்களும் கருத்தரங்கம், கொகுல்ராஜ் கொலை வழக்கில் நீதி நிலை பெற அரும்பாடுபட்ட மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் அவர்களுக்கு பாராட்டுக கூட்டம் நடைபெற்றது. தஒவாஇ மாநில துணைத்தலைவர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் மு.வீரபாண்டியன் வரவேற்றுப் பேசினார் . வழக்கறிஞர் ப.பா. மோகனை பாராட்டி சால்வை அணிவித்து சிபிஐ தேசிய பொதுச்செயலாளர் டி.ராஜா எக்ஸ் எம்பி பேசியதாவது,

நான் 1975ல் கட்சி பணிக்காக சென்னை பாலன் இல்லம் வந்தேன். அப்பொழுது ப.பா.மோகனும் படிக்கவும் மாணவர் பெருமன்றத்தில் பணியாற்றவும் வந்தார். நாங்கள் ஒரே பாயில் படுத்து கிடைத்ததை சாப்பிட்டு பணியாற்றிக் கொண்டிருந்தோம். நான் கட்சித் தலைமைக்கு சென்றேன். மோகன் பிரபல வழக்கறி ஞராகி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வழக்காடி வருகிறார். கோகுல்ராஜ் கொலை வழக்கில் சிறப்பாக வாதாடி குற்றவாளி களுக்கு தண்டனை பெற்றுத்தந்து நீதியை நிலைநாட்டி உள்ளார். அதற்காக அவரை பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். தாழ்த்தப்பட்ட மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருக்க வேண்டுமா? ஒடுக்கப்பட்ட மக்கள் ஒடுக்கப்பட்டவர்களாகவே இருக்க வேண்டுமா? மற்றவர்களைப்போல் தலைநிமிர்ந்து நடக்க கூடாதா? எல்லோருக்கும் நீதி கிடைக்க வேண்டும். எல்லாவித சுரண்டலிருந்தும் விடுதலை பெற வேண்டும்.எங்கே கடந்து சென்றாலும் சாதி குறுக்கே வருகிறது. அமெரிக்கா, லண்டனில் கூட சாதி ரீதியாகத்தான் செயல்படுகிறார்கள். சாதிய கட்டமைப்பை உளவியல் ரீதியாக உடைத்தெரிய வேண்டும். பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ்.க்கு மாற்று என்ன ? இந்த நாடு யாரோ ஒரு சிலருக்கு சொந்தமானது அல்ல. நாட்டின் செல்வம் ஒரு சிலரிடம் குவிந்து விடக்கூடாது. அரசிடமும், பொதுத்துறையிலும் இருக்க வேண்டும். அதானி, அம்பானி உலக பணக்கார வரிசையில் உள்ளனர். ஆனால் உற்பத்தியை செய்யக்கூடிய மக்கள் வறுமையில் வாழ்கிறார்கள். இன்று ஒன்றுபட்டு செயல் படுவது காலத்தின் கட்டாயம். மார்க்சீயவாதிகள், அம்பேத் கர்வாதிகள்கள், பெரியாரிஸ்டுகள் அனைவரும் ஒன்று சேர்ந்து போராடினால்தான் பா.ஜ.க.வை அப்புறப்படுத்த முடியும்.இதுதான் தீர்வு. மூன்றாவது மாற்று அணி என்பது இல்லை. மதசார்பற்ற அணிகள் ஒன்று பட வேண்டும். இவ்வாறு து.ராஜா எக்ஸ் எம்பி பேசினார்.

சிபிஐ மாநில செயலாளர் இரா.முத்தரசன், விசிக தலைவர் தொல்.திருமாவளவன், தலித் உரிமைகள் இயக்க தேசிய பொதுச்செயலாளர் வி.எஸ்.நிர்மல், தேசிய தலைவர் புதுவை அ.ராமமூர்த்தி, டி.ராமச்சந்திரன் எம்எல்ஏ, தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநில செயலாளர் சாமுவேல்ராஜ் உள்ளிட்டவர்கள் பேசினர். வழக்கறிஞர் ப.பா.மோகன் ஏற்புரை நிகழ்த்தினார்.

## எம்.என்.எஸ். வெங்கட்ராமன் உடலுக்கு சிபிஐ தலைவர்கள் மலர் மாலை வைத்து அஞ்சலி

விருதுநகர் மாவட்டம் எம்.ரெட்டியபட்டியில் மறைந்த சிபிஎம் மாநில செயற்குழு உறுப்பினர் எம்.என். எஸ்.வெங்கட்ராமன் உடல் மக்கள் அஞ்சலி செலுத்த வைக்கப்பட்டிருந்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாககுழு உறுப்பினர்கள் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, வி.அழகிரிசாமி எக்ஸ் எம்பி, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாவட்ட துணைசெயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், தவிச சீனிவாசன்,

இடைகமிட்டி செயலாளர்கள் முனியசமி, செல்வம், ஏஐடியுசி தங்கராஜ் உள்ளிட்டோர் நேரில் சென்று மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் நடைபெற்ற இரங்கல் புகழஞ்சலி கூட்டத்திற்கு சிபிஎம் மாவட்ட செயலாளர் அர்ஜுனண் தலைமை வகித்தார். தொழில் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சிபிஎம் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் ஜி.இராமகிருஷ்ணன், சிபிஐ மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ உள்ளிட்டோர் பேசினர்.

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது அகில இந்திய மாநாட்டு வரவேற்புக் குழு அமைப்பு**

# இடதுசாரி, மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக சக்திகளின் ஒற்றுமையே தற்போதைய தேவை!



டி.ராஜா

**2022 அக்டோபர் 14 முதல் 18 வரை ஆந்திர மாநிலம் விஜயவாடாவில் நடைபெற உள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது அகில இந்திய மாநாட்டுக்கான வரவேற்பு குழுவை அமைத்திட ஏப்ரல் 26 அன்று விஜயவாடாவில் உள்ள தாசரி பவனில் குழுமியிருந்த கட்சியின் ஊழியர்கள் மற்றும் தலைவர்கள் மத்தியில் டி.ராஜா சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று உரையாற்றினார். இக்கூட்டத்திற்கு கட்சியின் ஆந்திர மாநிலக் குழு செயலாளர் கே.ராமகிருஷ்ணா தலைமை தாங்கினார். இக்கூட்டத்தில் டி.ராஜா பேசியதாவது:**

வகுப்புவாத பாசிஸ்டுகளின் பிடியில் இருந்து தேசத்தைப் பாதுகாத்திட இடதுசாரி, மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதே தற்போதைய தேவையாகும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிரையும் ஈந்த நமது கம்யூனிஸ்ட் முன்னோடிகள் கொண்டிருந்த அதே உணர்வு போதத்துடன் நமது போராட்டங்களை நாம் முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

எந்தச் சூழலிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடாத ஆர்.எஸ்.எஸ். அமைப்பானது, இன்று தேசத்தின் அரசு விவகாரங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தி வருகிறது. சாதிய மற்றும் வகுப்புவாத அடிப்படையில் தேச மக்களை குவிமையப்படுத்துவதன் மூலம் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ஜனநாயகத்தைச் சிறுமைப்படுத்துகிறது. அரசியலமைப்புச் சட்டத்திற்கு மதிப்பளிக்காமல், அதனைத் துச்சமென தூக்கியெறிய முயலுகிறது. மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசாங்கம், மக்கள் விரோத கொள்கைகளை எதிர்ப்பவர்கள் மீதும், தலித்துகள், ஆதிவாசிகள் மற்றும் சிறுபான்மையோர் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

முன்னெப்போதுமில்லாத நெருக்கடிகளுக்கு இடையே நமது நாடு பயணித்து வருகிற இக்கட்டான சூழலில், விஜயவாடாவில் நடைபெற உள்ள 24வது அகில இந்திய மாநாடு மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. இத்தகு முக்கியத்துவமும், வரலாற்றுப் பெருமையும் கொண்டிருக்கும் காரணத்தால் கட்சியின் அகில இந்திய மாநாட்டை மற்றுமொரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக வென்று முடிக்க கட்சித் தோழர்கள் அயராது உழைத்திட வேண்டும். விஜயவாடாவில் நடைபெற்ற கட்சியின் 10வது அகில இந்திய மாநாடு மாபெரும் வெற்றியடைந்தது நினைவுகூரத்தக்கது ஆகும். கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கோட்டையான விஜயவாடாவில் மீண்டும் ஒருமுறை கட்சியின் அகில இந்திய மாநாடு நடைபெற உள்ளது. தெலுங்கு மொழி பேசும் மாநிலங்களில் இருந்து தோன்றிய மூத்த தலைவர்களான சி.ராஜேஸ்வரராவ், தாசரி நாகபூஷணராவ், கிரிபிரசாத் மற்றும் குஜ்ஜூல்லா எல்லமந்த ரெட்டி ஆகியோர் கட்சிக்காக அரும்பணியாற்றினர். இவ்வாறு டி.ராஜா பேசினார்.

கட்சியின் ஆந்திர மாநிலச் செயலாளர் இராமகிருஷ்ணா பேசியது பின்வருமாறு: இந்தியா முழுவதும் பரவியுள்ள கம்யூனிஸ்ட் இயக்கத்தின் கேந்திரமான பகுதியாகத் திகழும் விஜயவாடாவில் கட்சியின் அகில இந்திய மாநாடு நடைபெற உள்ளது. 1975ஆம் ஆண்டு விஜயவாடாவில் நடைபெற்ற 10வது அகில இந்திய மாநாட்டில் ஒரு மாணவ தன்னார்வலராக நான் பங்கேற்றேன்.

ஏஐடியுசி பொதுச்செயலாளரும், கட்சியின் தேசியக் குழு செயலாளருமான அமர்ஜித் கவுர் பேசியது பின்வருமாறு: கட்சியின் 10வது அகில இந்திய மாநாட்டில் நானும் ஒரு மாணவ தன்னார்வலராகப் பங்கேற்றேன். ஜனநாயகத்தை உடைத்தெறியவும், அரசியலமைப்புச் சட்டத்தை சீர்குலைத்திடவும் பாஜக முயலுகிறது. பாஜகவின் இதுபோன்ற முயற்சிகள் குறித்து கட்சித் தோழர்கள் எச்சரிக்கை உணர்வுடன் பணியாற்ற வேண்டும். வகுப்புவாத சக்திகளிடம் இருந்து நாட்டை நாம் பாதுகாத்திட வேண்டும்.

தேசியக் குழுவின் மற்றொரு செயலாளரும், சர்வதேச துறையின் பொறுப்பாளருமான பல்லப் சென் குப்தா பேசுகையில், சீனா, வியட்நாம், ரஷ்யா, கியூபா உள்ளிட்ட பல நாடுகளின் சகோதரப் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ள இருக்கிறார்கள் என்று கூறினார்.

இக்கூட்டத்திற்குப் பிறகு நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் டி.ராஜா கூறியதாவது:

நடைபெற உள்ள அகில இந்திய மாநாடு வரலாற்றுச் சிறப்புமிக்க மாநாடாக அமைய உள்ளது. வகுப்புவாத கலவரங்களை உருவாக்கும் பா.ஜ.க–ஆர்.எஸ்.எஸ்., அரசியலமைப்புச் சட்டத்தின் பாற்பட்ட அமைப்புகளைச் சீரழித்து வருகின்றன. மோடி அரசாங்கம் மாநில அரசுகளின் உரிமைகளைப் பறித்து வருகிறது. சிறுபான்மைச் சமூகத்தவர்கள், தலித்துகள் மற்றும் ஆதிவாசிகள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. மோடி அரசாங்கத்தின் கொள்கைகள் ஜனநாயகத்திற்கும், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும், இந்திய சமுதாயத்தின் மதச்சார்பற்ற கட்டமைப்புக்கும் பேராபத்தாகும். இந்த மக்கள் விரோத அரசாங்கத்தை 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் தோற்கடித்திட பாஜக அல்லாத கட்சிகள் மற்றும் அமைப்புகள் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும். காங்கிரஸ் கட்சி அதன் உட்கட்சி பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டும். ஒன்றுபட்ட போராட்டங்களை முன்னெடுக்க ஒத்துழைக்க வேண்டும்.

கட்சி அமைப்பை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து கட்சியின் அகில இந்திய மாநாடு விரிவாக விவாதிக்கும். வகுப்புவாத விஷத்தை மக்களிடையே பரப்பி, நாட்டு மக்களை வகுப்புவாத அடிப்படையில் பிளவுபடுத்திட ஆர்.எஸ்.எஸ். மிகக் கடுமையாக முயலுகிறது. அரசியலமைப்புச் சட்ட விழுமியங்களைப் பாசிஸ்ட் கட்சியான பா.ஜ.க. சீர்குலைத்து தூக்கியெறிந்து வருகிறது. உத்தரபிரதேசம், மத்திய பிரதேசம் மற்றும் குஜராத் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் புல்டோசர்கள் தான் ஆர்.எஸ்.எஸ்.– பா.ஜ.க. அணிக்கு ஆதாயம் அளிக்கப் போவதாக அவர்கள் கருதுகிறார்கள்.

அனைவருக்குமான முன்னேற்றம் என்று மோடி தொடர்ந்து பேசினாலும், அவரது அரசாங்கத்தின் கொள்கைகள், பணவீக்கம், ஏழ்மை, வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றை அதிகரிக்கவே செய்கின்றன.

மோடி தலைமையிலான மக்கள் விரோத பாஜக அரசாங்கத்தை முறியடிக்க சிபிஐ, சிபிஎம் ஆகிய இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் இதர இடதுசாரி, ஜனநாயக, மதச்சார்பற்ற, முற்போக்கு கட்சிகளுடன் இணைந்து பணியாற்றும்.

இவ்வாறு டி.ராஜா கூறினார்.

>> 06ம் பக்கத் தொடர்ச்சி

வழங்குதல் விரைவான நடவடிக்கைகளை ரோந்து மற்றும் மீட்பு பணிகளுக்கு இருசக்கர வாகனங்கள், வன பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற நல்ல திட்டங்கள் இந்த வருடத்திலிருந்து வரப்போகிறது. நீங்க சொன்ன இழப்பீட்டு தொகை கொடுக்கவில்லை என்பது இருந்தால் இன்றே அதிகாரிகளிடம் ஆலோசனை செய்து உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

டி.ராமச்சந்திரன்: நிலுவையில் உள்ள இழப்பீட்டு தொகையை கொடுக்க வேண்டும். அதே போல் 100 கிலோமீட்டர் சோலார் மின்வேலி போடவில்லை அதனால் அடிக்கடி யானை வனவிலங்குகள் மனித உயிரிழப்புகள் ஏற்படுகிறது அந்த 100 கிலோமீட்டர் மின் வேலி அமைக்க வேண்டும் அதே போல யானைகள் தாக்கி உயிரிழந்தவர்களுக்கு ரூ 5 லட்சம் தமிழக அரசு கொடுக்கிறது அண்டை மாநிலமான கர்நாடகா ரூபாய் 10 லட்சம் வழங்குகிறது அதைப்போல 10 லட்சம் உயர்த்தி வழங்க வேண்டும். அதேபோல இன்றைக்கு யானைகளால் ஏற்படுகின்ற உயிர் சேதத்திற்கு வழங்குகின்ற இழப்பீட்டு தொகை போதுமானதாக இல்லை. ஆகவே பாரத பிரதமருடைய பசல் யோஜன திட்டத்தில் யானைகளால் ஏற்படுகின்ற உயிர் சேதத்திற்கும், பயிர் சேதத்திற்கும் அந்த காப்பீட்டு திட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

உறுப்பினர் அவர்கள் கேட்ட அனைத்து கோரிக்கைகளையும் படிப்படியாக நிறைவேற்றப்படும் என தெரிவித்துக் கொள்கிறேன்.

**மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி பேல்பட்டி மலை கிராமத்திற்கு தார்சாலை அமைத்துத்தர அரசு முன்வருமா?**

தளி சட்டமன்றத் தொகுதி மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி பேல்பட்டி மலை கிராமத்திற்கு தார்சாலை அமைத்துத்தர அரசு முன்வருமா என தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் அவர்கள் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த வனத்துறை அமைச்சர் தளி சட்டமன்ற தொகுதி மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி பேல்பட்டி கிராமத்திற்கு தார்சாலை அமைக்க அனுமதி வழங்கினார்.

டி. இராமச்சந்திரன்: என்னுடைய தளித் தொகுதிக்கு உட்பட்ட மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி மேல் பட்டி மலை கிராமம் என்பது அந்த ஊராட்சியில் 5க்கும் மேற்பட்ட மலை கிராமங்கள் இருக்கின்றன. சுமார் 5 ஆயிரம் பழங்குடி மற்றும் மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பழங்குடி மக்களுடைய குழந்தைகள் பள்ளி கல்வி படிப்பை முடித்துவிட்டு உயர்நிலை அல்லது மேல்நிலைப் பள்ளிக்கு செல்ல வேண்டுமென்றால் கர்நாடக வனப்பகுதியில் அடர்ந்த வனப்பகுதியில் யானைகள் மற்றும் வன விலங்குகள் நிறைந்த பகுதியில் சுமார் முப்பது கிலோ மீட்டர் தூரம் நடந்து அல்லது இருசக்கர வாகனத்தில் சென்று அஞ்செட்டிக்கு செல்ல வேண்டியுள்ளது.

இந்தப் பகுதி விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை சந்தைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்றால் முப்பது கிலோமீட்டர் தூரம் வனப்பகுதியில் எடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. அதேபோல கர்ப்பிணி பெண்கள் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்ல வேண்டுமென்றால் இருசக்கர வாகனத்தில் அல்லது நடந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி மேல் பட்டியலிலிருந்து பிளிகல் கிராமத்திற்கு எட்டு கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. அந்த சாலை அமைக்கப்பட்டால் கர்நாடகா சுற்றி செல்ல வேண்டியதில்லை ஆகவே 0.98 ஹெக்டருக்கு குறைவாக தான் வனப்பகுதியில் அந்த சாலை வருகிறது. ஆகவே அந்த சாலை அமைக்க அனுமதி வழங்க வேண்டும்.

வனத்துறை அமைச்சர்: கிருஷ்ணகிரி மாவட்டம் தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சி பேல்பட்டி மலை கிராமத்திற்கு செல்வதற்கு ஓசூர் வனக் கோட்டத்தில் உள்ள பிரித்தல் காப்பு காட்டில் 6.6 கிலோமீட்டர் நீளத்திற்கு அமைந்துள்ளது. அக்குடி யிருப்பில் உள்ள மொத்தம் 20 ஆயிரம் பேர் பயன்படுத்த போகிறார்கள் அந்த சாலையை. அந்த சாலையானது தளி ஊராட்சி ஒன்றியத்தில் 1.65 கிலோமீட்டர் மஞ்சுகொண்டபள்ளி ஊராட்சியிலும், 1.65 கிலோமீட்டர் தக்கட்டி ஊராட்சியிலும், 1.65 கிலோமீட்டர் கோட்டையூர் ஊராட்சியிலும் மற்றும் 1.65 கிலோ மீட்டர் உரிகம் ஊராட்சி பகுதியிலும் அமைந்துள்ளது. மொத்தம் அந்த 6.6 கிலோமீட்டர் பழங்குடி மற்றும் இதர மரபுவழி வாழும் வன மக்கள் வன உரிமை அங்கீகரிப்பு சட்டம் 2006 இன் படி தளி ஊராட்சி ஒன்றிய வட்டார அலுவலரால் 25.06.2021 தேதியில் மண் சாலையை தார் சாலையாக மாற்றி அமைக்க மனு கிடைக்கப்பெற்ற இரண்டு மாதத்திற்குள் ஓசூர் வன உயிரின காப்பாளரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**விக்னேஷ் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலையும் ரூ.25 லட்சமும் வழங்கிடுக**

தலைமை செயலக காவலர் குடியிருப்பு காவலர்கள் கடந்த 19.4.2022 அன்று புரசைவாக்கம் கெல்லிஸ் சிக்னலில் வாகன தணிக்கையின் போது விக்னேஷ் சுரேஷ் என்ற இரண்டு இளைஞர்கள் குடிபோதையில் ஆட்டோவில் கஞ்சா விற்றதாக காவலர்களால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு அன்று இரவு அவருடைய குடும்பத்தாருக்கு தகவல் தெரிவிக்காமல் மறுநாள் விக்னேஷ் கடுமையாக பாதிக்கப்பட்டு கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவர் ஏற்கனவே உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். விக்னேஷ் என்பவர் ஏழை குடும்பத்தை சேர்ந்தவர். இத்தகைய லாக்கப் மரணங்கள் என்பது தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. ஆகவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மூன்று காவலர்களை பணி யிடை நீக்கம் செய்திருப்பதும் இந்த வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றி இருப்பதும் இன்றைக்கு சட்டத்தின் ஆட்சி நடைபெறுகிறது என்பதை நிரூபிக்கும் வகையில் இதை வரவேற்கிறோம். அதேபோன்று அந்த விக்னேஷ் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்குவதோடு குடும்ப நிதியாக 25 லட்சம் ரூபாய் வழங்க வேண்டும். அதேபோன்று அந்தக் குற்றச் செயலில் ஈடுபட்ட காவலர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.



# மே தின கொடியேற்று விழா

**உழைக்கும் மக்களின் உரிமை திருநாளாம் மே 1 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகமான பாலன் இல்லத்தில் மே தின கொடியேற்று விழா நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா, மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் மாநில, மாவட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.**

**மதுரை மாநகர்:** மதுரை மாநகரில் ஏஐடியுசி, சிஐடியு சார்பாக பேரணி, பொதுக்கூட்டம் சுப்ரமணியபுரம் வாஞ்சிநாதன் சாலையில் நடைபெற்றது. சிஐடியு மாநகர செயலாளர் இரா.தெய்வராஜ் தலைமை ஏற்க, ஏஐடியுசியின் மாவட்ட செயலாளர் எம்.நந்தாசிங் முன்னிலை வகித்தார். ஏஐஇஇஏ சார்பாக ரமேஷ்கண்ணா, மாதர் சம்மேளத்தின் மாவட்ட செயலாளர் பா.ராஜலெட்சுமி, மார்க்சிஸ்ட் கட்சியின் மதுரை மாநகராட்சியின் துணைமேயர் நாகராஜ் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினரும், தமிழ்நாடு ஏஐடியுசி நிர்வாகிகளில் ஒருவருமான க.சந்தானம், சிஐடியு மாநில பொருளாளர் மாலதி சிட்டிபாபு ஆகியோர் மே தின உரையாற்றினர்.

மதுரை மாவட்ட பஞ்சாலை தொழிலாளர்கள் சங்கத்தில் ஏஐடியூசி மாநில செயலாளர் ம.இராதாகிருஷ்ணன் ஏஐடியுசி கொடியை ஏற்றிவைத்தார். மதுரை மாநகர் மேற்கு பகுதியில் அமைந்துள்ள கட்சி கொடிகம்பத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன் கட்சி கொடியினை ஏற்றிவைத்தார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில குழு எம்.சரவணன், எஸ்.சேது, பா.ராஜலெட்சுமி, பஞ்சாலை சங்கத்தின் நிர்வாகிகள் இரா.முருகன் ஜனசக்தி என்.ஜீவா உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**மதுரை புறநகர்:** மதுரை புது விளாங்குடி சாவடி அருகில் சிஐடியு, ஏஐடியுசி புறநகர் மாவட்டக்குழுக்கள் சார்பில் மே தின விழா பொதுக்கூட்டம் சிஐடியு மதுரை மாவட்டத் தலைவர் செ.கண்ணன் தலைமையில் நடைபெற்றது. மேலும் புறநகர் மாவட்ட பொதுச்செயலாளர் தினகரமோகன் முன்னிலை வகித்தார். நிகழ்வில் முன்னாள் எம்எல்ஏ சிஐடியு டில்லிபாபு, ஏஐடியுசி மஞ்சுளா, ஏஐடியுசி மதுரை புறநகர் மாவட்ட தலைவர் காளிதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மதுரை திருப்பரங்குன்றம் பகுதிகளில் மே தின விழா ஏஐடியுசி மற்றும் சிஐடியு சார்பில், சிபிஐ மதுரை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி.முத்துவேல் தலைமையில் கொடியேற்றத்துடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் திருப்பரங்குன்றம் ஒன்றியத்திற்க்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் இனிப்புகள் வழங்கி கொடி ஏற்றினார்கள்.



**கிருஷ்ணகிரி:** கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் செங்கொடி ஏற்றி வைத்தார். பர்கூர் வட்டத்தில் 30 மையங்களில் கொடியேற்றி மே தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ். கண்ணு, வட்ட துணை செயலாளர் சிவகுமார், வட்ட செயலாளர் ஏஐடியூசி மோகன், இளைஞர் பெருமன்ற ரஜினி உள்ளிட்டோர் பங்கேற்றனர். புளியம்பட்டியில் தொடங்கி சிகரளபள்ளி, மல்லபாடி, மஜித்கொல்லள்ளி, கந்திகுப்பம், பட்லபள்ளி பஞ்சாயத்துகளில் உள்ள இருபத்தி ஒன்பது மையங்களில் கொடியேற்றி இறுதியாக பர்கூரில் எஸ்.கண்ணு கொடியேற்றி விளக்கி பேசினார்.

**கோவை:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கோவை மாநகரத்தில் நூற்றுக்கணக்கான இடங்களில் கட்சிக் கொடிகளை ஏற்றினர்.

ஜீவா இல்லத்தில் மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்திரம் தலைமையில் நடைபெற்ற கொடியேற்று விழா நிகழ்ச்சியில், மாவட்ட துணை செயலாளர் ஆர்.தேவராஜ், மாவட்ட பொருளாளர் யூ.கே. சுப்ரமணியம், கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ப.பா.ரமணி. ஏ.பி.மணிபாரதி, ஜே.கலா, பேராசிரியர் திலிப் குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கிழக்கு மண்டலத்தில் சித்தாபுதூர், பாப்பநாயக்கன்பாளையம் புளியகுளம், ராமநாதபுரம் உள்ளிட்ட பகுதிகளில் 20 இடங்களில் கொடி ஏற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம், ஆர். தேவராஜ், ஆர்.சுதர்சன், கே. ரவீந்திரன், மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கிழக்கு மண்டலத்தில் 30க்கும் மேற்பட்ட இடங்களில் கொடியேற்று விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளில் கிழக்கு மண்டல செயலாளர் மு.வ.கல்யாணசுந்தரம், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஜி. நாராயணசாமி, ஜீவபாரதி, மாமன்ற உறுப்பினர் மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மேற்கு மண்டலத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 20க்கும் மேற்பட்ட இடங்களில் கொடியேற்று விழா நடைபெற்றது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆறுமுகம், வட கோவை வேலாண்டிபாளையம் குமாரசாமி காலனி உள்ளிட்ட பகுதிகளில் கொடியை ஏற்றி வைத்தார். இந்த நிகழ்ச்சிகளை மேற்கு மண்டல செயலாளர் ஜே.ஜேம்ஸ், சி.தங்கவேல் உள்ளிட்டவர்களும்,



பாப்பநாயக்கன் புதூர் சீரநாயக்கன்பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற கொடியேற்று விழாவில் மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன் மேற்கு நகர துணை செயலாளர் என்.சந்திரன் உள்ளிட்டவர்களும், வெங்கடாபுரம், பூபேஷ் பதிப்பகம், நேதாஜி காலனி உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற கொடியேற்று விழா நிகழ்ச்சிகளில் மாமன்ற உறுப்பினர் மல்லிகா புருஷோத்தமன், கே.புருஷோத்தமன், ஏ.அஷ்ரப் அலி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வடக்கு மண்டலத்தில் வெள்ளக்கிணறு, ஆவாரம்பாளையம், கணபதி, உருமாண்ட பாளையம், சரவணம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் சி.சிவசாமி, வி.ஆர்.பாண்டியன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.


**தஞ்சை:** தஞ்சை மாவட்ட அலுவலகத்தில் மே தின கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா தலைமை வகித்தார். மாநில செயலாளர் வழக்கறிஞர் சி.சந்திரகுமார் கொடியினை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். கட்சி கொடியினை மாவட்ட பொருளாளர் என்.பாலசுப்பிர மணியன் தலைமையில் மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி ஏற்றிவைத்து சிறப்பித்தார்.

கீழவாசல் கட்டுமான சங்க மாவட்ட துணை தலைவர் பி.செல்வம் தலைமையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்க மாவட்ட பொதுச்செயலாளர் க.அன்பழகன் ஏற்றி வைத்தார். கரந்தை பணிமனை முன்பு நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஓய்வு பெற்றோர் சங்க கே.சுந்தரபாண்டியன் தலைமையில் பொதுச் செயலாளர் பி.அப்பாத்துரை ஏற்றி வைத்தார். ஜெபமாலைபுரம் அரசு போக்குவரத்து நகர கிளைகள், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபகழக மண்டல அலுவலகம், வங்கி அலுவலகங்கள், மின்வாரிய மேற்பார்வை செயற்பொறியாளர் அலுவலகம், டாஸ்மாக் மண்டல அலுவலகம் மாலைநேர காய்கறி மார்கெட், டிசிஎம்எப் லாரி சுமைசங்கம், தேசிய சுமைதூக்கும் தொழிலாளர்கள் சங்கம், சத்யா நகர், சேவப்ப நாயக்கன் வாரி சங்கம், ஆட்டோ சங்க கிளைகள் உள்ளிட்டு பல்வேறு இடங்களில் ஏஐடியூசி மே தின கொடிகள் ஏற்றப்பட்டன. நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட துணைச் செயலாளர் துரை. மதிவாணன், மாவட்ட பொருளாளர் தி.கோவிந்தராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தஞ்சாவூர் கோரிகுளம் புதுத்தெரு கட்சியின் ஒன்றிய செயலாளர் கணேசன் தலைமையில் கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் கிருஷ்ணன் கொடி ஏற்றிவைத்தார். பாரதி நகரில் உள்ள கொடியினை ஜோசப் தலைமையில் சொக்கலிங்கம் ஏற்றிவைத்தார். மாநகர செயலாளர் பிரபாகரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**பாபநாசம் :** பாபநாசம் அருகே அம்மாபேட்டை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கொடியேற்றி, உறுதிமொழியும் ஏற்கப்பட்டது. அம்மாப் பேட்டை ஒன்றியச் செயலாளர் செந்தில்குமார், ஒன்றிய நிர்வாகிகள் பாலு, தாமரைச்செல்வி, ராஜாராமன் உள்பட பலர் கலந்துக் கொண்டனர்.

**தருமபுரி:** தருமபுரியில் ஏஐடியூசி, சிஐடியூ தொழிற்சங்கம் சார்பில் மே தின பேரணி மற்றும் பொது கூட்டம் எல்ஐசி அலுவலகம் எதிரில் செங்கொடிபுரத்தில் நடைபெற்றது. பெரியார் சிலையிலிருந்து கடைவீதி வழியாக பேரணி நடைபெற்றது. பேரணியை ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு சிஐடியூ மாவட்ட தலைவர் பி.ஜீவா, ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன் தலைமை வகித்தனர். ஏஐடியூசி மாவட்ட செயலாளர் கே.மணி, சிஐடியூ மாநில துணைத்தலைவர் இ.பொன்முடி, ஏஐடியூசி மாநில செயலாளர் ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.



**பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றினால் மட்டும் போதாது. உற்பத்தி சாதனங்களை முதலில் அரசு சொத்தாக மாற்ற வேண்டும்.**
**- ஏங்கல்ஸ்**



தருமபுரி நான்கு ரோடு கோல்டன் தெரு ஆட்டோ ஸ்டேண்டில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு தலைவர் ரவி தலைமை வகித்தார்.செயலாளர் அறிவழகன் சங்க கொடியை ஏற்றினார். நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட தலைவர் மாதேஸ்வரன், மாவட்ட செயலாளர் கே.மணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு சாலைப் பணியாளர் மற்றும் அரசு பணியாளர் சங்கம் சார்பில் பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் மே தின கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாநில பொது செயலாளர் கே.பாஸ்கரன் சங்க கொடியை ஏற்றி வைத்தார். அரசு பணியாளர் சங்க முன்னாள் மாவட்ட தலைவர் ஆர்.சுதர்சனன் பணியாளர் சங்க கொடியை ஏற்றி வைத்தார்.

நிகழ்ச்சியில் ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட செயலாளர் கே.மணி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயற்குழு உறுப்பினர் சின்னசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சென்னை கோடம்பாக்கம்:** சென்னை கோடம்பாக்கம் யுனைடெட் இந்தியா காலனி ஆட்டோ நிறுத்தத்தின் சார்பாக அதன் தலைவர் த.பழனிச்சாமி தலைமையில், தொழிற்சங்க கொடியை அகில இந்திய அரசு பணியாளர் சங்கத்தின் நிர்வாகியான ஏ.பாஸ்கர் ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். இதில் சிபிஐ தென்சென்னை மாவட்ட செயலாளர் எஸ். ஏழுமலை, ஏஐடியூசி தென்சென்னை மாவட்ட செயலாளர் அழகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி மாநகர்:** தில்லை நகர் 22வது வார்டில் பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி தலைமையில், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் வெங்கடேசன் கொடியை ஏற்றி வைத்தார். 11வது வார்டில் ஏஐடியுசி பொதுச்செயலாளர் சுரேஷ் கொடி ஏற்றி வைத்தார். 10ஆவது வார்டில் மாவட்ட குழு உறுப்பினர் ஆயிஷா கமால் கொடியேற்றி வைத்தார். 9வது வார்டில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிவா கொடி ஏற்றி வைத்தார். 8வது வார்டில் மாவட்ட குழு உறுப்பினர் வை.புஷ்பம் கொடியேற்றி வைத்தார். 24வது வார்டில் பகுதி செயலாளர் சுரேஷ் முத்துசாமி ஏற்றிவைத்தார். 23வது வார்டில் கொடியினை மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.செல்வராஜ் ஏற்றிவைத்தார். குறத்தெரு ஆட்டோ ஓட்டுனர் சங்கம் சார்பில் கொடியினை வங்கி ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ராம்ராஜ் ஏற்றி வைத்தார். நிகழ்வுகளை அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் க.இப்ராகிம் ஒருங்கிணைத்தார். இறுதியாக உறையூர் குறத்தெரு பகுதியில் நடைபெற்ற தெருமுனை கூட்டத்தில் மாநகர் மாவட்ட செயலாளர் ஏ.கே திராவிட மணி, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எம்.செல்வராஜ், ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுரேஷ் ஆகியோர் உரை நிகழ்த்தினர். கூட்டத்தில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாநிலத் தலைவர் வெங்கடேஷ் வேம்புலி சிறப்புரையாற்றினார்.

**மணிகண்டம்:** திருச்சி மாநகர் மாவட்டம் மணிகண்டம் ஒன்றியத் திற்குட்பட்ட அமைப்புகளின் சார்பில் கட்டட சங்க மாவட்ட துணைத் தலைவர் எம். மருதம்பாள் தலைமையில் கொடி ஏற்றப் பட்டது. சோமரசம்பேட்டையில் கட்சியின் மணிகண்டம் ஒன்றிய துணைச் செயலாளர் எம்.ஆர்.முருகன் கொடியேற்றினார். ஏஐடியுசி அலுவலகத்தில் சங்க கொடியினை கட்டட சங்க ஒன்றிய பொருளாளர் எஸ்.முத்தழகு ஏற்றினார். நாடார் சத்திரம் பேருந்து நிலையம் அருகில் கொடியினை கட்சியின் ஒன்றிய பொருளாளர் எஸ்.முத்துலெட்சுமி ஏற்றினார். வாசன் சிட்டி ஆட்டோ ஸ்டாண்ட் கொடியினை கிளை பொருளாளர் ஏ.எஸ்.ராஜா ஏற்றிவைத்தார்.

நாச்சிகுறிச்சியில் கட்சியின் கொடியினை பி. குமரேசன் ஏற்றிவைத்தார். ஜோதி நகர் பாரதிநகர் கட்டட சங்க கொடியினை டி.நிர்மலா ஏற்றிவைத்தார். பஞ்சாயத்து அலுவலகம் ஆட்டோ ஸ்டாண்ட் கொடியினை என்.ரவிக்குமார் ஏற்றிவைத்தார்.

**திருச்சி புறநகர்:** மணப்பாறை கட்சி அலுவலக வளாகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஏ.ஐ.டி.யூ.சி. சார்பில் கொடி ஏற்று விழா நடைபெற்றது. ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமை வகித்து கட்சி கொடியை ஏற்றிவைத்தார். நகர செயலாளர் ஜனசக்தி உசேன், ஏ.ஐ.டி.யூ.சி. மாவட்ட துணைச் செயலாளர் சுப்ரமணியன் ஆகியோர் மேதின உரை நிகழ்த்தினர். நகராட்சி அலுவலகம் முன்பு உள்ளாட்சி பணியாளர்கள் சங்கக் கொடியை நகர் மன்ற உறுப்பினர் தங்கமணி ஏற்றிவைத்தார். தந்தை பெரியார் ஆட்டோ சங்க கொடியை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகர் மன்ற உறுப்பினர் மனோன்மணி ஏற்றிவைத்தார்.

திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் சௌக்கத்அலி கட்சி கொடியை ஏற்றிவைத்தார்.

பேருந்து நிலையம் முன்பு கட்சி கொடியை மாவட்ட குழு உறுப்பினர் சுப்ரமணியன் ஏற்றிவைத்தார். ஆட்டோ சங்க கொடியை அமைப்புச்சாரா சங்க செயலாளர் நல்லுச்சாமி ஏற்றிவைத்தார். திருச்சி சாலையில் உள்ள காந்தி சிலைமுன்பு நகர செயலாளர் ஜனசக்தி உசேன் கட்சி கொடியை ஏற்றிவைத்தார். ஆட்டோ சங்க கொடியை மணிகண்டன் ஏற்றி வைத்தார். போக்குவரத்துக்கழக பணிமனை முன்பு தங்கமணி கொடியை ஏற்றிவைத்தார். கோவில்பட்டி சாலை கடைவிதி ஆட்டோ சங்க கொடியை மாதர் சங்க நகர தலைவர் மனோன்மணி ஏற்றிவைத்தார். காமராஜ் சிலை அருகில் கொடியை தங்கமணி ஏற்றிவைத்தார். ஆட்டோ சங்க கொடியை மனோன்மணி ஏற்றிவைத்தார். விரலிமலை சாலையில் கொடியை கிருஷ்ண பெருமாள் ஏற்றிவைத்தார். மாவட்ட தலைமை மருத்துவமனை முன்பு கொடியை ஏ.ஐ.ஒய்.எஃப். ரேணுகா ஏற்றிவைத்தார்.

கோவிந்தரிஜாபுரத்தில் தங்கமணி கட்சி கொடியை ஏற்றிவைத்தார்.

நேருஜி நகரில் கட்சிகொடியை மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி ஏற்றிவைத்தார்.

பதினேட்டாவது வார்டு பகுதியில் கல்யாணசுந்தரம் கட்சி கொடியை ஏற்றிவைத்தார்.

மதுரைசாலை ஆட்டோ சங்கம் அபுபக்கர், ஆட்டோ சங்கம் பெரியசாமி, பேருந்து நிலையம் ஆட்டோ சங்கம் சூசை, திருச்சி




சாலை ஆட்டோ சங்கம், ஷாஜகான், கோவில்பட்டி சாலை கடைவிதி ஆட்டோ சங்கம் கமல், ஆட்டோ சங்கம் நிஜாம், மாவட்ட தலைமை மருத்துவ மனை ஆட்டோ சங்கம் மணி, அமைப்புச்சார சங்கம் ரகுல், போக்குவரத்துக் கழகம் கண்ணன், உள்ளாட்சி தொழிலாளர்கள் சங்கம் அருணகிரி உட்பட கட்சி, சங்க நிர்வாகிகள் அனைத்து பகுதியிலும் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் காஞ்சிபுரத்தில் அனைத்து கிளைகளிலும் கொடியேற்றி இனிப்பு வழங்கப்பட்டது. ஜே.கமலநாதன், ஏ.மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பேரணி பொதுக்கூட்டம் காஞ்சிபுரத்தில் நடந்தது. டாக்டர் ஏ.ஆர். சாந்தி, சிஐடியு டி.ஸ்ரீதர், ஏஐடியூசி மூர்த்தி, சிறப்புரையாற்றினர்.

**மதுராந்தகம் :** செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியம் செய்யூர் அம்பேத்கர் நகர் கிளை, மாமண்டூர் தேசிய நெடுஞ்சாலை செக்போஸ்ட் அருகில் செயலாளர் செ.இன்பராஜ் தலைமையில் நடைபெற்றது. கட்சி கொடியினை மாவட்ட துணை செயலாளர் க.ஜெகதிசன் ஏற்றிவைத்தார். தண்ணீர் பந்தலை மாவட்ட குழு உறுப்பினர் மு.பார்த்தீபன் திறந்து வைத்தார். இதில் இளைஞர் பெருமன்றம் மாவட்ட தலைவர் கே.வி.சேகுவேராதாஸ் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

**பல்லாவரம்:** காஞ்சிபுரம் – செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் ஆலந்தூர் தொகுதிக்கு உட்பட்ட நாகல்கேணி, பல்லாவரம் பேருந்து நிலையம் க.பல்லாவரம் ஆகிய 4 இடங்களில், தொகுதி செயலாளர் ஏழுமலை, ஜனசக்தி இதழாளர் இசைக்கும்மணி, மாதர் சங்கத்தின் தரணி அம்மாள், பல்லாவரம் கிளைச் செயலாளர் ரவி ,ஆலந்தூர் தொகுதி செயலாளர் முனுசாமி ஆகியோர் மேதினக் கொடியை ஏற்றி வைத்தனர். மாவட்டக்குழு உறுப்பினர் ஜா.பூபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இளைஞர் பெருமன்ற தலைவர் பிரவீண் குமார், செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட பலரும் பங்கேற்று முழக்க மிட்டனர். மாங்காடு கிராமத்தில் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநில செயலாளர் வழக்கறிஞர் கீ.சு.குமார் மே தின கொடியேற்றி உரை நிகழ்த்தினார். ஹரிஹரன் ஏற்பாட்டில் கணேசன், ரவி, வீரமணி, அமலா, நிர்மலா, குமரன் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

**நெல்லை:** செங்கோட்டை மேலபஜார் காந்தி சிலை முன்பு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கொடியேற்று விழா நடந்தது. சிபிஐ நகரச்செயலாளர் சுப்பிரமணியன் தலைமை தாங்கினார். நகர துணைச் செயலாளர் ஆழ்வார் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் மாநிலக்குழு உறுப்பினர் பிஎஸ்எஸ்.போஸ், தாலுகா செயலாளர் மாரியப்பன், கல்யாணி, தாலுகா உதவி செயலாளர் பழனிச்சாமி கலந்து கொண்டனர். அதனை தொடர்ந்து செங்கோட்டை நகராட்சி அலுவலகம் முன்பு ஏஐடியுசி மாவட்டத்தலைவர் ஏ.சாமி, காளியப்பன் தலைமையில் கொடியேற்றப்பட்டது. தேன்பொத்தையில் செல்லையா தலைமையிலும், புளியறையில் கருப்பையா, பண்டார நம்பியார் தலைமையிலும், வல்லத்தில் ஏஐடியுசி நிர்வாகிகள் தலைமையிலும் கட்சி கொடியேற்றப்பட்டது.

**அரியலூர் :** அரியலூரில் நகராட்சி அலுவலகம் முன்பு, ஏஐடியுசி சுகாதார தொழிலாளர்கள் சங்கம் சார்பாக மாவட்ட பொதுச் செயலாளர் டி.தண்டபாணி கொடியை ஏற்றி, மே தின வரலாறை விளக்கி பேசினார்.

அரியலூர் பேருந்து நிலையம் அண்ணா சிலை அருகில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கொடியை பாண்டியன் ஏற்றினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் டி.தண்டபாணி உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஏஐடியுசி அலுவலகத்தின் முன்பு கட்சிக்கொடியை மாவட்டத் துணைச் செயலாளர் டி.தண்டபாணி ஏற்றினார். ஏஐடியுசி கொடியை சிபிஐ நகர கிளை து.பாண்டியன் கொடியேற்றினார்.

**தருமபுரி:** பென்னாகரம் பஸ் நிலையம் அருகில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு வட்டார செயலாளர் முனியப்பன் தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் கட்சி கொடியை ஏற்றி வைத்து மே தின சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.கலைச்செல்வன், சி.மாதையன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். போடூர் 4 ரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நகர செயலாளர் பி.விஜயபாரதி தலைமையில் மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன் கட்சி கொடி ஏற்றினார்.

பென்னானாகரம் தாலுகா ஆபிஸ் அருகில் கிளை செயலாளர் சரவணன் தலைமையில் வட்டார செயலாளர் முனியப்பன் கட்சி கொடி ஏற்றி பேசினார். நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் தேவராசன், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கலைச்செல்வன், மாதையன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நாச்சானூரில் சி.மாதையன் கொடி ஏற்றி வைத்து பேசினார்.மேலும் பென்னாகரம் வட்டாரத்தில் தேவனாம்பட்டி, கே.அக்ராகரம், பி.அக்ராகரம்,ராஜாவூர், ராஜாவூர் காலனி,பள்ளத்தூர், தாசம்பட்டி, எழுமல்மந்தை, நாகனூர், கோடாரம்படடி, ஒகேனக்கல், நாகனம்பட்டி உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் கட்சி கிளை செயலாளர்கள் கொடி ஏற்றி கொண்டாடினர்.

நல்லம்பள்ளியில் வட்டார செயலாளர் எல்.ஆர்.கிருஷ்ணராஜ் தலைமையிலும், இண்டூரில் வட்டார பொறுப்பாளர் எம்.சிவன் தலைமையிலும், பண்டஅள்ளியில் வட்டார பொருளாளர் மாதையன் தலைமையிலும் மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் கொடி ஏற்றி பேசினார்.

அரூர் ரவுண்டானாவில் வட்டார செயலாளர் அல்லிமுத்து தலைமையில் மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன் கொடி ஏற்றி பேசினார். அரூர் பஸ் நிலையம் அருகில் நகர செயலாளர் முருகன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

பாப்பாரப்பட்டி வட்டாரத்தில் செயலாளர் பெருமாள், தண்டுகாரனஅள்ளி, அம்மன்நகர், பாப்பாரப்பட்டி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட இடங்களில் கொடி ஏற்றினர்.

சின்னம்பள்ளி வட்டாரத்தில் வட்டார செயலாளர் சிவன் தலைமையில் சின்னகடமடை,கடமடை உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட கிளைகளில் மே தின விழா கொண்டாடப்பட்டது.

ஏரியூர் வட்டார பொறுப்பாளர் விடுதலை விரும்பி தலைமையில், காரிமங்கலத்தில் வட்டார செயலாளர் கோபால் தலைமையிலும், பாலக்கோட்டில் வட்டார செயலாளர் மகாதேவன் தலைமை யிலும்,பாப்பிரெட்டிப்பட்டியில் வட்டார செயலாளர் சுப்ரமணி தலைமையிலும், தீர்த்தமலையில் வட்டார செயலாளர் கல்யாணசுந்தரம் தலைமையில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் சி.விஸ்வநாதன் கொடி ஏற்றி பேசினார். மொரப்பூர் உள்ளிட்ட மாவட்டத்தில் அனைத்து கிளைகளிலும் கட்சி கொடி ஏற்றி மே தின விழா கொண்டாடப்பட்டது.

நாகதாசம்பட்டி பெட்ரோல் பங்க் அருகில் புதிய கிளை துவங்கி கட்சி கொடி ஏற்றப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு குமார் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் தேவராசன் கட்சி கொடி ஏற்றி பெசினார்.மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.கலைச்செல்வன்,சி.மாதையன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**இலளிகம்:** தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் இலளிகம் கிளை சார்பில் சங்க ஒன்றிய தலைவர் எல்.சி.கிருஷ்ணன் தலைமையில் மே தின கொடியை சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் ஏற்றி வைத்து உரையாற்றினார்.

**திருப்பூர் :** திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகரில் உள்ள தாலூகா கமிட்டி அலுவலகத்தில் கொடி ஏற்றி வைக்கப்பட்டது. அதை தொடர்ந்து உடுமலைப்பேட்டை பஸ்நிலையம், அண்ணா குடியிருப்பு, எஸ்.வி.மில்.வாய்க்கால் பாலம், பெரிய கோட்டை பிரிவு, ஜெ.ஜெ.நகர், கணேசாபுரம், எஸ்.வி.புரம், தும்பலப்பட்டி, குடிமங்கலம், பெதப்பம்பட்டி, கணியூர், மடத்துக்குளம் உள்ளிட்ட அனைத்து கிளைகளிலும் கொடி யேற்றி மே தினம் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட குழு உறுப்பினர் வி.சௌந்தரராஜன், இடைகமிட்டி செயலாளர் ரணதேவ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மாலையில் உடுமலைப்பேட்டை நகரில் மே தின ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் ஏஐடியூசி, சிஐடியூ சங்கங்கள் இணைந்து நடத்தினர்.



**ஈரோடு வடக்கு:** பவானி புதிய பேருந்து நிலையம் ஜீவா சுமைதூக்கும் தொழிலாளர் சங்கம், ஜீவா தள்ளுவண்டி வியாபாரிகள் சங்கம், அந்தியூர் மேட்டூர் பிரிவு ஜீவா சுமை தூக்கும் தொழிலாளர் சங்கம், பவானி தினசரி மார்க்கெட் ஜீவா சுமை தூக்கும் தொழிலாளர் சங்கம், வி.என்.சி. கார்னர் ஜீவா மினி டெம்போ ஓட்டுனர் தொழிலாளர் சங்கம், அந்தியூர் மேட்டூர் பிரிவு, ஜீவா டீசல் ஆட்டோ ஓட்டுனர் சங்கம், பவானி அரசு மருத்துவமனை ஜீவா, மினி டெம்போ ஓட்டுனர் சங்கம், காடையம்பட்டி, சேர்வராயன் பாளையம், செங்காடு சுமைதூக்கும் தொழிலாளர் சங்கம், விறகு இருக்கும் தொழிலாளர் சங்கம், ஜம்பை ஜீவா சுமை தூக்கும் தொழிலாளர் சங்கம் சார்பில் மே தின கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கப்பட்டது.

மே தின கொடியேற்று விழா நிகழ்ச்சிக்கு ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எல்.சிவராமன் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது. கே.சந்திரசேகர், இ.சண்முகசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**மயிலாடுதுறை:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் மே தின ஊர்வலம் மற்றும் பொதுக்கூட்டம் ஏ.ஐ.டி.யூ.சி சார்பில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் ராமன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாவட்ட செயலாளர் சீனிவாசன், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு சிறப்புரையாற்றினார்.

**கடலூர்:** கடலூரில் மே தின பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஏஐடியூசி சார்பில் த.லெனின், சிஐடியூ சார்பில் ஜி.சுகுமாறன் ஆகியோர் பங்கேற்று பேசினர்.

**சேலம்:** சேலம் மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.முனுசாமி தலைமையில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் கொடி ஏற்றி வைத்து உரையாற்றினார். மாவட்ட பொருளாளர் எம்.ராமன் மேதின உரையாற்றினார். அலுவலக செயலாளர் டி.பி.கருணைதாஸ் நன்றி கூறினார். நங்கவள்ளி ஒன்றியத்தில் மாநில குழு உறுப்பினர் பழ.ஜீவானந்தம், ஒன்றிய துணைச் செயலாளர்கள் எம்.சின்னத்தம்பி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு 65 இடங்களில் கொடியேற்றினர். பனைமரத்துப்பட்டிவீரபாண்டி ஒன்றியத்தில் மாநில குழு உறுப்பினர் பி.சங்கீதா பாலதண்டாயுதம், ஒன்றிய செயலாளர் எம்.பாலன், ஒன்றிய துணைச்செயலாளர்கள் எஸ்.தனக்கோட்டி, பா.தினேஷ் ஆகியோர் 45 இடங்களில் கொடி ஏற்றி வைத்தனர்.

கொண்டலாம்பட்டி மண்டலத்தில் மாநில குழு உறுப்பினர் ப.பரமசிவம், மண்டல செயலாளர் ஏ.கந்தன் ஆகியோர் 17 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

அயோத்தியாபட்டணம் வாழப்பாடி ஒன்றியத்தில் மாவட்ட துணைச் செயலாளர் டி.கண்ணன், ஒன்றிய செயலாளர் ஜி.ராஜா ஆகியோர் 23 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

தலைவாசல் கெங்கவல்லி ஒன்றியத்தில் ஒன்றிய துணை செயலாளர் பி.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஜி.வி.நாகராஜ், மாவட்டக்குழு உறுப்பினர் என்.சிவராமன், தா.வீராசாமி ஆகியோர் 8 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

சூரமங்கலம் மண்டலத்தில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாவட்ட பொருளாளர் எம்.ராமன், மண்டல செயலாளர் எம்.ராஜமாணிக்கம் ஆகியோர் 16 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

ஆத்தூர் வட்டத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் என்.எம்.சடையன், ஈ.ஆர்கே, கவிதா செல்லப்பன், ஒன்றிய செயலாளர் ஆர்.பொன்னுசாமி ஆகியோர் 14 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

சேலம் ஒன்றியத்தில் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.பி.கே.ராமச்சந்திரன், ஒன்றிய செயலாளர் வி.ஜெயராமன், சேலம் ஒன்றிய துணை சேர்மன் அல்லி ஜெயராமன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் உ.கந்தசாமி, ஏ.கோவிந்தசாமி ஆகியோர் 12 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

மேட்டூர் மேச்சேரி இடைக்குழுவில் மாநில குழு உறுப்பினர் கே.வி.ராஜேந்திரன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.சி.வைத்தியலிங்கம், மாவட்டக்குழு உறுப்பினர் சி.கருப்புசாமி, மேச்சேரி ஒன்றிய செயலாளர் எஸ்.காத்தமுத்து ஆகியோர் 10 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் ஜெ.ஸ்டாலின், எஸ்.அய்யாவு ஆகியோர் 5 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

அஸ்தம்பட்டி மண்டலத்தில் மண்டல செயலாளர் ஆர்.எல். முத்துராஜகோபால், எஸ்.வடிவேல் ஆகியோர் 3 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

பெத்தநாயக்கன்பாளையம் நகரத்தில் நகர செயலாளர் எஸ்.முருகன், எம்.அர்ச்சுனன் தலைமையில் 3 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

ஓமலூர் காடையாம்பட்டி ஒன்றியத்தில் மாவட்ட நிர்வா கக்குழு உறுப்பினர் கே.ரங்கநாதன், மாவட்டக்குழு உறுப்பி னர்கள் வி.ஆர்.நடராஜன், ஆர்.மாரியப்பன் ஆகியோர் 6 இடங்களில் கொடியேற்றி வைத்தனர்.

**தென்காசி:** தென்காசியில் ஏஐடியுசி மாவட்ட தலைவர் சி.சுப்பிரமணியன், சிஐடியு மாவட்ட தலைவர் அயுப்கான் ஆகியோர் தலைமையில், அலங்கார் நகரிலிருந்து புதிய பேருந்து நிலையம் வரை மே தின பேரணி நடைபெற்றது. ஏஐடியுசி மாவட்ட செயலாளர் தி.சுப்பையா சிஐடியு மாவட்ட செயலாளர் எம்.வேல்முருகன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பொதுக்கூட்டத்தில் ஏஐடியுசி தலைவரும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளருமான த.இசக்கித்துரை, சிஐடியு தலைவரும் சிபிஎம் மாநில குழு உறுப்பினருமான பி.சுகந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஏஐடியுசி மாவட்ட பொருளாளர் கிருஷ்ணசாமி, ஏ.சாமி ஆகியோர் மே தின உரையாற்றினர்.

ராயகிரியில் நகர செயலாளர் சமுத்திரம் தலைமையில் நகரிலுள்ள அனைத்து இடங்களிலும் மே தின கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சங்கரையா, ராமசாமி துணைச்செயலாளர் சொரிமுத்து, மாவட்ட குழு உறுப்பினர் சமுத் திரக்கனி உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.

சிவகிரியில் நகர செயலாளர் பி பாலசுப்பிரமணியன் தலைமையில் கொடியேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் விவசாய சங்க தலைவர் ராஜேந்திரன், விவசாய தொழிலாளர் சங்கம் வேலுச்சாமி, ஏஐடியுசி மாவட்ட துணை தலைவர் வேல்முருகன் ஆகியோர் பங்கேற்றனர்.

வாசுதேவநல்லூர் ஒன்றியத்திற்குட்பட்ட புளியங்குடி, வாசுதேவநல்லூர், தென்மலை, இடையன்குளம், துரைச்சாமிபுரம் கிளைகளிலும் மற்றும் புளியங்குடி கார் ஓட்டுநர் சங்கம் புளியங்குடி அரசு போக்குவரத்து கழக பணிமனை ஆகிய இடங்களிலும் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் சுப்பையா மற்றும் ஒன்றிய செயலாளர் ப.வேலு ஆகியோர் பங்கேற்றனர்.

தென்காசி தாலுகாவில் தாலுகா செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா தலைமையில் ஆயிரப்பேரி நன்னகரம் காசிமேசபுரம் ஆகிய கிளைகளில் மேதின கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.


கடையம் ஒன்றியம் கீழ ஆம்பூர் ஆழ்வார்குறிச்சி பகுதிகளில் கொடியேற்று நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பரமசிவன் மற்றும் ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விகேபுரம் தாலுகா பகுதியில் தாலுகா செயலாளர் ஐயப்பன் தலைமையில் கொடி ஏற்றும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் ரத்தினசாமி, முருகன், மாரித்துரை மற்றும் ஏராளமானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

கடையநல்லூர் ஒன்றியம் அச்சன்புதூர் மற்றும் ஆயக்குடி பகுதிகளில் ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா தலைமையில் கொடி ஏற்றும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. தென்காசி நகர குழு சார்பில் செயலாளர் கணேசன் தலைமையில் கொடி ஏற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.

**வேலூர்:** திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் நகராட்சி ஏஐடியூசி சார்பில் பஸ்நிலையத்திலிருந்து மேதின ஊர்வலம் நடைபெற்றது. கோவிந்தன் தலைமை தாங்கினார். பேரணியை சிபிஐ நகர செயலாளர் பாரத்பிரபு துவைக்கி வைத்தார். பேரணி ஆம்பூர் நகராட்சி முன்பாக வந்தது. அங்கு பாலகிருஷ்ணன் கொடியேற்றி வைத்தார். ஏஐடியூசி மாநில துணை தலைவர் எஸ்.ஆர்.தேவதாஸ் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்.

வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு நகரத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் நகர செயலாளர் ஜி.எஸ்.மூர்த்தி தலைமையில், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் நா.சே.தலித் பாஸ்கர் முன்னிலையிலும் தொழிற்சங்க கொடியை பி.ஆர்.சுப்ரமணி ஏற்றினார்.



**தொழிலாளி வர்க்கம் ஒருமுறை அதிகாரத்திற்கு வந்துவிட்ட பின்பு பழைய அரசு இயந்திரத்தை அப்படியே வைத்துக்கொண்டு தொடர்ந்து செயல்பட முடியாது. பெற்ற வெற்றியை இழக்காமல் இருக்க அரசு இயந்திரத்தை மாற்றி அமைத்து செயலாற்ற வேண்டும். - மார்க்ஸ்**

# தேர்த்திருவிழாவில் மின்சாரம் தாக்கி 11 பேர் உயிரிழப்பு

## ● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

தஞ்சாவூர் மாவட்டம், களிமேடு கிராமத்தில் நடந்த தேர்திருவிழாவில், உயர் அழுத்த மின்பாதையில், அலங்கரிக்கப்பட்ட தேரின் உச்சிப் பகுதி உரசியதால் ஏற்பட்ட தீ விபத்தில் சம்பவ இடத்திலேயே 11 பேர் உயிரிழந்துள்ளனர் என்ற துயரச் செய்தி ஏற்படுத்திய அதிர்ச்சியால் நெஞ்சு பதறுகிறது. மேலும் பதினாறு பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவல் வேதனையளிக்கிறது.

ஊர் மக்கள் ஒன்று கூடி தேர் இழுக்கும் ஒற்றுமை பண்பாட்டு விழா சோகமயமாகி விட்டது. உயிரிழந்துள்ள குடும்பங்களுக்கு அரசு நிவராண நிதி அறிவித்திருப்பதும், அமைச்சர் நேரில் விரைந்து மருத்துவ உதவி உட்பட நிவாரணப் பணிகளை மேற்கொள்வதும் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் அளிக்கும். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த அனைவருக்கும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# அறிவியல் கருத்துக்களை சிதைக்கும் ஒன்றிய அரசு

## ● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

சிபிஎஸ்இ என்கிற பள்ளிக்கல்விக்கான மத்திய பாடத்தில் அறிவியல் கருத்துக்கள் கொண்ட பாடங்களும், ஆதாரப்பூர்வமான வரலாற்று பாடங்களும் ஒன்றிய அரசால் நீக்கம் செய்யப்படுகிறது. பதினொன்று மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான பாடத்திட்டத்தில் இருந்து இஸ்லாமிய பேரரசுகளின் வரலாறு, நீதிமன்றங்களின் வரலாறு மற்றும் தொழில் புரட்சி குறித்த பாடங்கள் நீக்கப்பட்டுள்ளன. மதச்சார்பின்மையின் மகத்துவத்தை பெருமைபடக் கூறும் உருதுக் கவிஞர் பையாஸ் அகமதுவின் இரண்டு கவிதைகளையும், ஜனநாயகம், பன்முகத்தன்மை ஆகிய பாடங்களும் நீக்கப்பட்டுள்ளன. வரும் கல்வி ஆண்டில் தேசிய வாதம், மதச்சார்பின்மை போன்ற பாடங்களும் சமூக அறிவியல் பாடங்களும் நீக்கப்படுகின்றன. பள்ளிக் கல்வி நிலையிலேயே பிஞ்சு மனங்களில், மதவெறி நஞ்சூட்டும் விபரீத செயலில் பாஜக ஒன்றிய அரசு ஈடுபட்டு வருகிறது. இது தனி நபரை மையப்படுத்தும், கொடுங்கோன்மை சர்வாதிகாரத்தை கட்டமைக்கும் பாசித் தன்மை கொண்ட செயலில் ஈடுபடுவதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அறிவியல், அரசியல் விஞ்ஞானம், வரலாறு போன்ற பாடங்களில் திருத்தம் செய்வதை உடனடியாக கைவிட வேண்டும் என ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# எம்.என்.எஸ். வெங்கட்ராமன் மறைவு

## ● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)யின் முன்னணித் தலைவர் தோழர் எம்.என்.எஸ். வெங்கட்ராமன் (65) மே 01 அன்று மதுரையில், மாரடைப்பால் காலமானார் என்ற செய்தி அறிந்து, அதிர்ச்சியுற்றோம்.

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி அருகில் உள்ள ரெட்டிபட்டி கிராமத்தில் 1957 ஆம் ஆண்டு பிறந்த, எம்.என்.எஸ். வெங்கட்ராமன் பள்ளிக்கல்வி முடிந்ததும் மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பொது வாழ்க்கையை தொடங்கியவர்.

விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டங்களில் மார்க்சிஸ்ட் கட்சி மற்றும் அதன் வர்க்க அமைப்புகளின் வளர்ச்சிக்கும், விரிவுபடுத்தும் முயற்சிகளில் முனைப்பாக ஈடுபட்டவர். இதனைத் தொடர்ந்து கட்சியின் அருப்புக்கோட்டை இடைக்குழு செயலாளர், 1994 முதல் 2001 வரை கட்சியின் விருதுநகர் மாவட்டச் செயலாளர் பொறுப்பில் செயல்பட்டு, 2001 ஆம் ஆண்டில் மாநில செயற்குழுவிற்கு தேர்வு செய்யப்பட்டு, அப்பொறுப்பில் இறுதி மூச்சு வரை சிறப்பாக பணியாற்றி வந்தவர்.

தீக்கதிர் நாளிதழின் துணைப் பொது மேலாளராக பொறுப்பேற்று செயல்பட்டு வந்தவர். மேதின நிகழ்ச்சிகளில் பங்கேற்று, மதுரை திரும்பிய நேரத்தில் திடீரென ஏற்பட்ட மாரடைப்பால் உயிரிழந்தார் என்பது ஆழ்ந்த வேதனையளிக்கிறது. கட்சி ஊழியர்கள் உடல் நலனிலும் தொடர்ந்து கவனம் செலுத்தி வர வேண்டும் என்பது படிப்பினையாகும். தோழர் எம்.என்.எஸ். வெங்கட்ராமன் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரை பிரிந்து வாடும் அவரது மனைவி, மகனுக்கும், மார்க்சிஸ்ட் தோழர்களுக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி

# மேதின வாழ்த்துக்கள்

சமூக வளர்ச்சியின் விசை உழைப்பு சக்திதான் என்பதை கண்டறிந்த பின்னர், உழைப்பு சக்தியின் உயிர் வடிவமாக உள்ள உழைக்கும் மக்கள் உரிமைகள் பெறும் முயற்சியில் ஈடுபட்டனர்.




அமெரிக்காவின் சிகாகோ நகரில், 1886 மே முதல் நாளில், உழைக்கும் மக்கள் முதன் முறையாக அமைப்பாய் திரண்டு வேலை நேரத்தை முறைப் படுத்தும், கோரிக்கைகளை முன் வைத்து, தெருக்களில் அணி வகுத்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். அன்று நடந்த தொழிலாளர் அணி வகுப்பு இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டது. முன்னணி தலை வர்கள் தூக்கிலிட்டு கொல்லப்பட்டனர்.

இதனால் எழுச்சி பெற்ற உழைக் கும் மக்கள் சாதி, மத, மொழி மற்றும் நாடுகளின் எல்லைகளை கடந்து, உலகம் முழுவதும் மே மாத முதல் நாளை உழைக்கும் மக்கள் உரிமைகள் பெறும் போராட்ட உறுதி ஏற்பு நாளாக ஆண்டுதோறும் மே தினமாக கடைபிடித்து வருகின்றனர்.

ஆதிப் பொதுவுடைமை சமூகம் மறைந்து, உழைப்பால் உருவாகும் சமூக செல்வத்தை மூலதன சக்தி கள் அபகரித்து வரும் ஆதிக்கம் தொடங் கிய, அந்த அடி நாள் தொடங்கி, மூலதன சக்திகள் ஆதிக்கத்தை முறியடிக்கவும், நீடித்த அமைதியும், நிலைத்த வளர்ச்சியும் காணும் சமூக சமத்துவம் கட்டமைக்க உழைக்கும் மக்கள் போராடி வருகின்றனர்.

உலகின் பல நாடுகளில் நிதி மூலதன சக்திகள், மனிதர்களை பிளவு படுத்தும் வலதுசாரி சக்திகளு டன் சேர்ந்து, கடுமையான சவாலாக வளர்ந்துள்ளது. உக்ரைன் நாட்டின் சுயசார்பை தகர்த்து, நேட்டோ கூட் டணியில் சேர்க்கும் அமெரிக்க ஏகா திபத்தியத்தின் நிர்பந்தமும், நவதாராள மயக் கொள்கையால் திவாலாகி, கொந்தளித்து நிற்கும் இலங்கை தீவின் சூழலும் மே தினத்தில் கருத்தில் கொள்ள வேண்டும்.

“ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வழங்குவோம், அனை வருக்கும் நல்ல நாட்கள் வருகின்றன” மற்றும் “விவசாயிகள் வருமானத்தை இரட்டிப்பு ஆக்குவோம்” என்ற வாய்ச் சவடால் முழங்கி, ஒன்றிய அரசின் அதிகாரத்தில் அமர்ந்த ஆர்.எஸ். எஸ். பாஜக ஆட்சி அதானி, அம்பானி வகையறா குழும நிறுவனங்களின் நிர்வாக முகமையாக செயல்பட்டு வருகின்றது. செல்வ உற்பத்தியின் உயிர் அடையாளமான தொழிலாளர், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் களை வஞ்சித்து வருகின்றது.

பாஜக ஒன்றிய அரசு சாதி, மத, சனாதனக் கற்பிதக் கருத்துக்களை சமூக வாழ்க்கை முறையாக்கும் முயற் சியில், நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தை சிதைத்து, சீர்குலைத்து வருகிறது. மாநிலங்களின் ஒன்றியம் நாடு என்பதை மறுத்து, மாநில உரி மைகளை தொடர்ந்து பறித்து, கூட் டாட்சி கட்டமைப்பை தகர்த்து வரு கிறது. பாஜக ஒன்றிய அரசின் மதவாத, வெறுப்பு அரசியலுக்கு எதிராகவும், பறிக்கப்படும் உரிமைகளை மீட்டெடுக்கவும் தொழிலாளர்களும், விவசாயிகளும் தீவிரமாக போராடி வருகின்றனர்.

நாட்டின் முதல் முறையாக மே தினத்தை கொண்டாடிய சிந்தனை சிற்பி மா. சிங்காரவேலு பிறந்த மண்ணில், அதன் நூற்றாண்டு தொடங் கும் தருணத்தில், தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற முற்போக்கு சக்திகள் மகத்தான வெற்றி பெற்று, நாட்டின் மதச் சார்பற்ற, ஜனநாயக சக்திகளை அணி திரட்டி வருவது நம்பிக்கை ஒளிச் சுடராக வெளிச்சம் தருகிறது.

அறிவியல் கருத்தாயுதம் தாங்கி, பகுத்தறிவுப் பாதையில் பயணித்து, கற்பித சாதி, மத, சனாதனக் கருத்துக் களை முறியடித்து, “யாதும் ஊரே; யாவரும் கேளிர்” என்ற தொன்மை மரபை முன்னெடுத்து, சமூக சமத்துவம் காண மேதின நாளில் உறுதி ஏற்று, இந்தியக் கம்யூ னிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு அனைத்துப் பகுதி மக்களுக்கும் மேதின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள மே தின வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# அதிகார அத்துமீறலில் எல்லை தாண்டும் ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் அறிவுரை

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவியின் அதிகார அத்துமீறலும், அலட் சியப்படுத்தலும் தொடர்ந்து வரும் நிலையில், அவரது அத்துமீறலுக்கு உச்சநீதி மன்றம் உரத்த குரலில் அறிவுரை வழங்கியுள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டிக்கப்பட்ட கு.பேரறிவாளன் உட்பட ஏழு பேர் விடுதலைப் பிரச்சினையில் தமிழ்நாடு ஆளுநர். தமிழ்நாடு அரசின் கோரிக் கையை ஏற்க மறுத்து வருகிறார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் இரு முறை தீர்மானங்கள் நிறைவேற்றியும், தமிழ்நாடு அமைச்சரவை 2018 செப் டம்பர் 9 ஆம் தேதி எழு பேர்களையும் விடு தலை செய்வது என முடிவு எடுத்து, நிர்வாக அதிகாரப்படி ஆளுநர் ஒப்புத லுக்கு அனுப்பி வைத்தது. புதிய அரசு அமைந்ததும் முதலமைச்சர், பிரத மரை சந்தித்து எழுவர் விடுதலை, நீட் விதிவிலக்கு உள்ளிட்ட கோரிக் கைகளை வலியுறுத்தியுள்ளார். ஆனா லும் தமிழக அரசின் முடிவுகள் மீது ஆளுநர் எந்த முடிவும் எடுக்காமல், குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். ஆளுநரின் இந்த நடவடிக் கைக்கு கடுமையான எதிர்ப்புத் தெரி விக்கப்பட்டது. இருப்பினும் மக்கள் உணர்வுகளை நிராகரித்து செயல் படுவதை தமிழக ஆளுநர் மாற்றிக் கொள்ளவில்லை.

இந்த நிலையில், பேறறிவாளன் விடு தலை குறித்து, உச்சநீதிமன்றம் விசாரித்து வரும் வழக்கில் “அமைச்சரவையின் முடிவுகளை ஏற்று செயல்படுவது ஆளுநரின் கடமைப் பொறுப்பாகும் என்பதை சுட்டிக் காட்டியுள்ளது. மேலும் மாநில அரசு நிர்வாக ரீதியான ஒப்புதல் வழங்கும் அரசியல் அதிகாரம் பெற்றுள்ள ஆளுநர், மாநில அரசு அனுப்பும் எல்லா மசோதாக்களையும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி விடுவது, தனது பொறுப்பை நிறைவேற்றாமல் தப்பித்துக் கொள்ளும் செயலாகும். இது கூட்டாட்சி தத்துவத்துக்கு வலுச் சேர்க்காது என உரத்த குரலில் அறிவுரை கூறி, பேரறிவாளன் விடுதலை குறித்து நிலவிவரும் குழப்பங்களுக்கு உச்ச நீதிமன்றமே அவரை விடுதலை செய்வது தான் தீர்வாக அமையும்” என கருத்துத் தெரிவித்துள்ளது. அதிகார அத்துமீறலில் எல்லை தாண்டி செயல்படும் ஆளுநர்களுக்கு அறிவுரையாக அமைந் துள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கருத்துக்களை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வரவேற்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி யுள்ளார்.

# பண்ணைத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்க

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வத்திடம் முறையீடு

வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களை தலைமைச்செயலகத்தில் சந்தித்து தமிழம் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் என்.பெரியசாமி முன் எம்.எல்.ஏ. திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, சங்கத்தின் மாநில செயலாளர் அ.பாஸ்கர், பண்ணை தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் யூ.அரசப்பன், கால்நடைப் பண்ணை செயலாளர் திருநாவுக்கரசு, கார்த்தி ஆகியோர் கோரிக்கை மனு கொடுத்தனர்.

அரசு வேளாண்மை துறையின் கீழ் செயல்படும் பண்ணைகளில் பணிபுரிந்து வரும் தினக்கூலி தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்திட கோரியும், முந்தைய கலைஞர் ஆட்சியில் வேளாண்மை துறை அமைச்சரான வீரபாண்டி ஆறுமுகம் அவர்களிடம் கோரிக்கை மனு கொடுத்தோம். அதன் அடிப்படையில் வேளாண்மை துறையின் கீழ் செயல்பட்டு வரும் அரசு விதைப்பண்ணைகளிலும், எண்ணை வித்து பண்ணைகள், பயிறு வகை பெருக்குப் பண்ணைகளில் 10 ஆண்டுகள் பணி புரிந்தவர்கள் விபரம் அரசால் கேட்கப்பட்டன.



ஆட்சி மாற்றத்தால் பணி நிரந்தரம் செய்யாமல் 10 ஆண்டுகளாக கிடப்பில்போட்டனர். அரசு பண்ணைகளில் நிரந்தரபடுத்த தகுதியுள்ளவர்கள் என ( 2006 ஆண்டு) 465 தொழிலாளர்கள் பட்டியல் இறுதிபடுத்தி வேளாண்மை துறையில் நிலுவையில் உள்ளது. இவர்களோடு நிரந்தரப்படுத்த தகுதி உள்ளவர்கள் என பட்டியல் பெறப்பட்ட வேளாண்மை பல்கலைக்கழக பண்ணைகள் மற்றும் தோட்டக்கலை பண்ணைகளில் . பணிபுரிந்த தினக்கூலி பணியாளர்கள் 2006 ஆம் ஆண்டு நிரந்தரப்படுத்தப்பட்டு 15 ஆண்டுகளுக்கு மேல் கடந்துவிட்ட நிலையில்.

வேளாண்மை துறையின் கீழ் செயல்பட்டு வரும் மேற்கண்ட பண்ணைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் நிலையை கருணையோடு பரிசீலிக்க வேண்டுகிறோம். எனவே வேளாண்மை துறையில் கீழ் இயங்கி வரும் விதைப் பண்ணைகள் பயறு வகை பெருக்க பண்ணை என்னைவித்து பண்ணைகளில் பணிபுரிந்து வரும் தொழிலாளர்களையும் நிரந்தரம் செய்திட வேண்டும் எனவும்,

தஞ்சை மாவட்ட கால்நடை பண்ணை நடுவூர் மற்றும் கால்நடை பண்ணை ஈச்சங்கோட்டை, தொழிலாளர்களையும் பணிநிரந்தரம் செய்வதில் முன்னுரிமை கோருதல் தொடர்பாக தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத்துறை, மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களிடமும் கோரிக்கை மனு வழங்கப்பட்டது.

நடுவூர், மற்றும் ஈச்சங்கோட்டை கால்நடை பண்ணைகளில் 132 பேர் தினக்கூலியாக பல ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றனர். தற்போது நியமிக்கப்பட உள்ள கால்நடை உதவியாளர் பணி இடங்களில் நேரடி பணி நியமனத்திற்கு நேர்முகத்தேர்வு நடைபெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு பண்ணைகளிலும் 132 தினக்கூலி பணியாளர்கள் பல ஆண்டுகளாக பணிபுரிந்து வருகின்றனர். தற்போது நியமிக்கப்பட உள்ள கால்நடை உதவியாளர் பணி நியமனத்தில் மேற்கண்ட தினக்கூலி பணியாளர்களுக்கு முன்னுரிமை அளித்து பணி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை மனு அமைச்சர்களிடம் வழங்கப்பட்டது.

செய்தி: அ.பாஸ்கர்

ப.பரமசிவம்

# ஜோதிமதி (எ) பானுமதி பல பரிமாணங்கள்!

**பானுமதி, பி.ஏ. படித்தவர். அம்மா, அப்பா ஆசிரியர்கள். நாமக்கல் மாவட்டம் முள்ளுகுறிச்சி சொந்த ஊர். தாய் தந்தையர் கூறிய மணமகனை திருமணம் செய்து கொண்டார். மூன்று குழந்தைகளும் பிறந்துள்ளது. கணவருக்கும் மனைவிக்கும் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.**

கணவரோடும், தாய் தந்தையரோடும் வாழாமல் தனியாக வாழ்ந்து காட்டுகிறேன் என்று வெளியேறி விட்டார்.

ராசிபுரத்தில் சிபிஐ(எம்) கட்சியில் சேர்ந்தும் ஜனநாயக மாதர் சங்கத்திலும் இணைந்து பணியாற்றி வந்தார். சாதாரண ஏழை மக்கள் குறிப்பாக பெண்கள் எங்கு பாதிக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் போய் நிற்பார்.

ராசிபுரத்திலிருந்து சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டியிலுள்ள மக்களுக்கு ஏதாவது பிரச்சனை என்றால் ஒடி வந்து உதவி செய்து கொண்டிருந்தார். அப்பொழுது பனமரத்துபட்டி ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் கே.பி.விஸ்வநாதன் கண்ணில் பட்டுள்ளார் பானுமதி. சாதாரண மக்களுக்காக காவல் நிலையத்தில் போராடுவதைப் பார்த்த கே.பி.வி. பானுமதியை விசாரித்துள்ளார். தன்னை அறிமுகம் செய்து கொண்டார் பானுமதி.

பனமரத்துபட்டி ஒன்றியம் கெஜல் நாயக்கன்பட்டி கிராமத்தில் வந்து அங்கு தங்கி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளைச் செயலாளர் பொன்னுசாமி அவர்களோடு இணைந்து செயல்பட்டார். பின்னர் சேலம் மாநகரம் சீலநாயக்கன்பட்டி குடிபெயர்ந்து விட்டார். எங்கள் வீட்டிற்கும் அடிக்கடி வருவார்.

பசி ஏற்படுகிற பொழுது எனது மனைவியை தேடி வந்து விடுவார். நான் வீட்டிற்கு வந்து புத்தக அலமாரியை பார்த்து என்ன புத்தகங்களை காணவில்லை பானுமதி வந்தாளா ன்று கேட்பேன். எனது மனைவி ஆமாம் என்பார். அதுதான் புத்தகங்களை காணோம் சுட்டுகிட்டு போயிட்டாள் என்று கூறுவேன்.

எங்கள் பகுதியில் இளைஞர் பெருமன்ற கிளை சார்பாக பகத்சிங் படிப்பகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. அதை தா.பாண்டியனும், இரா. நல்லகண்ணுவும் திறந்து வைத்தார்கள். எங்கள் வீட்டிற்கு பானு வந்தவுடன் அண்ணா படிப்பகம் திறந்திருக்கிறதா? என்று கேட்பார். அதற்கு நீயெல்லாம் வரக்கூடாது என்பேன் அதற்கு ஏன் நான் அங்கு வந்தால் புத்தகம் திருட்டுப் போய் விடுமா என்று கேட்பார். தேடி பிடித்து தனக்கு வேண்டிய புத்தகங்களை கொண்டு போய் விடுவார். எந்த போராட்டமானாலும் சரி 20, 30 பெண்களோடு



வந்து போராட்டத்தில் கலந்து கொள்வார். மாவட்டம் முழுவதும் எங்கு கட்சி வேலை சாதாரண மக்கள் சம்மந்தப்பட்ட நில தகராறு குடும்ப தகராறு எதுவாக இருந்தாலும் அதை ஒழுங்குபடுத்த துணிச்சலாக காவல் நிலையம் சென்று ஒழுங்குபடுத்துவார்.

பிறகு நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு சென்றார். அங்கு ஒரு வக்கீலிடம் குமாஸ்தாவாக பணிபுரிந்தார். அங்கும் மற்ற நேரங்களில் ஏழை பெண்களுக்கு வேண்டிய வேலைகளை செய்து கொண்டிருந்தார். தோழர் எஸ்.மணிவேலுவிடம் நல்ல நட்பாக இருந்து கட்சி பணியாற்றினார்.

**சேலம் மாவட்டம் தம்மம்பட்டி பக்கமுள்ள மல்லியக்கரை என்ற கிராமத்திற்குச் சென்று ஆதரவற்ற 30 குழந்தைகளை கொண்ட அன்னை இல்லம் துவக்கி அந்த குழந்தைகளுக்கு உணவு உடை கல்வி கொடுத்து அவர்களை ஆளாக்கி அந்த குழந்தைகளுக்கு தாயாகவே மாறி விட்டார்.**

அந்த குழந்தைகளை பார்த்து பானுமதி எங்கே என்று கேட்டால் எங்கம்மா வெளியில் போயிருக்கிறார்கள் என்று 30 குழந்தைகளும் கூறுவார்கள். அதன் பிறகு மங்களபுரம் என்ற கிராமத்தில் முதியோர் இல்லமும் நடத்தி முதியோர்களுக்கு மதிய உணவு மட்டும் கொடுப்பார். அங்கு இடம் போதாததால் பக்கத்திலுள்ள ராசிபுரம் பக்கமுள்ள மெட்டாலாவிலும் இதே பணிகளை செய்து வந்தார். இவ்வளவு வேலைகளுக்கிடையில் ஒய்வில்லாமலும் புத்தகங்களை படித்து கொண்டேயிருப்பார்.

சிறுசிறு வார, மாத பத்திரிகைளிலும் எழுதிக் கொண்டிருப்பார். அந்த புத்தகங்களை எனக்கு படித்து பார்த்து கருத்து சொல்லுங்கண்ணா என்று அனுப்பி வைப்பார். நீ ஏன் ஜனசக்திக்கு எழுதக் கூடாது என்று கூறினேன். நான் எழுதினா போடுவாங்களா என்று கேட்டார். போடுவாங்கம்மா உன்னுடைய எழுத்து இடதுசாரிகள் அனைவருக்கும் பிடிக்கும் நிறையப் படித்து பாராட்டுவார்கள் என்று கூறினேன். அதன்பிறகு ஜனசக்தியில் எழுத ஆரம்பித்தார். முதல் கட்டுரை வந்தவுடன் உலகமே தனதுகையில் வந்து விட்டதாக ஆனந்த கூத்தாடினார்.

அதன் பிறகு ஜனசக்தி பொறுப்பாசிரியர் ராஜ்மோகன் பாராட்டுவதுடன் மேலும் மேலும் ஊக்கப்படுத்தி எழுத வைத்தார். அதே போல் த.லெனினும் நல்லா எழுதியிருக்கிங்க தொடர்ந்து எழுதுங்கள் என்று ஊக்கப்படுத்தியதன் விளைவாக தொடர்ந்து நூலகத்திற்கு சென்று உலகத்தில் எங்கெல்லாம் பெண்கள் நாட்டுக்காக எப்படி தியாகம் செய்தார்கள் என்பதை படித்து படித்து வாரம் தோறும் எழுதி வந்தார். தமிழ்நாடு முழுவதும் இருந்த தலைவர்கள் இரா.நல்லகண்ணு உள்பட பாராட்டியதை கேட்டு விட்டு நல்ல உற்சாகத்தில் இருந்தார். அவரே ஒரு புத்தகமும் எழுதி அவரே வெளியிட்டார். தோழர் மகேந்திரன் தேசிய குழு உறுப்பினர் இதையெல்லாம் பார்த்து விட்டு பானுவை பாராட்டி தாமரையிலும் எழுத வைத்தார்.

கொரோனா 2வது அலையின் போது மே மாதம் 8ந் தேதி தோழர் சி.மகேந்திரன் எனக்கு போன் செய்து பானுமதி வாழப்பாடி யிலிருந்து போன் செய்தார், அவரால் பேச முடியவில்லை என்னை காப்பாற்றுங்கள் என்று மட்டும் தான் கூற முடிகிறது. அநேகமாக கொரோனா பாதிப்புக்கு உள்ளாகியிருப்பார் என்று கூறினார்.

எனது மகன் சதீஷ்பாலனையும் கொண்டலாம்பட்டி மண்டல துணை செயலாளர் எஸ்.எல்.தங்கமணியையும் சேலத் திலிருந்து மருந்தை வாங்கிக் கொண்டு சென்று அந்த மருந்தை கொடுத்துள்ளார்கள், அவரால் சாப்பிட முடியவில்லை. அதற்கு முன்பே வாழப்பாடியில் சி.மகேந்திரனுக்கு தெரிந்த ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். மருத்துவர்கள் பார்த்து விட்டு சாத்தியமில்லை என்றுகைவிரித்து விட்டார்கள்.

இளைஞர் பெருமன்ற மாநில செயலாளர் க.பாரதி வாழப்பாடிக்கு அன்று இரவே சென்று அங்குள்ள காவல்நிலைய அதிகாரிகள் மூலம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்துள்ளார். மே 9 2021ந் தேதி விடியற்காலை 6.00 மணிக்கு காவல்துறை மூலம் எனக்கும் போன் செய்தார்கள். பானுமதி இறந்து விட்டார்கள். அவர்கள் உறவினர்களிடம் கூறி வந்து பாடியை எடுத்து செல்லுங்கள் என்று கூறினார்கள். எனக்கு அவர்கள் உறவினர்கள் போன் நெம்பர் தெரியாது எப்படியோ தோழர் சி.எம். தான் அவர்களுடைய மகள், மகன்களின் போன் நெம்பர் கண்டுபிடித்து அவர்களுக்கு தகவல் கொடுத்து அவர்கள் வந்து அடக்கம் செய்தார்கள்.

ஜோதிமதி (எ) பானுமதி ஒரு பெண்ணாக இருந்து தனியாக இந்த சமுதாயத்தில் போராடி பல அனுபவங்களை கற்று, ஒரு எழுத்தாளராக மாறியவர். மே 9 அவரது நினைவுநாளில் நினைவு கொள்வது பொருத்தமாக இருக்கும்.

தொடர்புக்கு: **9442995040**

## நான்கு சட்டத் தொகுப்புகளை திரும்பப்பெற வலியுறுத்தி

# ஏஐடியுசி சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்




கட்டிட, உடலுழைப்பு தொழிலாளர் நல வாரியங்களை பாதுகாத்திட வேண்டும்; மத்திய அரசின் நான்கு, தொழிலாளர் சட்ட தொகுப்புகளை செயலாக்க மறுத்திட வேண்டும்; அந்த நான்கு சட்டத் தொகுப்புகளை திரும்பப்பெற வலியுறுத்தி சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை தமிழக அரசின் கவனத்திற்கு முன் வைத்து ஏஐடியுசி சார்பில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஈரோடு : ஈரோடு மாவட்டக்குழு சார்பில் ஈரோடு, சூரம்பட்டி நால்ரோட்டில் ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி தலைமையில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் ஆர்.திருநாவுக்கரசு, மாவட்டப் பொருளாளர் எஸ்.டி. பிரபாகரன், ஏஐடியுசி மாநிலக்குழு உறுப்பினர் வ.சித்தையன், மாவட்ட துணைத் தலைவர் டி.ஏ.செல்வம், மாவட்டச் செயலாளர்கள் வி.செல்வராஜன் மற்றும் எம்.குணசேகரன் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். ஆர்ப்பாட்டத்தில் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

கோவை: கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏ.ஐ.டி.யூ.சி. மாநில செயலாளர் எம்.ஆறுமுகம் தலைமை தாங்கினார்.

மாமன்ற உறுப்பினர் சாந்தி சந்திரன், மாவட்ட பொதுச்செயலாளர் சி.தங்கவேல், மவட்ட நிர்வாகிகள் கே.எம்.செல்வராஜ், ஆர்.பாலகிருஷ்ணன், சி.சிவசாமி, எம்.சண்முகம், டி.கந்தவேல், மு.வ.கல்யாணசுந்தரம், எஸ்.பி.தியாகராஜன், நந்தினி, ஜே.கலா, இப்ராகிம், உள்ளிட்ட வர்கள் கலந்து கொண்டனர்.

## துப்புறவு பணியாளர் பணிநீக்கம்: ஏஜடியூசி கண்டனம்

எடப்பாடி நகராட்சியில் மகளிர் சுயஉதவி குழு மூலம் பணியாற்றிய 30க்கும் மேற்பட்ட பெண்களை எந்தவித முன்னறிவிப்புமின்றி பணியை விட்டு நீக்கியதை கண்டித்து, ஏஐடியூசி சேலம் டிஸ்ட்ரிக்ட் கார்ப்பரேஷன் முனிசிபல் ஒர்க்கர்ஸ் யூனியன் தொழிற்சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் பி.சேகர், ஆர்.முருகேசன் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் பேசினார். இதில் ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் எம்.முனுசாமி ஏஐடியூசி மாநில நிர்வாக குழு உறுப்பினர் கே.வி.ராஜேந்திரன், தலைவர் பி.என்.பெரியசாமி, பொதுச்செயலாளர் பா.தினேஷ், பொருளாளர் எஸ்.வடிவேல், சின்னத்தம்பி, சுப்பிரமணி உள்ளிட்ட 150க்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 70. பெண்ணுக்காண் வைரி

**இன்னுலகம் ஈன்றளிக்கும் ஏத்திழைகான் எண்ணற்க**
**இன்துணையா ஆண்களை ஈங்கு**

இனிய உலகப் பெண்களே! சம உரிமைக் கொடுக் கும் இனிய வாழ்க்கைத் துணையாக ஆண்களை எண்ணி விடாதீர்கள் (எச்சரிக்கையாக இருங்கள்).

**இடங்கிடைத்த போதெல்லாம் ஆண்களார் பெண்கள்**
**அடக்கவல்லால் ஆற்றியதென் சான்று**

எப்பொழுது வாய்ப்பு கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம், ஆண்கள் பெண்களை, அடக்கி ஒடுக்கினார்களேயன்றி, வேறு எந்த நன்மையும் செய்யவில்லை.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

"இந்த ஆண்டு மே தினம் என்பது தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, விவசாயிகள் விரோத மற்றும் தேசவிரோத ஒன்றிய அரசுக்கு எதிரான போராட்ட நடவடிக்கைகளுக்கான ஒரு அறைகூவல்" என்று ஏஐடியூசி யின் அறைகூவல் முத்தாய்ப்பாக முதல் பக்கம் அமைந்துள்ளது.

– **செங்குட்டுவன்,** திருவான்மியூர்

**ஆசிரியர் ஜனசக்தி,**

கேரளா 1957 முதல் கம்யூனிஸ்ட் அரசின் வரலாற்று முக்கியத்துவம் என்ற அனில் ராஜிம்வாலே கட்டுரையில், கேரளாவில் முதல் கம்யூனிஸ்ட் அரசு அனுபவங்கள், நீண்ட காலம் நீடிக்கக் கூடிய நடைமுறை மற்றும் கோட்பாட்டு முக்கியத்துவம் உடையது. இது அடுத்தடுத்து வருகிற இடதுசாரி அரசுகளுக்கு பெரிய அனுபவத்தை கொடுத்தது என்பதை விளக்குகிறது.

– **முருகவேள்ராஜன்,** கோவில்பட்டி

**ஆசிரியர் ஜனசக்தி,**

திரும்பப் பெறப்பட்ட வேளாண் விரோத சட்டங்களை புதிய வடிவில் கொண்டுவர ஒன்றிய பாஜக அரசு முயற்சிக்கிறது. உச்சநீதிமன்ற பின்புற வழியை, நாடாளுமன்ற அவைகளில் நுழைவு வழிகளாய் வைத்து புதிய வேளாண் விரோத சட்டங்களை பிரசவிக்கத் துடிக்கிறது பாஜக அரசு.

அதை முளையிலேயே முறியடிக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுக்கிறார் பி.எஸ்.எம்.

– **குலசேகரன்,** ஆழ்வார் திருநகர்

**ஆசிரியர் ஜனசக்தி,**

கரண்ட் நிகழ்வுகள் பற்றிய கட்டுரைகள் ஜனசக்தியில் வெளிவருவது குறைந்துவிட்டது. தமிழ்நாட்டு அரசியல் பற்றி அதிகம் இடம்பெற வேண்டும். உச்சந்தலையில் ஓங்கி அறைவது போன்று பாலிமிக்ஸ் கட்டுரை வாரா வாரம் இடம்பெற வேண்டும்.

– **குன்னிராமன்,**வால்பாறை

# நூல் விலை உயர்வை கட்டுப்படுத்த கோரிக்கை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னிமலை ஒன்றியக்குழு கூட்டம் என்.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி கலந்து கொண்டு, கட்சியின் தேசிய, மாநிலக்குழு முடிவுகளை விளக்கிப் பேசினார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.பொன்னுசாமி தீர்மானங்களை முன்மொழிந்து பேசினார். ஒன்றியச் செயலாளர் மா.நாகப்பன், துணைச்செயலாளர் எம்.செங்கோட்டையன் மற்றும் ஒன்றியக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நூல்விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் கைத்தறி, விசைத்தறி, பனியன், ஆயத்த ஆடைகள் உள்ளிட்ட அனைத்து வகையான ஜவுளித் தொழில்களும் கடும் நெருக்கடிக்கு ஆளாகி உள்ளன. எனவே நூல்விலை உயர்வுக்கு காரணமான தவறான கொள்கைகளைக் மத்திய, மாநில அரசுகள் கைவிட்டு, நூல்விலை உயர்வைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




## மீன்பிடி தடைகால நிவாரணத்தை அதிகப்படுத்துக

### மீனவ தொழிலாளர் சங்கம் கோரிக்கை

தூத்துக்குடி ஹார்பர் யூனியன் ஏஐடியுசி அலுவலகத்தில், தமிழ்நாடு ஏஐடியுசி மீனவர் தொழிலாளர் சங்கத்தில் புதிய உறுப்பினர்கள் இணைந்த கலந்தாய்வுக் கூட்டம், நாட்டுப்படகு தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட தலைவரும், தமிழ்நாடு ஏஐடியுசி மீனவர் தொழிலாளர் சங்கத்தின் மாநிலக்குழு உறுப்பினருமான எம்.முனியசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஏஐடியூசி மாவட்ட தலைவர் பாலசிங்கம், ஏஐடியுசி உப்பு தொழிலாளர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் பரமசிவம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் நகர செயலாளர் ஞானசேகர், தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் மாநில செயலாளர் சி.செல்வம், சங்க சம்மேளனத்தின் மாநில பொதுச்செயலாளர் பி. சின்னதம்பி உள்ளிட்ட, சங்க நிர்வாகிகள் மற்றும் புதிய மீனவ தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்றிய அரசு தொழிலாளர்களுக்கு விரோதமாக கொண்டுவந்துள்ள தொழிலாளர் சட்ட தொகுப்புகள் நான்கையும் உடனடியாக கைவிட வலியுறுத்தி வரும் ஏப்ரல் 22 ஆம் தேதி தமிழகம் தழுவிய அனைத்து தொழிற்சங்கத்தின் சார்பில் நடைபெற இருக்கும் ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு ஏஐடியுசி மீனவர் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் அனைத்து மீனவர்களையும் ஒன்று திரட்டி இயக்கத்தில் பங்கு பெறுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தலைமையில் மீனவர் குறைதீர் கூட்டம் நடத்தப்பட வேண்டும்.

மீன்பிடி தடைக்கால நிவாரண அறிவிக்கப்பட்டுள்ள சூழலில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.500 வீதம் 61 நாட்களுக்கு ரூ.30,500 ஆக மீன்பிடி தடைக்காலம் நிவாரணத்தை உயர்த்தி வழங்கிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மாமேதை லெனின் பிறந்த நாள் விழா

மாமேதை லெனினின் 153 வது பிறந்த நாள் விழா தமிழகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாமேதை லெனின் பிறந்த நாளில் அவரது படத்திற்கு மலரஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் வி.இரவி, நகர செயலாளர் பி.கே. விஜயன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர்:** திருவாரூரில் இந்திய கம்யூனிஸ்ட்கட்சி மாவட்ட குழு அலுவலக வாயிலில் நடைபெற்ற பிறந்தநாள் கூட்டத்துக்கு நகரச்செயலாளர் எம்.ஏ.மாரியப்பன் தலைமையேற்றார். லெனின் திருஉருவப்படத்துக்கு மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் பி.எஸ். மாசிலாமணி மலர் தூவி சிறப்பு செய்தார். மாநிலக்குழு உறுப்பினர் சந்திரசேகர் ஆசாத் முன்னிலை வகித்து அனைவரையும் வரவேற்றுப்பேசினார். மாவட்டக்குழு உறுப்பினர் கேசவராஜ், அறிவழகன், செல்லமணி, செல்வம், தோழர்களுடன் நகரக்குழு தோழர்கள் துரை இசாக், பாலதண்டாயுதம், புஷ்பவள்ளி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். இறுதியில் 'மனிதாபிமானமும் மாமேதையின் போர்க்குணமும்'' என்ற தலைப்பில் நகர செயற்குழு உறுப்பினர் வீ.தர்மதாஸ் பேசினார். மகாலிங்கம் நன்றி கூறினார்.

## கல்பாக்கத்தில் கட்சி கொடியேற்று விழா

செங்கல்பட்டு மாவட்டம், புதுப்பட்டினம் கல்பாக்கம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கட்சி அலுவலக பெயர் பலகை மற்றும் கட்சி, ஏஐடியூசி கொடிகள் ஏற்றுவிழா நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு செய்யூர் சட்டமன்ற தொகுதி செயலாளர் கே.இ.ரவி தலைமையில் கட்சி கொடியை மாவட்ட துணை செயலாளர் பி.எஸ்.எல்லப்பன் ஏற்றினார். அலுவலக பெயர்ப் பலகையை மாவட்ட துணைச் செயலாளர் க.ஜெகதீசன் திறந்து வைத்தார். ஏஐடியூசி கொடியை அதன் மாவட்ட செயலாளர் வி.ஆதிமூலம் ஏற்றினார். இந்த நிகழ்ச்சியில் தோழர்கள் கா.ராமதாஸ், சங்கர், சரத், கனகராஜ், பொன்னுசாமி உள்ளிட்ட முன்னணி தோழர்கள் கலந்து கொண்டனர்.

# மூலப்பொருள் விலை உயர்வால் அழிந்துவரும் சிறு, குறுந்தொழில்கள்

### டாக்ட் சங்க அலுவலகத் திறப்பு விழாவில் ஏ.எஸ்.கண்ணன் பேச்சு



மூலப்பொருட்கள் விலை உயர்வால் சிறுகுறு நடுத்தர தொழில்கள் அழிந்து வருவதாக சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் தமிழ்நாடு கைத்தொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர் சங்கத்தின் தலைவருமான ஏ.எஸ்.கண்ணன் கூறினார்.

அம்பத்தூர் தொழிற்பேட்டையில் மே 2 அன்று புதிய அலுவலகத் திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சங்கத்தின் தலைவர் ஏ.எஸ்.கண்ணன் தலைமை தாங்கி னார். டான்ஸ்டியா முன்னாள் தலைவர் கே.வி.கனகாம்பரம் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார். சிட்கோ கிளை மேலாளர் ஆர்.பாரதி குத்துவிளக்கேற்றினார். நிகழ்ச்சியில் ஏ.எஸ்.கண்ணன் பேசுகையில், ஒன்றிய அரசு கொண்டுவந்த பணமதிப்பிழப்பு நடவடிக்கை, ஜிஎஸ்டி போன்றவற்றால் சிறு குறுந்தொழில்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பெரிய நிறுவனங்களில் இருந்து ஜாப் ஒர்க் எடுத்து செய்கிறோம். அதற்கு 18 விழுக்காடு ஜிஎஸ்டி வரி வசூலிக்கப்படுகிறது.

மூலப் பொருட்களின் விலை உயர்வு, இரும்புத்தாது, நிலக்கரி விலை, மின்சாரக்கட்டணம், போக்கு வரத்துக் கட்டணம், பெட்ரோலியப் பொருட்களின் விலை ஆகியவற்றை சார்ந்ததாக உள்ளது. இந்தியாவில் முன்பு இரும்பு முதல் ஈயம் வரை மற்றும் உலோக மூலப் பொருட்களின் விலையை அரசு அமைத்த கமிட்டியால் நிர்ணயிக்கப்பட்டு வந்தது. இந்த முறையை தற்போதுள்ள ஒன்றிய மோடி அரசு மாற்றி விட்டது. லண்டனில் உள்ள மூலப்பொருட்கள் விற்பனை மையம் அறிவிக்கும் விலையின் அடிப்படையில், இந்தியாவில் உள்ள உற்பத்தி நிறுவனங்களும், சந்தைகளும் தினசரி விலை நிர்ணயம் செய்கின்றன. பெட்ரோல், டீசல் மற்றும் உலை எண்ணெய் ஆகியவற்றின் விலையை தினசரி எண்ணெய் மார்க்கெட்டிங் கம்பெனிகள் நிர்ணயித்து அறிவிக்கின்றன. இந்தியாவில் நிலக்கரி விலை, சர்வதேச நிலக்கரி விலை சார்ந்ததாக நிர்ணயிக்கப்படுகிறது.

மூலப்பொருட்களின் கட்டுப்பாடில்லாத விலை உயர்வால் சிறு குறுந் தொழில்கள் அழிந்து வரு கின்றன. முத்ரா திட்டம் மூலம் பிணை இல்லாமல் கடன் வழங்கு வதாக அரசு அறிவித்தாலும் அது சிறு குறு நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதில்லை. ஆனால் கார்ப்பரேட் பெரு நிறுவனங்களுக்கு பல லட்சம் கோடி ரூபாயை மோடி அரசு தள்ளுபடி செய்துள்ளது. ஆனால் சிறு குறு நிறுவனங்களுக்கு எந்த கடன் தள்ளுபடியும் செய்யப்படுவதில்லை. கொரோனா பொதுமுடக்கத்தால் லட்சகணக்கான சிறு குறு நிறுவனங்கள் மூடப்பட்டு, கோடிக்கணக்கானோர் வேலை இழந்துள்ளனர். ஆட்சியாளர்களின் தவறான கொள்கைகளை எதிர்த்து சங்க வித்தியாசமில்லாமல், சாதி, மதம், மொழி கடந்து ஒற்றுமையுடன் செயல்பட்டால்தான் சிறு குறு நிறுவனங்களை எதிர்வரும் காலங்களில் பாதுகாக்க முடியும். இவ்வாறு ஏ.எஸ்.கண்ணன் பேசினார்.

# ஆட்டோ ஓட்டுநர்கள் ஆர்ப்பாட்டம்




வாகன எப்.சி. செய்வதற்கு கட்டண உயர்வு செய்ததை வாபஸ் பெறக்கோரியும், இன்சூரன்ஸ் கட்டணத்தை குறைக்கக் கோரியும், பெட்ரோல் – டீசல் விலையை குறைக்க கோரியும் வலியுறுத்தி தமிழகம் முழுவதும் ஆட்டோ தொழிலாளர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**சேலம்:** ஏஐடியூசி சேலம் மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்கம் சார்பில் கந்தம்பட்டி ஆர்டிஓ அலுவலகம் முன்பு மாவட்ட பொதுச் செயலாளர் வி.முருகன் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்து கட்சியின் மாவட்டச் செயலாளர் ஏ.மோகன் பேசினார். ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து ஏஐடியூசி பொதுச் செயலாளர் எம்.முனுசாமிபேசினார். இதில் மாவட்ட தலைவர் லோகநாதன், நூர்தின் மற்றும் மாவட்ட பொறுப்பாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி :** தருமபுரி டிஸ்ட்டிக் ஆட்டோ பணியாளர் சங்கம் சார் பில் பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் பெரியமுனுசாமி தலைமை வகித்தார். நிர்வாகிகள் ரவி, அண்ணாதுரை, செல்வம், அதியமான் மணி ஆகி யோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட செயலாளர் கந்தசாமி ,ஏஐடி யுசி மாவட்ட பொதுச் செயலாளர் கே.மணி, மாவட்ட துணை தலைவர் சுதர்சனம் ,விசைத்தறி சங்க மாவட்ட செயலாளர் சாமிநாதன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

# சேலம் சௌடேஸ்வரி கல்லூரி இருபாலர் கல்லூரியாக தொடர்ந்திடக் கோரி

### மாணவர் பெருமன்றம் ஆர்ப்பாட்டம்




அரசு உதவி பெறும் சேலம் சௌடேஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி சென்ற கல்வியாண்டு வரை ஆண் பெண் இருவரும் படிக்கும் இருபாலர் கல்லூரியாக செயல்பட்டு வருகிறது.தற்போது இந்த கல்வி ஆண்டில் இருந்து ஒருபாலர் கல்லூரியாக மாற்றுவதற்கு கல்லூரி நிர்வாகம் உயர் கல்வித் துறையிடம் அனுமதி பெற்றிருக்கிறது. இந்த அனுமதியை திரும்பப் பெற வலியுறுத்தியும் தொடர்ந்து ஆண் பெண் இருவரும் படிக்கும் இருபாலர் கல்லூரியாக நடத்திட வலியுறுத்தி அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சேலம் மாவட்ட குழு சார்பில் சௌடேஸ்வரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி முன்பு மாணவர் பெருமன்ற மாவட்ட செயலாளர் பா.தினேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் இரா.ரமேஷ் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார். கட்சியின் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் அவர்கள் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்திப் பேசினார்.

இதில் மாவட்ட தலைவர் கே.பி.வி.ராஜேஷ் மாவட்ட துணை செயலாளர் எல்.சுரேஷ் வெற்றிவேல், சின்ன, மாணிக்கம் தினேஷ் மற்றும் 150க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய, வட்டார மாநாடுகள்

# அரசியல் சாசனம், நாடாளுமன்றம், நீதிமன்ற தீர்ப்புகளுக்கு ஆபத்து

### மு.வீரபாண்டியன் பேச்சு

விருதுநகரில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விருதுநகர் வடக்கு ஒன்றிய 28வது மாநாடு நடைபெற்றது. தலைமைக்குழுவாக பாண்டியன், முத்துக்குமார், ஆவுடையப்பன் ஆகியோர் செயல்பட்டார். மூத்ததோழர் கே.எஸ்.காதர்முகையதின் கொடியை ஏற்றி வைத்துப் பேசினார். அஞ்சலி தீர்மானத்தை ரவி வாசித்தார. மாநாட்டை தொடங்கி வைத்து மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன் பேசியதாவது, கம்யூனிஸ்ட் கட்சி என்றும் இளமையானது. கம்யூனிஸ்ட் கட்சி சொல்வது எல்லாம் புதுமையானது. மு.க.ஸ்டாலின் அவர்கள் கேரள சிபிஎம் மாநாட்டில் மலையாளத்தில் பேசினார். இதை முதலில் உலகில் துவக்கி வைத்தது கார்ல்மார்க்ஸ்தான். எல்லா மொழிகளையும் சமமாக பார்க்கும் பார்வையை கம்யூனிஸ்ட்கள் தான் ஆரம்பித்து வைத்தார்கள். இன்று அரசியலுக்கு மதிப்பு இருக்கிறது என்றால் அது கம்யூனிஸ்ட்டுகளால்தான். இன்றைய பாஜக ஆட்சியில் நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு, அரசியல் சாசனத்திற்கு, நீதிமன்ற நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றிற்கு பெரும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இவைகளை மீட்டெடுக்க வேண்டும். அதற்கு நம் கட்சியை பலப்படுத்த வேண்டும். கட்சியில் இளம் ரத்தம் பாய்ச்சப்பட வேண்டும். அரசியல் அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும். இவ்வாறு பேசினார்.

மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநிலகுழு உறுப்பினர் பாலமுருகன், மின்சார சம்மேளன ஆதிமூலம் ஆகியோர் பேசினர். ஒன்றிய குழுவிற்கு 19 தோழர்களும் அதில் நிர்வாகக் குழுவிற்கு 9 தோழர்களும் செயலாளராக ஆர்.சக்கணன், துணை செயலாளராக எம்.முருகேசன், பொருளாளராக பால்சாமி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். விருதுநகரில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை குடி தண்ணீர் வழங்கு, நகரத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள கூடுதலாக துப்புரவு பணியாளர்கள் நியமித்திடு, விருதுநகரில் பல் மருத்துவ கல்லூரி துவங்கு உள்ளிட்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.




**உசிலம்பட்டி ஒன்றிய 25 வது மாநாடு**

மதுரை உசிலம்பட்டி ஒன்றிய 25 வது மாநாடு தா.பாண்டியன் அரங்கில் கோடியேற்றத்துடன் தொடங்கியது. முருகன் கோவில் முன்பு தா.பாண்டியன் படத்திறப்பு விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் விவசாய சங்க ஒன்றியச் செயலாளர் வெ.ஜெயக் கொடி துவக்க உரை ஆற்றினார். வி.ச.ஒன்றியத்தலைவர் மா.மகாராஜன் அஞ்சலி தீர்மானம் ஏற்றினார். ஒன்றியச் செயலாளர் இரா.தங்கமலை கொடியேற்றி வேலை அறிக்கை மற்றும் தீர்மானங்களை வாசித்தார்.

உசிலம்பட்டியில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க உடனடியாக புறவழிச்சாலை ஏற்படுத்தவும், விவசாயிகளை பாதுகாத்திட காய்கனி பதப்படுத்தும் கூடம் அமைத்திடவும், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி உடனே துவங்கிடவும், கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் அலுவலகம் இயங்கிட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தோழர் தா.பாண்டியன் படத்தினை திறந்து வைத்து வாழ்த்துரை வழங்கினார். புறநகர் மாவட்ட செயலாளர் பா.காளிதாஸ் சிறப்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் எம்.சான்ட் அரைக்க வேண்டும்

**வாகைக்குளத்தில் சிபிஐ புதிய கிளை துவக்கம்**

விருதுநகர் மாவட்டம் திருச்சுழி ஒன்றியம் பரளச்சி வாகைக்குளத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய கிளை துவங்கப்பட்டது. ஒன்றிய செயலாளர் சி.செல்வம், மாவட்ட குழு உறுப்பினர் தங்கராஜ்,ஒன்றிய நிர்வாககுழு உறுப்பினர் சங்கரபாண்டி ஆகியோர் கட்சி அமைப்புவிதி, மார்க்சீய தத்துவத்தை விளக்கி பேசினார்கள். கிளை செயலாளராக ஞானதாஸ், துணை செயலாளராக ராமதாஸ், பொருலாளராக இருளப்பன் ஆகியோர் ஏகமனதாக தேர்வுசெய்யப்பட்டார்கள். நியாய விலை கடை திறக்க வேண்டும், புதிதாக திறக்கவுள்ள டாஸ்மாக் கடையை மக்கள் நலன் கருதி திறக்க கூடாது உள்ளிட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**ஒசஅள்ளிபுதூர் கிளை மாநாடு**

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம் இண்டூர் வட்டாரம் ஒசஅள்ளிபுதூர் கிராமத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடு கு.சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது. விஜயா முன்னிலை வகித்தார். மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன்,மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.சின்னசாமி ஆகியோர் பேசினார். மாநாட்டில் கிளைச் செயலாளராக ஜி.முருகன் துணைச் செயலாளராக எம்.ரத்தினவேல் பொருளாளராக கு.சுப்பிரமணி ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

**சிபிஐ வெம்பக்கோட்டை மாநாடு**

விருதுநகர் மாவட்டம் , இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வெம்பக்கோட்டை ஒன்றிய 7வது மாநாடு ஆலங்குளத்தில் ஜி.கே.திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மல்லிகா, மகாலிங்கம் ஆகியோர் தலைமைக் குழுவாக செயல்பட்டார்கள். கொடியை மூத்த தோழர் பரமசிவம் ஏற்றி வைத்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி தோடங்கிவைத்துப் பேசினார். மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட பொருலாளர் க.சமுத்திரம், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, கிழக்கு ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ நிறைவுரையாற்றினார் ஒன்றிய குழுவிற்கு 19தோழர்களும், நிர்வாகக் குழுவிற்கு 5தோழர்களும் அதில் செயலாளராக எம்.நடராஜன், துணை செயலாளராக எம்.கணேசன், பொருலாளராக வி.ஜெயப்பிரகாஷ் ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். ஆலங்குளம் சிமெண்ட் ஆலையில் கருங்கல் அதிகமாக இருப்பதால் எம்.சாண்ட் மணல் அரைக்கும் திட்டத்தை தொடங்கி பலருக்கும் வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும், வெம்பக்கோட்டை அணை மற்றும் கண்மாய்களில் கருவேல மரங்களை அகற்றி ஆழப்படுத்து, சங்கரமூர்த்திபட்டி ஊராட்சி ஒன்றிய பள்ளியில் கழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி செய்து கொடு, ஒன்றியம் முழுவதும் குண்டும் குழியுமான சாலைகளை செப்பனிடு உள்ளிட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

**சூலூரில் அரசு கலை கல்லூரி துவங்கிடுக**
**சூலூர் தெற்கு வட்டார சிபிஐ மாநாடு கோரிக்கை**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சூலூர் தெற்கு வட்டார 35வது மாநாடு சூலூரில் நடைபெற்றது. பொது மாநாட்டிற்கு மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் பெ.மௌனசாமி தலைமை தாங்கினார். வட்டார செயலாளர் வே.வசந்தகுமார் வரவேற்புரை ஆற்றினார். மாநாட்டுக் கொடியை சூலூர் கிளை செயலாளர் சூ.பே.நடராசு ஏற்றி வைத்தார். கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் நா.பெரியசாமி அரசியல் உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் வி.எஸ்.சுந்தரம், துணைச் செயலாளர் ஆர்.தேவராஜ் ஆகியோர் வாழ்த்திப் பேசினர். சூலூர் புதுமை கலை மன்றத்தாரின் "எப்பத்தான் மாறும்" எனும் நாடகமும், சூலூர் ந.அருண்குமார் குழுவினரின் சிலம்பம், யோகா நிகழ்ச்சிகளும் அனைவரின் பாராட்டைப் பெற்றது.

ஜனசக்தி, தாமரை சந்தா சேர்ப்பு, வீடுவீடாக வினியோகிப்பதில் தொடர்ந்து ஈடுபாட்டுடன் உழைத்து வரும் தோழர்கள் 16 பேருக்கு பாராட்டு செய்யப்பட்டு புத்தகம் பரிசளிக்கப்பட்டது. கட்சி உண்டியல் சேமிப்புத் திட்டத்தில் தொடர்ந்து 3 ஆண்டுகளாக முதலிடம் பெற்று வரும் கட்சி உறுப்பினர்கள் ஆர்.கணேசன் ஜாய் சுகந்தி தம்பதியருக்கும், வட்டாரத்தில் கட்சி லெவி செலுத்துவதில் முதலிடம் வகித்து வரும் தோழர்கள் இளங்கோவன் சாந்தி தம்பதியருக்கும் பாராட்டு செய்யப்பட்டது. 15 பேர் கொண்ட புதிய வட்டாரக்குழு, மாவட்ட மாநாட்டு பிரதிநிதிகள் தேர்வு செய்யப்பட்டனர். செயலாளராக வே.வசந்தகுமார், துணைச் செயலாளராக வீ.பேரின்பம், பொருளாளராக கே.கண்ணன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். சூலூரில் அரசு கலைக் கல்லூரி துவங்க வேண்டும்; சூலூரில் மகளிர் காவல் நிலையம் துவங்க வேண்டும்; ஒண்டிப்புதூரில் இருந்து பிரித்து சூலூரை தலைமையிடமாகக் கொண்ட தமிழ்நாடு மின்சார வாரியம் செயற்பொறியாளர் அலுவலகம் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட வேண்டும்; பாப்பம்பட்டி பிரிவு முதல் சிந்தாமணிப்புதூர் வரை திருச்சி சாலையை அகலப்படுத்த வேண்டும் அல்லது உயர்மட்ட பாலம் கட்ட வேண்டும்; பல ஆண்டுகளாக சொந்த வீடோ, இடமோ எதுவுமின்றி வாடகை வீடுகளில் வசித்து வரும் ஏழை குடும்பங்களுக்கு வீடு அல்லது மனையிடம் வழங்கப்பட வேண்டும்; நடப்பாண்டில் புதிதாக தொடங்கப்பட உள்ளதாக அறிவித்துள்ளார் 25 ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஒன்றை கண்ணம்பாளையத்தில் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாணவர் மன்ற மாநில தலைவர் மௌ.குணசேகர் மாநாட்டில் பங்கேற்றார். வட்டார பொருளாளர் கே.கண்ணன் நன்றி கூற, சர்வதேச கீதத்துடன் மாநாடு நிறைவுற்றது.

**மலை கிராமங்களுக்கு சாலை வசதி செய்துதருக**
**பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றிய மாநாடு கோரிக்கை**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பெத்தநாயக்கன்பாளையம் ஒன்றிய 28வது மாநாடு தும்பல் ரெட்டியார் நலச்சங்கத்தில் முன்னாள் மாவட்ட செயலாளர் கே.ஏ.கோவிந்தசாமி, மாநில குழு உறுப்பினர் ஏ.ஆறுமுகம் நினைவு அரங்கத்தில் நடைபெற்றது. முன்னாள் மாவட்ட துணைச்செயலாளர் எஸ்.பி.கணேசன் தலைமை வகித்தார். மாநாட்டு கொடியினை மூத்த தோழர் எம்.ஜெயராமன் ஏற்றி வைத்தார். மாநில செயற்குழு உறுப்பினர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ந.பெரியசாமி மாநாட்டை தொடக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட பொருளாளர் எம்.ராமன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எம்.ராமன், டி.வி.கருணைதாஸ், எஸ்.தனக்கோட்டி, மாவட்டக்குழு உறுப்பினர் பி.தினேஷ் வாழ்த்தி பேசினர். ஒன்றிய செயலாளராக ஜெ.ஸ்டாலின், துணைச் செயலாளர்களாக பி.பரசுராமன், ஏ.மாது, பொருளாளராக எம்.ஜெகந்நாதன் ஆகியோரும், ஒன்றியக்குழு உறுப்பினர்களாக எம்.கோபால், எஸ்.பி.கணேசன், ஒய்.எஸ்.குணசேகரன், ஏ.ஜீவா, எஸ்.அய்யாவு, சி.நடராஜ், எஸ்.கோவிந்தன், சி.கோவிந்தராஜ், சி.செல்லன், எஸ்.கனகராஜ் ஆகியோரும் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். மலை கிராமங்களுக்கு சாலை வசதி செய்து தர வேண்டும், ஒன்றியம் முழுவதும் சாலை வசதி, தெருவிளக்கு, குடிதண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.




## இந்திய அரசியல் அமைப்பு பாதுகாப்பு தின விழா

ஆரல்வாய்மொழி பாரதி கலையரங்கத்தில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில் டாக்டர் அம்பேத்கர் பிறந்தநாள் மற்றும் இந்திய அரசியல் அமைப்பு சாசன பாதுகாப்பு தின விழா வே.அருள்குமார் தலைமையில் நடைபெற்றது. எல்.சுப்பிரமணியம், மாதர் சம்மேளன மாவட்ட செயலாளர் பி.விஜயலெட்சுமி, சென்பை சிபிஐ கிளை செயலாளர் எஸ்.கல்யாணசுந்தரம், எஸ்.ஆபிரகாம், எஸ்.தங்கவேல், சிபிஐ துணை செயலாளர் முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிபிஐ தோவாளை தாலுகா செயலாளர் எஸ்.அண்ணாதுரை அனைவரையும் வரவேற்றார். இந்த நிகழ்ச்சியை தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திரபோஸ் துவக்கி வைத்து பேசினார்.

தமிழ்நாடு கலை இலக்கிய பெருமற்ற மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.கே.கங்கா, இளைஞர் பெருமன்ற கே.சஜேஸ், யூ.நாகராஜன் ஆசிரியர் சங்கம், அம்பேத்கர் பெண்கள் இயக்கம் எஸ்.சரஸ்வதி ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

டாக்டர் எஸ்.சுந்தரம் மாநில துணைத்தலைவர் அனைத்திந்திய முற்போக்குப் பேரவை, எஸ்.இசக்கிமுத்து சிபிஐ மாவட்ட செயலாளர், சி.முத்துகுமார் தலைவர் ஆரல்வாய்மொழி பேரூராட்சி, ஆர். செல்வராணி இந்திய மாதர் தேசிய சம்மேளனம் மாவட்ட அமைப்பாளர், எஸ்.அனில்குமார் துணைத்தலைவர் பூதப்பாண்டி பேரூராட்சி ஆகியோர் அம்பேத்கர் பிறந்த நாளும் இந்திய அரசியல் அமைப்பு சாசன பாதுகாப்பு தினத்தை வாழ்த்தி பேசினர்.

சிபிஐ மாநிலக்குழு உறுப்பினர் எம்.கண்ணகி சிறப்புரை ஆற்றினார்.

பூதப்பாண்டியில் இளைஞர் பெருமன்ற கட்டிட திறப்பு விழாவில் நம் கிளை சார்பில் வே.அருள்குமார், எஸ்.இசக்கிமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் சட்டமன்ற உறுப்பினர் மாரிமுத்து கலந்து கொண்டார்.



### பவானி சிபிஐ அலுவலகத்தில்

## இணைய வழி பதிவு சேவை மையம்

பவானியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் இணையவழி பதிவு சேவை மையம் துவக்கப்பட்டுள்ளது.

பவானியில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகமான 'பாலன் இல்லத்தில்' அமைப்பு சாரா, கட்டுமான தொழிலாளர்களின் நலவாரிய பதிவு மற்றும் புதுப்பித்தல், ஆதரவற்றோர் , முதியோர், கைம்பெண் மற்றும் ஒய்வூதிய பதிவுகள் உள்ளிட்ட இணையவழி பதிவுகளுக்கான சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம் மையத்தை ஏப்.25 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணை செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி., திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் , கட்சியின் மாநில கட்டுப்பாட்டுகுழு உறுப்பினர் வி.பி.குணசேகரன், ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் டி.ஏ.மாதேஸ்வரன், பவானி நகர செயலாளர் ப.மா.பாலமுருகன், ஏஐடியுசி மாநில செயலாளர் எஸ்.சின்னச்சாமி, கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் கே.சந்திரசேகர், ஒன்றிய செயலாளர் கே.எம்.கோபால், கட்டிட கட்டுமான சங்க மாவட்ட செயலாளர் எஸ்.கந்தசாமி, இளைஞர் பெருமன்ற நகர தலைவர் பி.முகமது அலி, நகர செயலாளர் எஸ்.தாமோதரன், வழக்கறிஞர் வி.ஜி.அருள், கட்சி நிர்வாகிகள் எஸ்.பி.நஞ்சப்பன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கொள்ளிடம் ஒன்றிய சிபிஐ மாநாடு

மயிலாடுதுறை மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம் 29வது மாநாடு பா.மாணிக்கம் நினைவரங்கத்தில் ஆர்.எம்.ஆர். திருமண மஹாலில் பி.தனசேகரன், எஸ்.பி.குமார், ஏ.எஸ்.ஜீவமணி, கே.கலியபெருமாள் ஆகியோர் தலைமையிலும் எம்.எஸ்.புருஷோத்தமன் கொடியேற்றி வைத்தார். பிரபு வரவேற்புரையாற்றினார். சி.சங்கரய்யா ப.மாணிக்கம் படத்தை திறந்து வைத்தார். மாவட்ட செயலாளர் ஏ.சீனிவாசன் மாநாட்டு துவக்க உரையாற்றினார். நாகை நாடாளுமன்ற உறுப்பினரும் மாநில நிர்வாகக் குழு உறுப்பினருமான எம். செல்வராசு சிறப்புரையாற்றினார்.


வேலை அறிக்கையை கே.எஸ்.சிவராமன் வாசித்தார். ஜெயசக்திவேல், எம்.செல்லப்பன் ஒன்றிய செயலாளர், சீர்காழி பெ.வீரராஜ் விவசாய சங்க மாவட்ட செயலாளர், எஸ்.சுந்தரையா மாவட்ட குழு, லோ.சுரேஷ் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாவட்ட செயலாளர், எம்.பிரபாகரன் இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

ஒன்றிய செயலாளராக ஜெய்சக்திவேல், துணை செயலாளராக எஸ்.பி.குமார் பொருளாளராக லட்சுமிகாந்தன் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். சீர்காழியிலிருந்து பிரித்து கொள்ளிடத்தை தலைமையிடமாகக் கொண்டு தாலுகா உருவாக்க வேண்டும். கொள்ளிடத்தை இரண்டாக பிரித்து திருமுல்லைவாசலை தலைமை யிடமாகக் கொண்டு ஒன்றியம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# நதியின் கடவுள் (சீன நாட்டுப்புறக் கதைகள் )

கதைகள் மனிதர்களை குதூகலப்படுத்தும், மனத் துயரில் இருந்து ஆற்றுப் படுத்தும், அந்தக் கதை சொல்லப்படும் கால சூழல்கள்,நாட்டு வளங்களை நாம் அறிந்துகொள்ள உதவும், கதைகளின் உயிரோட்டமான தொடர்புகளின் மூலம் தான் பல வரலாற்றுக் குறிப்புகளை கூட நாம் அறிந்து கொள்ள முடிகிறது. தமிழ் சிறுகதைகளில் இருந்து சீன சிறுகதைகள் வேறொரு தளத்தில் பயணிக்கிறது.

இந்த கதைகள் கிராமத்து மக்களின் நம்பிக்கைகள் மற்றும் வாழ்க்கை சூழலை அடிப்படையாகக் கொண்டு பின்னப்பட்டுள்ளது. தனிமனித வாழ்க்கையை சொல்வதோடு மட்டுமல்லாமல். அக்காலகட்டத்தின் நம்பிக்கைகள், வறுமை, சமூக அவலம், பண்பாடு,கலாச்சாரம் என எல்லாவற்றையும் எடுத்து இயம்புவதாக அமைந்துள்ளது. உலக அளவில் எல்லா நாடுகளுக்குமே தனித்தனி கலாச்சார பண்பாட்டு பின்னணிகள் உண்டு. அந்தந்த மக்களுக்கு என தனித்தனியே மொழி இருப்பதுபோலவே கலாச்சாரமும் பண்பாடும் வேறுபட்டிருக்கிறது. சீனர்களும் இந்தியர்களை போல் பல்வேறு கலாச்சார பின்னணி கொண்டவர்கள். அவர்களின் நம்பிக்கைக்கும், வாழ்வியல் முறைக்கும், கலாச்சார பண்பாட்டு ரீதியாக பல்வேறு ஒற்றுமைகள் இருப்பதை நாம் அறியலாம்.



ஒரு மனிதருக்குள் பிறக்கும் பேராசை. சில எளிய மனிதர்களின் வாழ்க்கை நிலைமைகளை எவ்வாறு திசைமாற்றி கிழித்தெறியும் என்பதையும், நாம் அதிலிருந்து மீள,நாம் நம்மையறியாமல் எப்போதோ, யாருக்கோ செய்த சிறு உதவி நம்மை எவ்வாறு காப்பாற்றும், கரையேற்றும் . இதுதான் தேவதைகளின் அற்புதம். இப்படிப்பட்ட தேவதைகளை தான் சீனர்கள் நம்புகிறார்கள். யாருக்கும் தீங்கு செய்யாத உதவி செய்கிற தேவதைகள் நதியின் கடவுள்கள்.இதுபோன்ற 15 கதைகள் இந்த புத்தகத்தில் உள்ளது.


சீனாவில் ஒரு மதபோதகராக 30 ஆண்டுகளுக்கு மேல் இருந்த ரெவ். ஜான் மேக்காவன் அவர்கள் சீனாவைப் பற்றி ஆங்கிலத்தில் எழுதிய கதைகளையும், சீன வானொலியில் "கதைத்தேன்"நிகழ்ச்சிக்காக எழுதப்பட்ட கதைகளையும்,நூலாக திருமலை சோமு அவர்களால் தமிழில் அழகிய படங்களுடன் தொகுக்கப்பட்டுள்ளன. அவரது முதல் மொழிபெயர்ப்பு நூல் இது. இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும். -சமரன்

நூலாசிரியர் : திருமலை சோமு
வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை 50
பக்கங்கள் : 200 விலை : ரூ.235

## நூல் நயம்

# காமராஜ் ஓர் உத்தம தலைவரின் வாழ்க்கை கதை

விருதுப்பட்டி எனும் விருதுநகரில் குமாரசாமி சிவகாமி அம்மையாரின் மகனாக. ஒரு எளிய கிராம பின்னணியில் பிறந்த மனிதர். இந்தியாவின் அசைக்க முடியாத மாபெரும் தலைவராக உயர்ந்த கர்மவீரர் காமராஜரின் வாழ்க்கை கதை இது. அடிமைப்பட்டுக் கிடந்த இந்தியாவின் இருள் கவிந்த வரலாற்றை ஒளி பெறச் செய்வதற்காக தன் வாழ்வையே அர்ப்பணித்த மகத்தான தலைவர் . இவர் பாடசாலையில் படித்து மிகக் குறைவு என்றாலும்,எளிய மக்களின் வாழ்க்கை நிலைமையை மிகவும் துல்லியமாக கற்றறிந்தார். இதனால்தான் இவரால் எளிய மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்ற முடிந்தது.



சைமன் கமிஷன் மதுரைக்கு வந்தபோது திருமலை நாயக்கர் மகாலில் அந்த கமிஷனுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. அதை எதிர்த்து மாபெரும் மக்கள் திரள் போராட்டம் நடத்தியவர் கர்மவீரர் காமராஜர். இந்திய நாட்டின் விடுதலைப் போரில் பங்கேற்று பல ஆண்டுகளை சிறையில் கழித்த விடுதலைப் போராட்ட வீரர் இவர்.

1940 ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சியின் விருதுநகர் மாவட்ட தலைவர் பதவிக்கு காமராஜர் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1941 ஆம் ஆண்டு சிறையில் இருந்தவாறு விருதுநகர் நகரசபைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த காலத்தில்தான் பல்வேறு புதியதொழிற் சாலைகள்,அணைக்கட்டுகள், பள்ளிக்கூடங்கள் என அனைத்தும் உருவாக்கப்பட்டன. தான் பெற முடியாத கல்வியை ஏழை மாணவர்கள் அனைவரும் பெறுவதற்கு ஏணியாக இருந்தவர் கர்மவீரர் காமராஜர்.

காங்கிரஸ் கட்சியின் மாநில தலைவராகவும், அகில இந்திய தலைவராகவும், தமிழ்நாட்டில் முதல் அமைச்சராகவும் பொறுப்பு வகித்தார். மகாத்மா காந்தியடிகளின் சீரிய தொண்டரான அவர். அந்த மகத்தான உத்தமத் தலைவனின் வாழ்க்கை கதைதான் ஆதனூர் சோழன் எழுதிய காமராஜர் ஓர் உத்தம தலைவரின் வாழ்க்கை கதை எனும் இந்நூல். இந்நூலை அனைவரும் வாங்கிப் படிக்கவும். -இன்சுவை பாரதி

தொகுப்பாசிரியர் : ஆதனூர் சோழன்
வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 16 ,ஜானி ஜான் கான் சாலை,ராயப்பேட்டை,சென்னை 14
பக்கங்கள் : 84 விலை: ரூ.65


வாரம் தோறும் வெளிவரும்
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேட்டை, சென்னை - 600014

சுழலும் உலகம்

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

## முதலாளித்துவத்திற்கு மாற்றாக
## சமூக, அரசியல், பொருளாதார அமைப்புகளை உருவாக்கும்
# சூழல் நெருங்கி விட்டது



ஏழ்மை, சமத்துவமின்மை மற்றும் ஸ்திரத்தன்மை யின்மை ஆகியவை இல்லாத ஓர் உலகத்தை உருவாக்கப் போவதாக முதலாளித்துவம் மற்றும் அதன் கட்டமைப்புகள், முகமைகள் மற்றும் பிரச்சார சாதனங்கள் முழங்கி வந்தன. முதலாளித்துவத்தின் நவீன தாராளமய வடிமானது வளம், ஸ்திரத்தன்மை, அமைதி, அனைவரையும் உள்ளடக்கிய சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றை பிரதான முழக்கமாக முன்னிலைப்படுத்தியது. புரட்சி அல்ல; சீர்திருத்தமே அடிப்படை கோட்பாடு என்று பிரகடனப்படுத்திய முதலாளித்துவம், அந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் செயலற்றுப் போன முதலாளித்துவ அமைப்பில் தேசிய அரசுகளின் உதவியுடன் மக்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்திட முயன்றது. இத்தகையதொரு சமுதாய அமைப்புதான் தற்போதுள்ள ஒரே மாற்று என்று கருதப்பட்டது. உலகளாவிய சுரண்டல் அமைப்பு முறை, இராணுவ மோதல்கள் மற்றும் மகா யுத்தங்கள் ஆகியவற்றை ஏற்படுத்திய முதலாளித்துவத்திற்கு மாற்று என்று இம்மண்ணில் ஏதும் இல்லை என்று எக்காளமிட்டனர்.

20ஆம் நூற்றாண்டில் முதலாளித்துவம் அதன் உள்முரண்பாடுகள், நெருக்கடிகளைச் சமாளித்து, தப்பிப் பிழைத்து, பின் செழித்தோங்கி வளர்ந்திட பிரட்டன்வுட் சீர்திருத்தங்கள் (Bretton Woods) பேருதவி புரிந்தன.

21ஆம் நூற்றாண்டிலும் அத்தகைய மோசமான முதலாளித்துவ அமைப்பு தொடர்ந்திட உலகளாவிய முறையில் மேற்கொள்ளப்பட்ட முதலாளித்துவ ஆதரவுப் பிரச்சாரங்கள் துணையாக அமைந்தன. மக்கள் வேலை யின்மை, வீட்டுவசதியின்மை, பசி ஆகியவற்றால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இத்தகைய நெருக்கடிகள் மற்றும் ஆபத்துகளால் இன்றைய உலகம் சூழப்பட்டுள்ளது. மேலும், கோவிட் பெருந்தொற்று காலத்தில் சுரண்டல் தீவிர மடைந்தது; அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்கள் உலகின் சில குழுக்களிடம் குவிந்து வருகிறது.

அரசு ஆதரவுடன் 'கார்ப்பரேட் ஏகபோக முதலாளித்துவம்' எனும் புதிய வடிவம் எழுச்சியுறுவதை இப்போது நாம் பார்த்து வருகிறோம். இதுதான் உலகப் பொருளாதார மன்றம் (World Economic Forum) மேற்கொண்டு வரும் சீர்திருத்த நடவடிக்கையின் மையக்கரு ஆகும். இதன்படி, அரசுகள் கார்ப்பரேட் நிறுவனங்களை ஆதரிக்கின்றன; லாபம் தனியார் மயமாக்கப்படுகிறது; பேராபத்துகளும் நெருக்கடிகளும் சமூகமயமாக்கப்படுகின்றன. இதுவே முதலாளித்துவ சித்தாந்தத்தை அடித்தளமாகக் கொண்ட கார்ப்பரேட் முதலாளித்துவத்தின் புதிய வடிவமாகும். 'அரசு – அரசாங்கம் – சந்தை' மற்றும் குடிமக்கள் இடை யேயான அரசியலமைப்புச் சட்டம் உள்ளிட்ட சட்டப்பூர்வ ஒப்பந்தங்களின் அடிப்படையிலான பேரங்கள் காலா வதியாகிப் போய்விட்டன. அரசு மற்றும் குடிமக்களுக்கு இடையேயான சமூக மற்றும் அரசியல் ஒப்பந்தம் (lockean social and political contract) தகர்ந்து விட்டன. தற்போது அரசு என்பது கார்ப்பரேட்டுகள் மற்றும் அவற்றின் சந்தைகளுக்கு பாதுகாப்பு அரணாக சுருங்கிவிட்டன. குடிமக்கள் மற்றும் அவர்களது குடியுரிமைகள் பல்வேறு நெருக்கடிகளின்போது பலியிடப்படுகின்றன. வளர்ந்த நாடான அமெரிக்காவிலும் கடந்த ஐந்து தசாப்தங்களாக தொழிலாளர்களின் ஊதியம் தேக்க நிலையை அடைந்து வருகிறது. அமெரிக்க குடிமக்களின் வாங்கும் சக்தி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. 1980களில் இருந்து வருமான ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்து வருகிறது. இத்தகைய மோசமான சமூக, பொருளாதாரப் போக்கை அமெரிக்க முதலாளித்துவ அமைப்பும், உலக பொருளாதாரத்தில் கோலோச்சும் டாலர் மேலாதிக்கமும் சீர்படுத்த முடியாமல் தோல்வியடைந்து வருகின்றன.

இதுபோலவே, வளர்ச்சியடைந்த பல முதலாளித்துவ நாடுகளும், வளரும் நாடுகளில் உள்ள முதலாளித்துவ பொருளாதார அமைப்புகளும் நெருக்கடிகளை எதிர் கொண்டு வருகின்றன. இதுபோன்ற நெருக்கடிகள் காரணமாக, முதலாளித்துவ மோதல்களுக்குப் பதிலாக முதலாளித்துவ சக்திகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு உருவாகிறது. சமுதாயத்தில் மக்களிடையே நிலவிவரும் சகோதரத்துவத்தை சீரழிப்பதன் மூலமாகவும், நுகர்வு கலாச்சாரத்தால் உந்தித் தள்ளப்படும் ஒரு கற்பனாவாத சமுதாய அமைப்பை முன்னிலைப்படுத்துவதன் மூலமாகவும் முதலாளித்துவ சக்திகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு உருவாக்கப்படுகிறது. சந்தை ஆதிக்கம் நிலவும் சமுதாய அமைப்பில் மழுப்பலான தனிநபர் சுதந்திரத்தை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் நுகர்வு கலாச்சாரம் ஒரு சித்தாந்தமாக சமூகங்களை, கூட்டு பண்பாடுகளை சிதைக்கிறது. எனவே, முதலாளித்துவம் ஒருபோதும் மாற்றுத் தீர்வா காது. மேலும், முதலாளித்துவத்தின் பிம்பத்தையும், கற்ப னாவாத விழுமியங்களையும் கோவிட் பெருந்தொற்று அம்பலப்படுத்தியது. பணிநீக்கம், விடுமுறைகள் மற் றும் வேலை நேரக் குறைப்பு ஆகியவை இன்றைய புதிய உலக அமைப்பின் நடைமுறையாகி வருகிறது. உழைக்கும் மக்கள் மேலும் சுரண்டப்பட்டு பாதிப்புக்கு உள்ளாக் கப்படுகிறார்கள். மக்கள் நல திட்டங்களுக்கான நிதி ஒதுக் கீடுகள் குறைக்கப்படுகின்றன. ஆனால், உலகம் முழு வதும் அரசுகள் மற்றும் அரசாங்கத்தின் பேராதரவுடன் கார்ப் பரேட்டுகளின் கொள்ளை லாபம் அதிகரித்து வருகிறது.

கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பரில் மெக்கன்சி குலோ பல் இன்ஸ்டிடியூட்டில் பணியாற்றும் மூவர் வெளியிட்ட, ''அமெரிக்க முதலாளித்துவத்தின் வருங்காலம் குறித்த மறுசிந்தனை'' எனும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, பெருந்தொற்று நெருக்கடி காலத்தில் மேல்தட்டில் உள்ள 10% கம்பெனிகள் 80% பொருளாதார லாபத்தை கைப்பற்றி உள்ளன. வசதிபடைத்த 1% அமெரிக்கர்கள் அடித்தட்டில் உள்ள 90% மக்களிடமிருந்து 50 டிரில்லியன் டாலர் செல்வ வளத்தை லாபமாக ஈட்டியுள்ளனர். மற்றும் ஒரு அறிக் கையில் (pandemic profits: who's cashing in during covid) பெருந்தொற்று காலத்தில் ஆறு கம்பெனிகள் மட்டுமே 16 பில்லியன் அளவிற்கு லாபத்தை ஈட்டியுள்ளன என்று தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த பல நூற்றாண்டுகளாக மனித சமுதாயம் முதலாளித்துவத்தை பல வடிவங்களில் எதிர்கொண்டு வருகிறது. மக்கள் வாழ்வையும், பூமண்டலத்தையும் முதலாளித்துவம் சிதைத்து வருகிறது. முதலாளித்துவ அமைப்பின் பல்வேறு பலவீனங்களைப் பெருந்தொற்று அம்பலப்படுத்தி உள்ளது. முதலாளித்துவம் காரணமாக மனிதகுலம் சந்தித்த இழப்பு இதுவரையில் வரலாறு கண்டிராத இழப்பாகும். மக்கள் நலனகளை கவனத்தில் கொண்டு நமது சமுதாயத்தை அடிப்படையில் மாற்றி அமைத்திடும் நோக்கில் ஒரு மகத்தான செயல்திட்டத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பினை கோவிட் பெருந்தொற்று வழங்கி உள்ளது.

உழைக்கும் வர்க்க மக்களின் தலைமையில் முதலாளித் துவத்திற்கு மாற்றான சமூக, அரசியல் பொருளாதார அமைப்புகளை உருவாக்கும் சூழல் உருவாகி உள்ளது. உழைக்கும் மக்கள் தலைமையில் உருவாக்கப்படும் அத்த கைய செயல்திட்டம் அனைவருக்கும் வளம், முன்னேற்றம், உலக சமாதானம் மற்றும் பன்மைத்துவ ஜனநாயகக் கட்டமைப்பு ஆகியவற்றை நிர்மாணிப்பதாக இருக்கும்.

## ரஷ்யாவின் அணு ஆயுத அச்சுறுத்தல்:
## அணு ஆயுதங்களுக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் கண்டனம்

ரஷ்யா – உக்ரைன் இடையே கடந்த மூன்று மாத காலமாக ராணுவ மோதல் நடைபெற்று வரும் சூழலில், அணு ஆயுதங்களைப் பயன்படுத்த உள்ளதாக ரஷ்யத் தரப்பிலிருந்து செய்திகள் வெளியாகி உள்ளன. அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அணு ஆயுதங்களுக்கு எதிரான சர்வதேச மாநாட்டு அமைப்புக்குழு வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அணு ஆயுதங்களைப் பயன்படுத்த உள்ளதாக ரஷ்ய அதிபர் புதின், அயலுறவுத்துறை அமைச்சர் லாவ்ரவ் உள்ளிட்ட ரஷ்யநாட்டுத் தலைவர்கள் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் அறிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம். அணு ஆயுதங்கள் மிகவும் மோசமான ஆயுதங்களாகும். அவற்றைப் பயன்படுத்தும் பட்சத்தில் மனிதகுலத்திற்கு பேரழிவுகரமான பின்விளைவுகள் உண்டாகும். எனவே, அணு ஆயுதப் பயன்பாட்டை ஒரு போதும் ஏற்க முடியாது.

அணு ஆயுதங்களையோ அல்லது பேரழிவுகர ஆயுதங்களையோ பயன்படுத்துவது என்பது ஐ.நா.சபை சாசனம், அணு ஆயுத தடை குறித்த ஒப்பந்தம் மற்றும் இதர சர்வதேச சட்டங்களை அத்துமீறும் நடவடிக்கையாகும். அவ்வாறு, அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது என்பது மனிதகுலத்திற்கு எதிரான குற்றச் செயல் ஆகும். அத்தகைய நடவடிக்கைகளை எக்காரணத்தைக் கொண்டும், எந்தச் சூழலிலும் நியாயப்படுத்த முடியாது. பூமண்டலத்தில் ஹிரோசிமா மற்றும் நாகசாகியில் நடைபெற்றது போன்ற ஒரு மோசமான அணு ஆயுதப் பேரழிவு மீண்டும் நடைபெற்றுவிடக் கூடாது.

அணு ஆயுதப் பயன்பாடு தொடர்பான அனைத்துத் திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை ரஷ்ய அரசாங்கம் கைவிட வேண்டும் என்றும் காலதாமதமின்றி போர் நடவடிக்கைகளை முடிவிற்கு கொண்டு வர வேண்டும் என்றும் இராணுவத்தை திரும்பப் பெறுவதுடன் அமைதியான வழிமுறைகள் மூலமாக பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் ரஷ்ய அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மே தினம், அநீதிக்கு எதிரான போராட்டத்தை எப்போதும் உயிர்ப்புடன் வைத்திருக்கும்!



அமர்ஜித் கவுர்

**மே தினம் உலகம் முழுவதுமுள்ள தொழிலாளர்கள் செய்த மாபெரும் தியாகங்களின் சகாப்தத்தை நினைவுபடுத்துகிறது; வரையறுக்கப்பட்ட நிச்சய ஊதியமின்றி, பணியிடத்துப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு என எதுவுமின்றி அவர்களை மனிதர்களாகவே எண்ணாது, வரைமுறையற்ற நீண்ட நேர வேலை என அவர்கள் சந்தித்த மிகக் கொடுமையான சுரண்டலை எதிர்த்துத் தொடர்ந்து நடத்திய போராட்டங்களில்தான் தொழிலாளர்கள் அம்மாபெரும் தியாகங்களைச் செய்தனர். மே தினம் அதைத்தான் நமக்கு நினைவுபடுத்துகிறது !**

உழைப்பின் மேன்மைக்காகவும், மனிதர்கள் என்ற மதிப்புமிக்க உரிமைக்காகவும் வரலாற்றில் அவர்கள் தொடுத்த பெரும் போராட்டங்களை அந்நாளை நமக்கு நினைவூட்டுகிறது. ஒரு வகையில் மனித உரிமைகள் குறித்த உரையாடல்களை வரலாற்றில் ஏற்றி வைத்தது தொழிலாளர் இயக்கமே. இது, ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் எளிய பிரிவினர்களின், சமூகத்தில் ஏதுமற்றவர்களின் அபிலாசைகளுக்குத் தலைமை தாங்கும் பாத்திரத்தைத் தொழிலாளர் வர்க்கத்திற்கு அளித்தது.

### எட்டுமணி நேர வேலை

19ம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியின் தொடக்கத்திலிருந்து, உலகின் பல்வேறு பகுதிகளில் வேலை நேரத்தை வரையறுக்க வற்புறுத்தி தொழிலாளர்கள் கோரிக்கை எழுப்பத் தொடங்கினர். இந்தியாவில் அத்தகைய குரல் முதன் முறையாக 1866ல் எழுந்தது. இதுவும் கடுமையாக அகற்றப்பட்டது.

புகழ்பெற்ற சிகாகோ தொழிலாளர்கள் வேலைநிறுத்த நடவடிக்கையில் தொழிலாளர்கள் கடுமையான ஒடுக்குமுறைக்கு ஆளாயினர்.

ஒடுக்குமுறை எவ்வளவு கடுமையானதென்றால், எட்டு தொழிற்சங்கத் தலைவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டனர்; அவர்கள் சிக்காகோவின் ஹே மார்க்கெட் சதுக்கத்தில் அமைதியான கூட்டத்தைத் தலைமையேற்று நடத்தியவர்கள். அமைதியாக கூட்டம் நடந்த இடத்தில், தொழிலாளர் இயக்கத்தை இழிபடுத்த விரும்பிய சதிகாரர்கள், ஒரு வெடிகுண்டை வெடிக்கச் செய்தனர். குற்றம் சாட்டப்பட்ட தொழிலாளர் தலைவர்களில் நால்வருக்குத் தூக்கு தண்டனை, விசாரணையின்போது ஒருவர் மரணம், மற்றும் மூவருக்கு ஆயுள் தண்டனை. கிளர்ச்சியின் செய்தி உலகெங்கும் பரவ, எல்லா இடையூறுகளையும் சந்தித்துத் தொழிற்சங்க இயக்கம் துரித கதியில் வளர்ந்தது.

### இந்தியாவில் முதல் வேலைநிறுத்தம்

இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இந்தியத் தொழிலாளர்கள் நடத்திய முதலாவது வேலைநிறுத்தம் 1827ல் நிகழ்ந்தது.

தொழிலாளர்களின் அப்போராட்டம் காலனியவாதிகளான ஆளும் வர்க்கங்களின் சுரண்டலுக்கு எதிராகப் பழங்குடி மக்களால் நடத்தப்பட்டது. காடுகளில் வசித்த அந்தப் பழங்குடி மக்களை அங்கிருந்து விரட்டிவிட்டு, காடுகளின் செல்வாதாரங்களைச் சுரண்டவும், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பல்வேறு கொடுமையான சட்டங்களின் மூலம் விவசாயிகளின் நிலங்களை அபகரிக்கவும் செய்த ஆளும் வர்க்கங்களை எதிர்த்து அவர்கள் போராடினர்; அப்போராட்டங்கள் அனைத்தும் நம் தாய் மண்ணின் மீதான அன்னிய ஆட்சிக்கு எதிரான அரசியல் எதிர்ப்புக்கான சூழலை ஏற்படுத்தின.

1857ன் கிளர்ச்சிகளை மார்க்ஸ் முதலாவது இந்தியச் சுதந்திரப் போர் என்று குறிப்பிடுவதன் பின்னணியில் இந்த அனைத்து அம்சங்களும் அவற்றிற்கே உரிய முக்கியத்துவத்துடன் திகழ்கின்றன. அடுத்த நான்கு ஆண்டுகளுக்குள் காலனிய ஆண்டைகளின் இச்சர்வாதிகாரம் தொழிலாளர் வர்க்கத்தை மீண்டும் உறுதிபட எழச் செய்தது; அதைத்தான் வரலாற்றுப் பக்கங்களில் 1861ல் கல்கத்தாவில் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டங்களாகப் பதிவு செய்தது, அப்போராட்டங்கள் பின்னர் நாட்டின் பல ஆலைப் பகுதிகளுக்கும் பரவியது.

### சங்கம் அமைத்தல்

1866ம் ஆண்டுகளில், பணிநேரத்தை வரையறுக்க வேண்டும் என்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கின. அதுவரை சங்கம் சேர்தல் என்பது, அந்த வார்த்தைக்குரிய முழு உணர்வுடன், தொடங்கிடவில்லை. அவையெல்லாம் சில நல்ல உள்ளம் படைத்த தலைவர்கள் முன்மொழிந்த நலவாழ்வு நடவடிக்கைகள் என்பன போன்றே இருந்தன; தொழிலாளர்களைச் சில நேரம் வகுப்பு அடிப்படையில், வெளியிலிருந்து அவர்களுக்குச் சில நிவாரணங்களைப் பெற்றுத் தர, அத்தலைவர்கள் திரட்டினர். 1870கள் தொடங்கி பிரிவு வாரியான அடிப்படையில் திரட்டப்பட்டு சங்கங்கள் அமைக்கப்படலாயின.

தொழிற்சங்கங்களின் பெருந்திரள் இயக்கம் நமது நாட்டின் விடுதலை இயக்கத்திற்கு வழிகாட்டு உதாரணங்களை ஏற்படுத்தின. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து, வரையறுக்கப்பட்ட வேலை நேரம், ஊதியம், பணியிடப் பாதுகாப்பு, நட்டஈடு மற்றும் சமூகப் பாதுகாப்பு எனப் போராட்டக் கோரிக்கைகள் கூர்மையாக வரையப்பட்டது. 1920, அக்டோபர் 31ல் ஏஐடியுசி பேரியக்கம் அமைப்பதற்கு முந்தைய நேரங்களின்போது நூற்றுக் கணக்கான வேலைநிறுத்தங்கள் நடைபெற்றன என வரலாற்றில் பதிவாகியுள்ளது.



### இந்தியாவில் முதல் மே தினமும் தொழிலாளர் நலச் சட்டங்களும்

இந்தியாவில் மே தினம் அனுசரிக்கப்படுவது ஏஐடியுசி சங்கங்கள் அமைக்கப்பட்ட பிறகே தொடங்கின; 1923ல் தமிழ்நாட்டில் சிங்கார வேலு அவர்களால் மே தினச் செங்கொடி முதன் முதலாக ஏற்றி வைக்கப்பட்டது, பிறகு மெல்ல இந்தியா முழுவதும் பரவியது.

நீண்ட போராட்டங்களுக்குப் பிறகு தொழிற்சங்கச் சட்டம் 1926, பிரகடனம் செய்யப்பட்டதுடன் தொழிலாளர் வர்க்கம் சட்ட பூர்வ அந்தஸ்தைப் பெற்றது; நட்டஈடு மற்றும் மெயின்டனஸ் சலுகை பெறும் உரிமையை 1923 சட்டத்தின் மூலம் பெற்றது; தொழிலாளர்கள் பலமுறை போராட்ட நடவடிக்கைகளில் இறங்கி தொழிற்சாலை சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வந்தனர்.

### புரட்சியாளர்கள்

தொழிலாளர்கள் சட்டங்கள் கொடூரமானது என்று கூறிய தொழிற் தகராறு சட்டம் உட்பட மூன்று சட்டங்களுக்கு எதிராகப் புரட்சியாளர்கள் பகத் சிங் மற்றும் பட்டுகேஷ்வர் தத் இருவரும் தேசிய அசம்பிளியில் துண்டறிக்கைகளை வீசி எறிந்த சரித்திரப் புகழ் பெற்ற நிகழ்வு அரங்கேறியது.

### விடுதலை இயக்கத்தில் பங்கேற்பு

தொழிலாளர் இயக்கம் தனது உரிமைகளுக்காக உறுதியுடன் போராடியதுடன், விடுதலை இயக்கத்திலும் பங்கேற்றது; இது இறுதியில் அதனை வெற்றிகரமாகத் தனது முதலாவது தேசிய மையத்தை ஏஐடியுசி என்ற பெயரில் 1920ல் அமைப்பதற்கு இட்டுச் சென்றது. ஏஐடியுசி அமைக்கப்பட்ட பிறகு, அதன் மேடையிலிருந்து ஒலித்த அறைகூவலை ஏற்று, ஒன்று திரட்டப்பட்ட ஓர் அமைப்பாக, ஏஐடியுசி பதாகையின் கீழ் தன்னெழுச்சியாக விடுதலை இயக்கத்தில் இன்னும் ஊக்கத்துடன் பங்கேற்றது. ஏஐடியுசியின் இரண்டாவது மாநாடு ஜாரியாவில் நடைபெற்றபோது "முழு சுதந்திரம்" கோரி தீர்மானம் நிறைவேற்றியது மட்டுமல்ல, விடுதலை இயக்கத்தின் அரசியல் தலைவர்களுடன் இணைந்து உறுதியுடன் பாடுபடவும் செய்தது.

### விடுதலைக்குப் பிறகு

விடுதலையை அடுத்து வந்த காலத்தில் தேசக் கட்டமைப்பிற்கான தனது பாத்திரத்தைத் தொழிலாளர் வர்க்கம் ஆற்றியது. தனது காலத்தைத் தாண்டிய நெடு நோக்கில் தனது பங்காகப் பொதுத்துறை நிறுவனங்கள் நிறுவப்படுவதைத் துரிதப்படுத்தி சாதித்தது.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலும், விடுதலைக்குப் பிறகும்கூட, தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்குத் தொடர்ச்சியான எதிர்ப்பு வலதுசாரி பிற்போக்குவாதிகளிடமிருந்து வருகிறது. அந்தச் சக்திகள் தொழிலாளர்களின் உரிமைகளை மட்டும் எதிர்க்கவில்லை, இந்திய நாட்டிற்கான சுய சார்பு பொருளாதார வளர்ச்சிப் பாதையையும்கூட எதிர்கிறார்கள்; ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு அடியிலும் தடங்கல்களை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். வரலாறு அவற்றிற்கெல்லாம் சாட்சியமாக இருக்கிறது.

### இன்றைய நிலையில் தொழிலாளி வர்க்கம்

இன்று நாம் எங்கே நிற்கிறோம்? சுயச்சார்பு பொருளாதார வளர்ச்சித் திட்டத்திற்கு நேர் எதிரிடையான, மேற்கத்திய முதலாளித்துவ ஆட்சிகள், குறிப்பாக அமெரிக்கா நடைமுறைபடுத்தும் சுதந்திரச் சந்தை பொருளாதாரத்தில் நம்பிக்கை கொண்ட அந்தச் சக்திகள், மத்தியில் நரேந்திர மோடி தலைமையில் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது நாம் எங்கே நிற்கிறோம்? முதலாளித்துவ வட்டம், அதிலும் அந்தக் கார்ப்பரேட் வட்டத்திற்குள்ளேயே சில நெருங்கிய கூட்டாளிகள் பயன்பெறவே இரவு பகலாகப் பணியாற்றிவரும் மோடி, உண்மையில் சர்வதேச நிதிமூலத்தின் நன்மைக்காகவே உழைத்து வருகிறார். அதன் விளைவுகள் நாம் அனைவரும் கண் எதிரே பார்க்கக்கூடியதாக உள்ளன. பொருளாதாரம் நொறுங்கிச் சிதலமடைந்துள்ளது; பணவீக்கம் கடந்த பத்தாண்டுகளின் உச்சபட்சமாகச் சமீபத்தில் 12 புள்ளிகள் மேலும் அதிகரித்துள்ளது; கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும் வேலையில்லா விகிதம் உயர்ந்து தற்போது சுமார் 12சதவீதமாகப் பதிவாகியிருப்பது இந்நாட்டின் இளைஞர்களை விரக்தி அடையச் செய்கிறது; 2006ல் 30 சதவீதமாக இருந்த உழைக்கும் பெண்களின் எண்ணிக்கை 2022ன் தொடக்கத்தில் 15 சதவீதமாகக் கடுமையாகச் சரிந்துள்ளது. பல நிறுவனங்கள் மூடப்பட்டு வருவதால் வேலை இழப்புத் தொடர்வது மட்டுமல்ல, புதிய தொழில் நுட்பமும் பல வேலைகளை விழுங்குகிறது. ஊரடங்கு விலகிக் கொள்ளப்பட்டு ஆலைகள் திறக்கப்படும்போது மீண்டும் பணியில் சேர்வதென்பது ஊதிய வெட்டு மற்றும் தொடர்புடைய சலுகைப் படிகளைக் குறைப்பது போன்ற கடுமையான நிபந்தனைகளுடன் வருகிறது.

அமைப்புரீதியாகத் திரண்ட சங்கங்களின் கீழ் தொழிலாளி வர்க்கத்திடமிருந்து வரும் எதிர்ப்புக்களைக் கட்டுப்படுத்தவும் எதிர்ப்போர் குரலை ஒடுக்கவும் தொழிலாளர் சட்டங்களில் சீர்திருத்தம் மற்றும் குறுங்குறியாக்கல் முதலியவற்றைத் தீவிரமாகப் பின்பற்றுகிறார்கள். திட்டமிட்ட நான்கில், மூன்று தொழிலாளர் குறுங்குறிகளை (லேபர் கோடு) நாடாளுமன்றத்தில் விவாதமில்லாமல், எதிர்க்கட்சியினர் முழுமையாக வெளிநடப்பு செய்தநிலையில் நிறைவேற்றினர்.

### ஒடுக்குமுறை சட்டங்கள்

அரசின் கொள்கைகளை எதிர்ப்பதைத் தேசத் துரோக நடவடிக்கை என முத்திரை குத்தி, அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு முகமைகள் மூலம் மக்களைத் துன்புறுத்துகின்றனர். எதிர்ப்போர் மீது பல வழக்குகளைத் தொடுத்து நீண்டகாலம் அவர்கள் சிறையில் வாடும்படி செய்ய தேசத் துரோகச் சட்டம், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் ஹிகிறிகி, மத்தியப் புலனாய்வு சிபிஐ, வருமான வரி இலாக்காவின் அமலாக்கத் துறை, தேசியப் பாதுகாப்புச் சட்டம் ழிஷிகி, மற்றும் தேசிய விசாரணை முகமை NIA போன்ற பல்வேறு முகமைகளைப் பயன்படுத்துகின்றனர்.

### மதவாதப் பிளவுபடுத்தல்

மறுபுறம், மத்தியிலும் மாநிலங்களிலும் ஆர்எஸ்எஸ் பாஜக தலைமையிலான ஆட்சிகளின் பல்வேறு அமைப்புகள் மற்றும் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளும் சுய அதிகாரக் கும்பல்கள் ஆட்சி அதிகாரத்தின் சகல பாதுகாப்புடன் தங்களின் மதவாதப் பிளவுபடுத்தல் நிகழ்ச்சி நிரலைத் தொடர்ந்து நிறைவேற்ற பல்வேறு வெறியூட்டும் முழக்கங்களை முன்வைத்து செயல்படுகின்றனர்.

### வெறுப்பு, கலகம் அதுவே தேர்தல் உத்தி

உத்தர்காண்ட் மாநிலத்தில் தரம் சன்சத் என்ற அமைப்பு முஸ்லீம்களை இனப் படுகொலை செய்ய வெளிப்படையாக விடுத்த அறைகூவல்களை மோடி கண்டிக்கவில்லை. அதுமட்டுமல்ல, மத்தியிலும் மாநிலங்களிலும் உள்ள அமைச்சர்கள் உள்ளிட்ட சில பாஜக சட்ட மன்ற உறுப்பினர்கள் இந்த மண்ணின் சட்டம் மற்றும் அரசியலமைப்பை மீறி ஆத்திரமூட்டும் வகுப்புவாத அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றனர்; ஆனால் பிரதமர், அவர்கள் நடவடிக்கைகளுக்குத் தனது தலையசைப்பு ஒப்புதல் உண்டு என்பது போல, மௌனம் காக்கிறார்.

சதிகள் மூலம் திட்டமிட்ட கலகங்கள் அரங்கேற்றப்பட்டு இப்போது புல்டோசர் இடிப்பு அரசியல் என்ற புதிய வடிவத்தில் ஏழை குடியிருப்புகளைக் குறி வைத்து இயல்பாக நகரத் தொடங்கியுள்ளது.

திட்டமிட்ட முறையில் நிகழ்ச்சி நிரல் அமைக்கப்பட்டு அதற்கேற்ப பிரச்சாரமும் திருமூர்த்திகளான பிரதமர், உபி முதல்வர் மற்றும் ஒன்றிய உள்துறை அமைச்சர் மூவராலும் எந்த வழியிலாவது உபி தேர்தல்களில் வெற்றி பெற முன்னெடுக்கப்பட்டது; எங்கெங்கும் எல்லா இடங்களிலும் சூழ்நிலையை விஷமாக்க அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் முக்கிய ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. காஷ்மீர் ஃபைல்ஸ் போன்ற படங்கள் வெளியிடப்பட்டது மட்டுமின்றி, அந்நிகழ்ச்சி நிரலைத் தொடர அதற்கு வரி விலக்கும் அளித்தனர்; அதன் மூலம் கூடுதல் மக்களைப் பார்க்கச் செய்து, விஷமத்தனமான பிளவுபடுத்தலை மக்கள் மத்தியில் கொண்டு சேர்த்து அடுத்த சுற்று மாநிலத் தேர்தல்களை வெல்வதே அவர்களின் மதவாத உத்தி. 2024 பொதுத் தேர்தல்களிலும் வெற்றி பெறவே அவர்கள் அந்த விஷத்தைப் பரப்புகிறார்கள்.

### தொழிலாளர் வர்க்கத்தின் கடமை

இத்தகு சவால்மிகுந்த நேரங்களில் தொழிலாளர் வர்க்கத்தின் முன் பிரம்மாண்டமான பணி காத்திருக்கிறது. தேசத்தின் நன்மைக்காக, நமது இயற்கை செல்வாதாரங்களையும், தேசியச் சொத்துக்களையும் பாதுகாக்க, தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாக்க, நமது மக்களின் இணக்கமான வாழ்வைப் பாதுகாத்து, வெறுப்பு நிகழ்ச்சிநிரலை நிராகரிக்கச் சாத்தியமான அதிகபட்ச பரந்த ஒற்றுமையைத் தொடர்ந்து உறுதியாகக் கட்ட வேண்டும்.

இத்தகைய பின்னணியில் 2022 மே தினம் தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்களின் தோள்களின் மீது பெரும் பொறுப்புக்களைச் சுமத்தியுள்ளது. ஓய்ந்திருக்க நேரமில்லை. பெருந்திரள் மக்களின் விருப்பம் மற்றும் அவர்களின் ஒன்றுபட்டச் செயல்பாடுகளின் மூலம் சர்வாதிகாரிகள் ஒடுக்கப்பட்டு தோற்கடிக்கப்படும் வரையில், முன்னே முன்னே முன்னோக்கிய நமது பயணம் தொடர வேண்டும்.

இப்படை வெல்லும் எனச் செங்கொடி உயர்த்தி முழங்குவோம்!

நன்றி: நியூ ஏஜ், தமிழில்: **நீலகண்டன்,**

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
Day of Publication: Every Thursday WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 07.05.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## செப்டம்பர் 2-க்குள் அனைத்து மாநிலங்களிலும் தலித் உரிமைகள் இயக்கத்தை கட்ட

# தேசிய குழு அழைப்பு




சென்னை: வியாசர்பாடி மகராஜா திருமண மண்டபத்தில், தலித் உரிமைகள் இயக்கம் தேசிய குழு கூட்டம் ஏப்ரல் 29, 30 நடைபெற்றது. அகில இந்தியத் தலைவர் அ.ராமமூர்த்தி தலைமை வகித்தார். அமைப்பின் கொடியை சிபிஐ அகில இந்தியப் பொதுச்செயலாளர் து.ராஜா ஏற்றி வைத்தார். தியாகச்சுடரை த.ஒ.வா.இ. மாநில தலைவர் இரா.நல்லகண்ணு பெற்றுக் கொண்டார். தலைவர்களின் படங்களை நாகேந்திரநாத் ஓசா, இரா.முத்தரசன், சி.எச்.வெங்கடாசலம், நா.பெரியசாமி, வி.எஸ். நிர்மல் ஆகியோர் திறந்து வைத்தனர். முன்னதாக த.ஒ.வா.இ. மாவட்ட செயலாளர் ஜி.சுப்பிரமணி வரவேற்றார். சாத்தூர் சு.பழனிக்குமார், காஞ்சி ராமச்சந்திரன், நெல்லை முருகானந்தம், என்.எஸ்.பிரதாப்சந்திரன், தேனி செல்வம் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். பொதுச்செயலாளர் வி.எஸ். நிர்மல் வேலை அறிக்கை சமர்ப்பித்துப் பேசினார். தேசிய துணைத்தலைவர் நாகேந்திர ஓசா எதிர்கால திட்டங்கள் குறித்து பேசினார். விவாதத்தில் தேசிய குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு பேசினர். தமிழகத்திலிருந்து மு.வீரபாண்டியன், பொ.லிங்கம் எக்ஸ்.எம்.பி., கீ.சு.குமார், எஸ்.கே.சிவா, கிருஷ்ணன் ஆகியோர் விவாதத்தில் பங்கேற்றனர்.

தோழர்கள் லி.உதயகுமார், அசரப் அலி, சுகுமார், லதா எக்ஸ்.எம்.எல்.ஏ., செண்பகம் ஆகியோர் தேசியக்குழுவிற்கு அழைப்பாளர்களாக தேர்வு செய்யப்பட்டனர்.

செப்டம்பர் 2ந் தேதிக்குள் அனைத்து மாநிலங்களிலும் அமைப்புகளை கட்டுவது, அந்தந்த மாநிலங்களில் உள்ள தலித் பிரச்சினைகளை ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்வது, அறிக்கைகளை குடியரசுத் தலைவர், பிரதமர், மாநில முதல்வர்கள், ஆளுநர்கள், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களிடம் வழங்குவது என முடிவு செய்யப்பட்டது.

# சொல்லப்படாத குறவர் சமூகத்தின் உண்மைகள்

### “ஆவணப்படம் திரையிடல்” மற்றும் ஆய்வறிக்கை வெளியீட்டு விழா

ஆவணப்படமும், ஆய்வறிக்கை வெளியிடல் நிகழ்வானது மதுரையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், தமிழ்நாட்டில் 27 சொல்லப்படாத குறவர் சமூகத்தின் ஆவணப்படத்தை துணை மேயர், மதுரை மாநகராட்சி நாகராஜன் திறந்து வைத்து கருத்துரையாற்றினார். குறவர் இன மக்கள் மீது நடத்தப்படும் மனித உரிமை மீறல் குறித்து ஆய்வறிக்கையை இந்திய மாதர் தேசிய சம்மேளனம் அகில இந்திய பொதுசெயலாளர் ஆணிராஜா வெளியிட்டு கருத்துரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில், கல்வியாளர், நிர்வாக இயக்குனர், சிடார் நிறுவனம் மற்றும் முன்னாள் முதல்வர், அமெரிக்கன் கல்லூரி சின்னராசு, சோசப், ஜெயக்குமார், செயலர் ஹர்சிதா காந்தி, தலைவர், தேசிய குறிஞ்சியர் சமூக நீதிப்பேரவை டாக்டர் கேப்டன் துரை, வழக்கறிஞர், மாநில தலைவர், சமம் குடிமக்கள் இயக்கம், மதுரை சி .ஜே .இராசன், இயக்குனர், மனிதம் அறக்கட்டளை நிறுவனர் பி.எஸ். வனராஜன் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியின் நோக்கவுரை குறித்து செயல் இயக்குனர் ஜெயசுதா உரையாற்றினார். வழக்கறிஞர் அ.நாகேந்திரன் நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றியுரை வழங்கினார்.




# இந்திய – ரஷ்ய நட்புறவின் 75-வது ஆண்டுவிழா




சென்னை, பெசன்ட்நகர் கடற்கரைச் சாலையில் ஏப்.30 அன்று இந்திய–ரஷ்ய நட்புறவு 75ஆண்டு காலம் தொடர்வதன் பெருமையையும், வலிமையையும் நினைவு படுத்தும் வகையில் இரு நாட்டு தேசியக் கொடிகளையும் உயர்த்திப் பிடித்த படி அரை கிலோ மீட்டர் தூரம் அமைதியான முறையில் ஊர்வலமாகச் சென்று ஆரம்பித்த இடத்திற்கே வந்து நின்று உலக சமாதானம், அமைதி, நாடுகளின் நட்புறவு குறித்துப் பேசி கலைந்தனர்.

உலக அமைதி நிலவ வேண்டுமென்றால் மனித உறவு மேம்பட வேண்டும். மனித உறவு மேம்பட வேண்டுமென்றால் நட்புறவு, கலாச்சாரம், பண்பாடு இவற்றின் புரிதல் அவசியம் என்பதனையுணர்ந்த இந்திய கலாச்சார நட்புறவுக் கழகம் சார்பாக இந்நிகழ்ச்சியில் மாநில துணைத்தலைவர் மூத்த வழக்கறிஞர் க. தேசிங், தேசிய துணச்செயலாளர் எஸ்.பாஸ்கரன், தேசியகுழு உறுப்பினர் க. தமிழ்மது, மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஏ.ஆர்.தாஸ், ஆர்.ராசவேலு, டாக்டர். சித்தார்த், சரோஜா, மதன், யுசிபிஐ ராணா, முற்போக்கு கலை இலக்கிய மேடை விசாகன் இவர்களுடன் சென்னை மாவட்டப் பொது செயலாளர் பா.செந்தில்குமாரும் கலந்து கொண்டனர்.

இந்திய கலாச்சார நட்புறவுக் கழகமானது தற்சமயம் 8 நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து நல்லுறவு பயணங்களை மேற்கொண்டு கலாச்சார, பண்பாடு, ஒற்றுமை சம்பந்தமான உறவுகளை மேம்படுத்தும் பணிக்கான பயணத்தைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறது.

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.